மகா மதுரகவிஞர்

வீ. வே. முருகேச பாகவதர் படைப்புகள் - I (தொகுதி - 1)

பதிப்பாசிரியர்

பேரா.க.ஜெயபாலன்

இந்நூல் தமிழ்நாடு அரசின் தமிழ்வளர்ச்சித்துறையின் நிதிஉதவிபெற்று வெளியிடப்பெற்றது.

மகாமதுர கவிஞர்

வீ.வே. முருகேசபாகவதர் படைப்புகள்

தொகுதி - I

பதிப்பாசிரியர்

பேராசிரியர் முனைவர் க. ஜெயபாலன்

தமிழ்த்துறை

அரசினர் ஆடவர் கலைக்கல்லூரி (தன்னாட்சி)

நந்தனம், சென்னை - 600025

செல்பேசி: 9003056091

நிலாசூரியன் பதிப்பகம்

27/2, தெற்குச் சிவன்கோயில் தெரு,

கோடம்பாக்கம், சென்னை - 600 024

செல்: 9444473553, 9444143686

மகாமதுர கவிஞர்

வீ.வே. முருகேசபாகவதர் படைப்புகள் தொகுதி - I

பதிப்பாசிரியர் : பேராசிரியர் முனைவர் க. ஜெயபாலன்

இத்தொகுப்பிலுள்ள குறுநூல்களின்
முதற்பதிப்பு விவரம் 1931, 1932, 1934, 1946

மறுபதிப்பு : 2014

நூலாக்க விவரம் : டெம்மி 1/8
என்.எஸ். மேப்லித்தோ
சாதா கட்டு, 12 புள்ளி எழுத்துகள்
பக்கங்கள் 176

படிகள் 1200

வெளியீடு : நிலாசூரியன் பதிப்பகம்
27/2, தெற்குச் சிவன்கோயில் தெரு,
கோடம்பாக்கம், சென்னை - 600 024
செல்:9444473553, 9444143686

வடிவமைப்பு திருமதி பேபி இராசேந்திரன்

விலை ரூ.130/-

இந்நூல் தமிழ்நாடு அரசு தமிழ்வளர்ச்சித்துறையின்
நிதிஉதவிபெற்று வெளியிடப்பெற்றது.

மற(றை)க்கப்பட்ட நூல்களும் மறுபதிப்பும்

பேரா. முனைவர் க.ஜெயபாலன்

மகாமதுரகவிஞர் வீ.வே. முருகேச பாகவதர் படைப்புகள் முதல் தொகுதி இது. இந்நூலில் 1931 முதல் 1946 வரையிலான 16 ஆண்டு களில் அவர் எழுதிய நான்கு நூல்களின் தொகுப்பு இது. அந்த நான்கு நூல்கள் பின்வருமாறு:

1. ஆதிதிராவிடர் சமூக சீர்திருத்த கீதங்கள் - 1931
2. மதுவிலக்குக் கீர்த்தனம் - 1932
3. அறிவானந்த கீதம் 1934
4. தமிழ்ச்சோலை - 1946

என் கைகளுக்குக் கிடைத்தவற்றுள் காலத்தால் முந்தியவை களாக அறியப்பட்ட மேற்கண்ட நூல்களை முதல் தொகுதியாக இங்கு அளிக் கிறேன். இன்னும் மகாமதுர கவிஞரின் நூல்கள் கிடைக்க கிடைக்க அடுத்தடுத்த தொகுதிகளாகக் கொண்டு வரத் திட்டம் உள்ளது.

21.10.1897 முதல் 21.10.1974 வரை வாழ்ந்த மகாமதுர கவிஞரின் வாழ்வும் பணியும் வியந்து பேசத்தக்க, படிக்கத்தக்க, பின்பற்றத்தக்க, வருங்கால உலகுக்கு முன்மொழியத் தக்க பல பண்புகளைக் கொண்டுள்ளன. எனவே தான் மகாமதுர கவிஞரின் பணிகளை, புலமையை ஏற்கனவே பல அறிஞர்களும் ஆய்வாளர் களும் கண்டறிந்து ஏற்றிப் போற்றியுள்ளனர். நானும் "எழுச்சி" மாத இதழுக்குத் தொடர்ந்து கட்டுரைகள் எழுதவேண்டிய அன்பின் நிர்ப்பந்தத்தால் பல அரிய, புகழ் பெற்ற ஆளுமைகளைத் தேடி நின்றபோது மகாமதுர கவிஞரைக் கண்டடையும் நிலை வந்தது. அக்டோபர் 2009 "எழுச்சி" இதழில் "மறக்க முடியாத மதுர கவிஞர்" என்ற தலைப்பில் இவரைப் பற்றி எழுதினேன். பலரும் படித்து விட்டுப் பாராட்டினர். பின்னர் என் மகள் ஜனனிபிரியாவின் முதலாமாண்டு பிறந்தநாளில் 28.09.2010ல் "மகாமதுர கவிஞர் வீ.வே.முருகேச பாகவதர் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பாடல் களும் சில கவிதைகளும்" என்ற நூலை பூங்குயில் பதிப்பக வெளியீடாகக் நானும் சிவக்குமாரும் கொண்டு வந்தோம். அவ்வெளியீட்டு விழாவில் பேரா.கரு. அழ.குணசேகரன், கவிஞர் அருள்நம்பி, பேரா. அம்பேத்கர்

பிரியன், புலவர் வெற்றி வேந்தன், அன்பு பொன்னோவியம் மகன் ஆதி மன்னன், தோழர் யாக்கன் உள்ளிட்டப் பலரும் கலந்து கொண்டனர்.

பிறகு என்னுடைய, பேராசிரியப் பணியினூடாகவே ஆய்வுப் பணிகளும் பலவகையில் வளர்ந்து வந்தன. இத்தகு நிலையில் சில முக்கிய மான பேராசிரிய அன்பர்கள், ஆய்வாளர்கள் மகாமதுர கவிஞர் படைப்பு களை முழுதும் வெளிக்கொணர வேண்டும் என்று ஊக்குவித்தனர். அவ்வூக்கங்களின் விளைவாகவே இந்நூலின் வெளியீடு வந்துள்ளது.

1990களுக்குப் பிந்தைய அறிவுலக எழுச்சி

1990களுக்குப் பிந்தையச் சூழலில் இந்தியா முழுதும் ஒரு புத்துணர்ச்சி பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கரின் நூற்றாண்டை ஒட்டி உருவானது. அவரின் பேச்சும் எழுத்தும் இந்திய மொழிகளில் எல்லாம் மொழி பெயர்க்கப் பட்டன. இதனால் ஏற்பட்ட புத்துணர்வால் டாக்டர் அம்பேத்கரின் சமகாலத்திலும் அவருக்கு முன்னும் பின்னுமான சிந்தனையாளர்களின் படைப்புகளும் தேடித் தேடிப் பதிப்பிக்கப்பட்டன.

பண்டித அயோத்திதாசரின் படைப்புகள் - மறுபதிப்பு

இவ்வகையான அறிவுத் தேடலின் நீட்சியில் தான் பண்டித அயோத்திதாசன் எழுத்துக்கள் மறுபதிப்பு கண்டன. பரவலான ஈர்ப்பும் விமர்சனமும் போற்றுதல்களும் எழுந்தன; வருகின்றன. இத்தகு மகத்தான பணியில் இவ்வாறு கண்டெடுக்கப்பட்ட வேண்டியோர் நிறைய உள்ளனர். பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலர், பேரா. லட்சுமிநரசு, உள்ளிட்டப் பெரும் படைப்பாளிகள் பலரும் ஏற்கனவே தமிழுலகில் படிக்கப் பட்டாலும் பண்டித அயோத்திதாசரின் மீள் எழுச்சிக்குப் பின்னர் இவர்களின் எழுத்துக்கள் இன்னும் கவனமாகப் படிக்கப்பட்டு ஆராய்ச்சி செய்யப்படுகின்றன. அடித்தள மக்கள் எழுச்சி மட்டுமே அனைத்துத் தள மறுமலர்ச்சிக்கும் வித்திடும் என்பதன் விளக்கமாகவே இந்நிகழ்வுகள் விளங்குகின்றன.

இந்த மகத்தான, நிகழ்வுகளுக்கு வித்திட்ட அன்பு பொன்னோவியம், மெயில் முனுசாமி, டி.பி.கமலநாதன், பேரா. ஞான. அலாய்சியஸ், பேரா. கோ.தங்கவேலு, பேரா.எஸ். பெருமாள், பேரா.அம்பேத்கர் பிரியன், கவிஞர் தமிழ்மறையான் உள்ளிட்ட பல அறிஞர்கள் போற்றுதலுக் குரியவர்கள்.

பண்டித அயோத்திதாசர் மரபில் மறுபதிப்புக் காண வேண்டியோர்

பண்டித அயோத்திதாசரின் எழுத்துக்களைப் போலவே அவருக்குப் பின்னர் "தமிழன்" இதழைத் தொடர்ந்து நடத்திய

ஜி.அப்பாத்துரையார், பௌத்தப் பெரும்புலவர்கள் இ.நா.அய்யாக் கண்ணுப் புலவர், ஏ.பி.பெரியசாமிப் புலவர் என்றனைய பல பெரும் படைப்பாளிகள், கலைஞர்கள் ஆராயப்பட வேண்டியவர்களாக, மறுபதிப்புச் செய்யப்பட வேண்டியவர்களாக உள்ளனர். இத்தகு மரபின் ஒரு படைப்பாளியே மகாமதுர கவிஞர் வீ.வே. முருகேச பாகவதர் ஆவார்.

பகுத்தறிவு மரபுப் பாவலர்

சாங்கு சித்த சிவலிங்க நாயனார், (இவரின் நூலைப் பேரா. இராமகிருஷ்ணன் மறுபதிப்புச் செய்துள்ளார்), ஓம்பிரகாச சுவாமிகள், சுவாமி சகஜானந்தா உள்ளிட்டப் பெரும் துறவிகள் அடித்தளச் சமூகங்களில் இருந்து தோன்றி சைவ மரபைப் போற்றி, அதைப் புதுப்பித்து சாதிஒழிப்பை, சமத்துவத்தைத் தேடினர்.

ராவ் சாஹிப் எம்.சி. மதுரைப் பிள்ளை போன்றவர்கள் தங்க வயலிலும் (நம்பெருமாள் பள்ளி -கே.ஜி.எஃப்) ஸ்ரீபெரும் புதூரி லும் வைணவத்திற்காகப் பல பெரும் செலவு செய்து அறப் பணி யாற்றினர். மேனாள் அமைச்சர்கள் ஜோதி வெங்கடாசலம், மரகதம் சந்திரசேகர் உள்ளிட்டோரும் வைணவ மரபிலேயே இருந்தனர்.

பண்டித அயோத்திதாசர், பண்டிதர் ஜி.அப்பாத்துரையார் (இவரின் "புத்தர் அருள் அறம்" பேரா. ஸ்டாலின் ராஜாங்கம் மூலம் மறுபதிப்பு கண்டுள்ளது) உள்ளிட்டோர் பௌத்த மரபைப் போற்றினர்.

மகாமதுர கவிஞர் வீ.வே.முருகேச பாகவதரோ எம்மரபுக் குள்ளும் ஆட்படாமல் பெரியார் ஈ.வெ.ரா. தன்மையில் கடவுள் மறுப்பாளராக, சுயமரியாதை வீரராக, வள்ளலாரின் பான்மையில் சன்மார்க்கியாக விளங்கினார் எனலாம். மேலும் "அட்டவணைச் சாதியினர் கூட்டமைப்பின் மாநாடுகளில் (செடியூல்டு காஸ்ட் பெடரேஷன்) எல்லாம் ஒலிக்கக் கூடிய ஒப்பற்றப் பாடகர்களாக முருகேச பாகவதரும் ராணிப்பேட்டை பங்காருப் பாவலரும் விளங்கினர்" என்று மேனாள் மிசோராம் மாநில ஆளுநர் டாக்டர் ஆ.பத்மநாபன் குறிப்பிடுவார். இத்தகு தன்மையில் உருவான முருகேச பாகவதரின் படைப்பும் வாழ்வும் தமிழ்ச் சமூகத்தின் அரசியலோடும் வாழ்வோடும் பின்னிப் பிணைந்துள்ளது.

1. ஆதிதிராவிட இயக்கங்களின் வீறுகொண்ட பயணம்

கடந்த 200 ஆண்டுகளாக ஆதிதிராவிட இயக்கங்கள் நடத்திய சமூக, அரசியல், சமயப் போராட்ட வரலாறு தமிழ்நாட்டோடு மட்டு மின்றி இந்திய அளவில் விரிந்து பரந்து வரும் இயக்க வரலாறு ஆகும். ஆயினும் இவை இன்னும் சரிவரப் பதியப்படவில்லை. அத்தகு

விருமிக்கப் போராட்டத்தின் இலக்கிய முகமாக முருகேச பாகவதரைக் காணமுடியும்.

2. திராவிட இயக்கங்களின் பயணத்தோடு மதுர கவிஞர்

கடவுள் மறுப்பு, பிராமணிய எதிர்ப்பு, வடக்கத்திய எதிர்ப்பு, திராவிட இன எழுச்சி என்று எழுந்து வந்த விடுதலைக் கூறு களோடும் மதுரகவிஞர் தன்னை இணைத்துக் கொண்டதை அவரின் பாடல்கள் மிகத் தெளிவாகக் காட்டுகின்றன. அதேநேரம் அடித்தள மக்களின் விடுதலையை விட்டு வெறும் அரசியல் ஆரவாரம் இவரிடம் காணுதல் இயலாது. இப்போக்குத்தான் முருகேச பாகவதரின் நிகழ்காலத் தேவையை மிகவும் வலியுறுத்துகின்றது.

3. காங்கிரஸ் இயக்கம்

19ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே தோன்றிய காங்கிரஸ் இயக்கம் பற்றி பண்டித அயோத்தி தாசர் தீர்க்கமான முடிவுகளை முன்வைத்தார். இந்த இயக்கத்தால் எவ்வித சமூகப் பெருமாற்றமும் எழ வாய்ப்பில்லை என்றார். பின்னாளில் திவான் பகதூர், இரட்டை மலை சீனிவாசனார், பெரியார் ஈ.வெ.ரா. ராவ்பகதூர் எம்.சி. ராசா, தந்தை என்.சிவராஜ் உள்ளிட்டோரும் பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கரும் இதே கருத்தையே கொண்டனர். ஆனாலும் இவ்வியக்கம் முன்னெடுத்த மதுவிலக்கு உள்ளிட்டவை களோடு ஒன்றிணைந்து மிக ஆழமாக குமரப்பா, காமராசர், கக்கன், பக்தவத்சலம் உள்ளிட்டத் தமிழகக் காங்கிரஸ் தலைவர்களோடும் இணைந்து முருகேச பாகவதர் இயங்கினார்.

ஈழத்தமிழர் இன்னல்களும் இந்திய (தமிழக) மீனவர் பிரச்சனையும் 2009இல் மிகக் கூர்மையாகி காங்கிரஸ் இயக்கம் மீது கடும் கோபத்தைத் தமிழகம் கொண்டுள்ள சூழலில் கவனமாக மேற்கண்ட செய்திகளை, காலப் பின்புலத்தோடு காணவேண்டும்.

4. பொதுவுடைமை இயக்கம்

பொதுவுடைமை இயக்கம் சார்ந்தும், உழைப்பாளிகள், தொழிலாளர்கள் விடுதலை குறித்தும் இவர் ஆழமாக எழுதியுள்ளார். ஏ.எஸ்.கே. அய்யங்கார் உள்ளிட்ட பொதுவுடைமை இயக்க அறிஞர்கள் மகாமதுர கவிஞர் மீது பெரும் பாராட்டுரையை நல்கியது வெறும் புகழுரை அல்ல. விவசாயிகளாக, உழைப்பாளர்களாக, தொழிலாளர் களாக உள்ள எளிய மக்கள் வாழ்வை கவிஞர் தமிழ்ஒளி, பட்டுக் கோட்டைக் கல்யாணசுந்தரம் உள்ளிட்டோர் மிக ஆழமாகப் பாட்டி சைக்கும் முன்னேயே முருகேச பாகவதர், தோழர் ப.ஜீவானந்தம் உள்ளிட்டோர் சிறப்பாகப் பாடியமை ஆழ்ந்து காணத்தக்கது.

இவ்வாறு இருபதாம் நூற்றாண்டின் நான்கு முக்கியமான இயக்கப் பின்புலங்களோடும் ஆராய்ந்து காணத் தக்கப் பாவலர் இவர். மேலும் தமிழ்த் தேசிய இயக்கப் பார்வையிலும் காணலாம்.

உலகமெங்கும் பரந்தும் தொழில்நுட்பத்தால் மிக வளர்ந்தும் இன்றைய தமிழிலக்கியம் வெளிப்படுகிறது. இன்றைய சூழலிலும் மிகத் தேவையாக இக்கவிஞர் உள்ளார் என்பதை நிகழ்காலச் சம்பவங்கள் நிறையவே கோடிட்டுக் காட்டுகின்றன.

வெறுமனே இலக்கியப் படைப்பல்ல சமூக வரலாற்று ஆவணம்

மகாமதுர கவிஞரின் எழுத்துக்கள் வெறுமனே இலக்கியப் படைப்பு மட்டுமல்ல. சமகால தமிழ்ச்சமூக வரரலாற்றை ஒருபுறமும் இவர் படைப்புகளை மறுபுறமும் வைத்துப் பார்த்தால் அப்படியே சமூக விடுதலை வரலாற்றின் இலக்கியப் பதிவாக இவர் படைப்புகளைக் காணமுடியும். பிரெஞ்சுப் புரட்சி, ரஷ்யப் புரட்சி, சீனப்புரட்சி, அமெரிக்க கறுப்பர் இனவிடுதலைப் புரட்சி, ஆகிய உலகப் புரட்சிகளோடு ஒப்பிடத்தக்கப் புரட்சி இந்தியாவில் 20ஆம் நூற்றாண்டில் நடந்த தீண்டாமை, சாதிஒழிப்புப் புரட்சி ஆகும். இந்த மகத்தான புரட்சியின் ஒரே நாயகர் உலகப் பேரறிஞர் டாக்டர் அம்பேத்கர் என்றால் மிகையில்லை. அண்ணல் காந்தியார், பெரியார் ஈ.வெ.ரா. உள்ளிட்ட ஏராளமான தலைவர்களும் இப்போராட்டத்திற்குப் பெரும் பங்காற்றினர். இவ்வாறான தீண்டாமை, சாதிஒழிப்புப் போராட்ட வரலாற்றின் இலக்கியப் பதிவாக முருகேச பாகவதரைக் காணுதல் வேண்டும்.

1938இலிருந்து 1965 வரை நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் இலக்கியப் பதிவுகளும் 1980 முதல் இன்றுவரை நடந்துவரும் இலங்கைத் தமிழர் விடுதலைப் போராட்ட விடுதலை இலக்கியப் பதிவுகளும் எந்தளவுக்குப் பெருமை மிக்கதோ, வரலாற்றுத் தேவை உடையதோ அதே அளவுக்கு மிகத் தேவை உடையது சாதி எதிர்ப்புப் போராட்ட இலக்கிய வரலாறு ஆகும்.

இந்நூல் வெளிவரப் பெரிதும் ஒத்துழைத்த தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் கா.மு.சேகர் அவர்களின் ஈடுபாடு பாராட்டத்தக்கதாகும். மேலும் நூலை வெளியிடும் பேரா. முனைவர் கெ. இரவி என்னுடைய "பண்பாட்டுப் புரட்சியில் பௌத்தம்" நூலை ஏற்கனவே வெளியிட்டவர். அவரின் "நிலாசூரியன் பதிப்பகம்" ஆக்கப்பூர்வமான நூல்களை வெளியிட்டு வருகிறது என்பது இத்தொகுப்பை வாசிக்கும் வாசகர்கள் எளிதில் உணரலாம்.

நான் எனது முனைவர் பட்டஆய்வை முடித்து எட்டாண்டுகள் ஆகியும் அதைக் கூட நூலாக்கத் துடித்ததில்லை. மகத்தான முன்னோடி

களின் எழுத்துக்களைக் காணும்போது அவை மீண்டும் நூலாக வேண்டும் என்றுதான் தவித்திருக்கிறேன்.

மதுரகவிஞர் பற்றிய நூலை வெளியிடத் தொடர்ந்து ஆதரவும் தருகின்ற அன்புச்சகோதரி பேரா. மு.சு. புனிதவதி அம்மையார், இந்நூலின் பிற்பகுதியை 'மதுரகவிஞரோடு நான்' என்று அனுபவப் பதிவை அளித்த கவிஞர் க. வெற்றிவேந்தன் மற்றும் எரிமலை இரத்தினம், பிக்கு மௌரியாமெத்தபால், புலவர்கள் தமிழ்மறையான், வே. பிரபாகரன் உள்ளிட்டவர்களுக்கும் இத்தருணத்தில் நன்றி.

பேரா. து. பார்த்திபன், பேரா.பெ. விஜயகுமார், பேரா. சு. அமரேசன், து. ராமையன் உள்ளிட்டோர் எப்போதும் என் அழைப் புக்குச் செவிசாய்த்து உதவிகள் புரிகின்றனர். இவர்களுக்கும் நன்றி.

நல்ல உடலும் மனமும் வாழ்வும் காலம் தரவேண்டும். "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற அப்பரின் வாக்கும் "உனக்கு நீயே ஒளியாயிரு" என்ற புத்தரின் வாக்கும் எப்போதும் புத்துணர்ச்சியை ஊட்டுகின்றன.

பவது ஸப்ப மங்களம்! எல்லா உயிர்களும் இன்புற்றிருக்கட்டும்!!

நாள்: 01-04-2013 — சாதனைகளில் சந்திப்போம்
இடம்: சென்னை-15 — (க. ஜெயபாலன்)

பதிப்புரை

தாழ்த்தப்பட்டோர் விடுதலைக்காகக் குரல்கொடுத்தவர்களில் அண்ணல் அம்பேத்கார் போன்று மகாமதுரகவி வீ.வே. முருகேச பாகவதர் பகுத்தறிவுடன் சமூகத்தை ஆய்ந்து, பாடல்களைப் பாடி விழிப்புணர்வு ஏற்படுத்தியுள்ளார். இவர் கடவுள் இருக்கும் இடம் எது என்பதைக் கூறும்போது, வண்டியிழுப்பவன் உடம்பின் வேர்வைநீரில் / வயலினில் மாடாயுழைப்போன் பார்வை தன்னில் / நொண்டி முடவன் குருடன் பிச்சை ஏற்போன் / நோயாளி ஊமையவன் முகத்திலும் / நீர் மொண் டேற்றம் இறைப்பவன்றன் களைப்பு தன்னில் / மூட்டை சுமந்தேகுபவன் மூச்சு தன்னில் / கண்டுமலைக் கல்லுடைப்போன் சோகந்தன்னில் / காண்பதெனிற் கடவுளையுங் காணலாமே என்கிறார்.

திராவிடம் தொடங்கி, செந்தமிழ்நாடு, தமிழ்ப்பற்று, ஜாதிக் கொடுமை, தீண்டாமையைக் களையவழி, மதுவிலக்கு, சுகாதாரம், பெண்களின் துயரம், கைம்பெண், பெண்விடுதலை, வாலிபர்களுக்கு விழிப்புணர்வு, இளைஞர்களை வழிநடத்தல், உழைப்பின் முக்கியத்துவம், குழந்தை வளர்ப்பு, விடுதலைக்குறித்த விழிப்புணர்வு பாடல்கள், ஜோதிட மறுப்பு, மோட்சம் நரகம் பற்றிய பாடல்கள், திருவள்ளுவரைப் போற்றல், போன்ற பல்துறைசார்ந்த, அறிவுக்கு உகந்த, அரிய பெரிய கருத்துகள் பொதிந்த பாடல்களை, எல்லோரும் அறிந்த மெட்டுக்களில் பாடியுள்ளார். மேலும், பலரும்கேட்டு மனதில் பதிந்த பக்திப்பாடல்களின் வடிவில் இயற்றி அருளியுள்ளார்.

எம்.சி.ராஜா எம்.எல்.ஏ.வாக இருந்த காலத்திலேயே அவரது நட்பையும் மதிப்பையும் பெற்றுள்ளார். அவரிடம் தமது பாடல்களுக்கு முகவுரையும் பெற்றுள்ளார். பெண் அறிஞர்களிடம் மதிப்பும் அவர் களைப் போற்றும் உயர்ந்த எண்ணமும் இவரது நூல்களில் இடம் பெறுகின்றன. பேரறிஞர் அண்ணா அவர்கள் வீ.வே. முருகேசபாகவதரைப் பற்றி, "சமுதாய சீர்திருத்த துறையில் நீண்ட நாட்களாக உழைத்து வரும் என் நண்பர் தோழர் வீ.வே. முருகே சபாகவதர் அவர்கள் சிறந்த தமிழ்ப்பற்றும், புலமையும் கொண்டவர். அரியபெரிய கருத்துக்களை, எளிய இனிய முறையில் நாட்டு மக்களுக்கு எடுத்துரைத்து மக்கள்நல்

வாழ்க்கைப் பெறுவதற்காகப் பெருமுயற்சி எடுத்துக் கொள்ளும் பண்புடையவர்" என்று கூறுகிறார். இது மாபெரும் உண்மை. இதனை இந்தத் தொகுதி முழுவதும் படித்துணர்ந்தால் நன்கு புலனாகும்.

வீ.வே. முருகேசபாகவதர் படைப்புகள் தொகுதி-1 என்ற இந்நூல் ஆதிதிராவிடர் சீர்திருத்த கீதங்கள் (1931), மதுவிலக்குக் கீர்த்தனம் (1932), அறிவானந்தகீதம் (1934), தமிழ்ச்சோலை (1946) எனும் நான்கு குறுநூல்களின் தொகுப்பாகும். இந்தத் தொகுதியிலுள்ள குறுநூல்களைத் தேடிக் கண்டுபிடித்து அவற்றை நூலாக்க வேண்டும் என்ற பேரவாவைக் கொண்ட பேராசிரியர் முனைவர் க. ஜெயபாலன் அவர்களின் பணி பாராட்டுக்குரியது. இவர் தொடர்ந்து அண்ணல் அம்பேத்கரின் வழியில் இயங்கக் கூடியவர். பௌத்தம் தொடர்பாகத் தொடர்ந்து பேசியும் பல்வேறு நூல்களை எழுதியும் வருகிறார். அவர் தொகுத்த இந்த நூலை நிலாசூரியன் பதிப்பகத்தின் வாயிலாக வெளியிடுவதில் பெருமை கொள்கிறோம். ஏற்கனவே பேராசிரியர் 'பண்பாட்டுப் புரட்சியில் பௌத்தம்' நூல் நிலாசூரியன் பதிப்பகத்தின் வாயிலாக வெளிவந்துள்ளது. இது இரண்டாவதாக வெளிவருகிறது. பேராசிரியர் முனைவர் க. ஜெயபாலன் அவர்களுக்கு நன்றி. இராசகுணா பதிப்பகத்தின் ராஜேந்திரன் அவர்களுக்கும், அன்றும் இன்றும் இந்நூல் வெளிவர துணைநின்ற அனைவருக்கும் நன்றி.

மந்திரமாவது சோறு; மானத்தைக்காப்பது ஆடை
சுந்தரமாவது வீடு துதிக்கப்படுவது அன்பு
வெந்துயர் தீர்ப்பது கல்வி மேன்மையளிப்பதிங் கொழுக்கம்
சிந்தைகவர்வது தியாகம், இந்த செகத்திலுயர்ந்த தறிவே.

(மகாமதுரகவி வீ.வே. முருகேசபாகவாதர்
பூவாரம்தமிழ்ச்சோலை)

பேராசிரியர் முனைவர் **கெ. இரவி**
நிலாசூரியன் பதிப்பகம்,
சென்னை - 24

நினைவுக்கு

சமூக சமத்துவம், பொருளாதார சமத்துவம்,
பெண் விடுதலை உள்ளிட்ட களங்களில்
மாற்றுக்கலை வடிவங்கள் மூலமாகத்
தொண்டாற்றும் மகத்தான கலைஞர்களுக்கு

பொருளடக்கம்

ஆதிதிராவிடர் சமூக சீர்திருத்த கீதங்கள்	*13*
நூன்முகம்	23
சுதந்திரக்கனி	27
ஜாதிக் கொடுமை	28
ஞானக் கண்மணி	29
ஜாதி ஒன்றே	32
ஜாதி பேயாட்டம்	33
தீண்டாமை தீமை	34
மோசம்	37
அநியாயக் காலம்	39
பாருங்கள்	40
கண்விழிப்பீர்	42
எழுந்திருங்கள்	43
வாலிபர்	44
ஈசன் தொண்டு	45
கல்வி	48
கள்ளுண்ணாமை	49
மதுநீக்கு ஞானம்பாமாலை	51
எதுவேண்டும்	55
மக்கள்	60
வேண்டுமை	61
வேண்டாமை	62
ஏன்ஏன் - தான் தான்	62
ஜெயபேரிகை	65
மனத்திற்குணர்த்தல்	67
வாழி விருத்தம்	70
மதுவிலக்கு கீர்த்தனம்	72
குடிவெறி நீக்கும் கொச்சகம்	74
விஷத்தைக் குடிக்கலாமா	76
குடிக்காரன் புலம்பல்	78
மதுநீக்கு சொர்ணம்பா மாலை	79
அறிவானந்தக் கீதம்	81
அறிவானந்தக்கீதம்	82
நூன்முகம்	82
அறிவானந்தக் கீதம்	84
அறிவே ஆண்டவன்	85
சத்தியமே ஜெயம்	86
அன்னை தந்தை முன்னறி தெய்வம்	88
சங்கீதமே சுகம்	89
கல்வியே கைகண்ட பொக்கிஷம்	89
கோபம் குடிகெடுக்கும்	90
மெய்த்தலைவர்கள் யார்	91
வாலிபர் விழிப்பு	91
விடுதலை	93
பெண்மக்கள் துயரம்	94
தாழ்த்தப்பட்டார் துயரம்	95
நியாயங் கூறுதல்	98
சுகாதாரம்	99
மதுவிலக்கு	100
தீண்டாமைக் கொடுமை	100
தேக நிலையாமை	103
இரக்கம்	105
தமிழ்ச் சோலை	107
ஆக்கியோன் முன்னுரை	109
முகவுரை	110
சிறப்புரைகள்	111
சிறப்புப் பாயிரம்	120
தமிழ்ச் சோலை	122
விடுதலைக் குயில்	124
விடுதலைக் கனி	125
வீர திராவிடன்	126
திராவிடம்	127
செந்தமிழ் நாடு	127

அறிவுக்குத்தான் பஞ்சம்!	129	தமிழ்
அழிவதோ தமிழா?	130	மங்கையர் முறையீடு!
இதுவோ பக்தி?	130	தமிழன்னை முறையீடு!
கடவுளைக் காணும் இடம்!	131	தொழிலாளர் துயரம்
தமிழன் – அன்றும், இன்றும்!	132	பழந்தமிழ்க் கொடி
பணம்	133	உழவனின் உயர்வு
"ஆடி அலங்கோலம்	134	தீண்டாமை
பல்லி விழுந்த பலன் !	135	தாழ்ந்தவர்
எமகண்டம்	135	உயர்ந்தவர்
மோட்ச நரகம்	136	ஆதித்திராவிடர் அகம் உருகல்
சமதர்மம்	136	திருவள்ளுவர்
தாமரைப் பெண்	137	தலைவன்
இசை!	137	பாகனும் பகுத்தறிவுப் பையனும்
காலை விழிப்பு	137	புதுமை!
மஞ்சள் மகத்துவம்	139	குழந்தை!
மனங்கனிந்தே என்ற இசை	140	கண்ணின் சிறப்பு
கிளிக்கண்ணி இசை	140	குழந்தை வளர்ப்பு
காதல் மணக் கொலை!	141	பூவாரம்
இயற்கை எழில்	142	உழைப்பவரே வாழ்வார்
பெண் அழகு	142	நன்றி
வாழ்க்கைத் துணைவர்	142	மதுரகவிஞரோடு நான்
பெண்ணின் பெருமை	143	கவிஞர் க. வெற்றிவேந்தன்
எண்ணிப் பார்!	144	பதிப்பாசிரியர் பற்றியக் குறிப்புகள்
இளங் கைம்பெண் வருந்தல்	145	

ஆதித்திராவிடர்
சமூக சீர்திருத்த கீதங்கள்

ஓம்

திருவருள் துணை

ஆதித்திராவிடர்

சமூக சீர்திருத்த கீதங்கள்

இது அகத்திய மரபு மஹாஞானபாநு-சதாவதானம்
ஸ்ரீலஸ்ரீ. பூஞ்சோலை முத்துவீர நாவலர்
அவர்கள் மாணவர் மாஜி ஸ்ரீமான்
க.ந.செ. எல்லப்பதாஸர் அவர்களின்
தலைமை மாணவரும்,
கொண்ணூர் ஸ்ரீசமரச சன்மார்க்க சபையின்
ஸ்தாபகரும், போதனாசிரியரும்,
கொளத்தூர் சமதர்மாபிவிர்த்தி வாலிபர் சங்க
ஸ்தாபகரும்,
செங்கற்பட்டு ஜில்லா ஆதிதிராவிட மகாஜன சபை (ரிஜிஸ்ட்)
உபகாரியமைச்சரும், மேற்படி ஜில்லா
அரசாங்க மதுவிலக்குப் பிரசாரகருமாகிய
மகாமதுரகவி
வீ.வே. முருகேச பாகவதர் அவர்களால்
இயற்றப்பெற்று

1860+21 பிரிவின்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள மேற்படி
செங்கற்பட்டு ஜில்லா ஆதிதிராவிட மகாஜன சபையாரால்
வெளியிடப் பெற்றது.
முதற்பதிப்பு --- 1931 --- விலை 0-4-0 அணா

ஆதிதிராவிடர் சமூக சீர்திருத்த கீதங்கள்

ஓம்

கடவுள் துணை

சாற்றுக் கவிகள்

நீலகிரி உதகமண்டலம் திருக்காந்தல்

ஸ்ரீஹரி ஓம் சிவ ராமாநந்த சபையாரின்

அபிப்பிராயம்

விருத்தம்

பாவாணர் பரம்பரையா னிலக்கணவி லக்கியங்கள் பார்த்த தீரன்
மாவாண ருக்குநிகர் சதுர்கவியு மியம்பவலன் மாநிலத்தே
காவாரப் பாடிநடு நிலைநிற்க நீதிபல ஞயந்து காட்டி
பூவாணர் மெச்சிடவே முருகேசம் நூலொன்று பூட்டி னானால், தத் ஸத்

சவுத் ஆற்காடு டிஸ்டிரிக்ட் போர்டு,

எலிமெண்டரி செகண்டரி போர்ட் எஜுகேஷன்

கவுன்சில் தேவஸ்தான கமிட்டி, மதுவிலக்கு கமிட்டி

ஆகியவைகளின் உறுப்பினரும், சிதம்பரம் முனிசிபல்

கவுன்சிலருமாகிய நந்தனார் மடம்

ஸ்ரீலஸ்ரீ சுவாமி A.S. சகஜானந்தம், M.L.C.,

அவர்கள் கூறிய

வெண்பா

மகாஞான பானுவென மன்னியபூஞ் சோலை
மகாமுத்து வீரனெனு மன்னன் – குகாவென்று
நூறவதா னஞ்செய்தோன் நோன்கழல்கள் போற்றிமல
நூறவரு மெல்லப்ப னோற்று.

எல்லப்ப தாஸர்பா லேற்ற கலைபயின்று
எல்லப்ப னென்ன விருந்தானே – நல்லப்பண்
பாடும் முருகேச பாகவத னற்றமிழில்
தேடுஞ்சீர் தேர்ந்தான் தெளி.

பழந்தமிழர் சீர்திருத்தம் பற்றுநெறி போற்றி
பழந்தமிழால் கீதங்கள் பாடி – வழங்கினான்
நண்பன் முருகேச நாவலற்கு நந்தமிழர்
பண்பினலங் காட்டல் பயன்.

சுபம்.

அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் மாபெருந்தலைவர் ராவ்பகதூர் M.C. இராஜா M.L.A., அவர்கள் கூறிய அபிப்பிராயம்.

கொண்ணூர் மகா மதுரகவி வீ.வே. முருகேச பாகவதர் என்பார் எழுதிய ஆதிதிராவிடர் சமூக சீர்திருத்தக் கீதங்களை யொருங்கே ஒருமுறை வாசித்துப் பார்த்தவளவில் அப்பாசுரங்களில் அடங்கியுள்ள சொற்சுவை, பொருட்சுவை, விஷயச்சுவை முதலியவைகளே அவரது அபிதான மதுரச் சுவையைத் தெரிப்பவனவாய் விளங்குவதாலும், இவ்வித அபிப்பிராய முதிர்ச்சி தழுவிய நூல் ஒன்று வெளிப்படுவது அத்யாவசிய மாதலாலும், மாணவர்கள் மனதில் வெகு எளிதில் அமையக்கூடிய தெளிந்த தமிழ் நடையில் பாசுரங்கள் அமைந்திருப்ப தாலும், இந்நூலைக் கலாசாலை மாணவர்களுக்குப் பயன்படப் பாடப்புத்தகமாக வைப்பதில் பெரும் பிரயோசனமாக இருக்குமென்பது எனது துணிபு. இவ்வாசிரியர் இன்னனைய நூல்கள் பின்னும் இயற்றி யுலகோபகாரம் புரியும் வண்ணம் உற்சாகமூட்டும் வழியில் பலரும் முன்வருவார்களாக.

சுயமரியாதை இயக்க மாபெருந் தலைவரும், குடியரசு பத்திரிகையாசிரியரும், வைக்கம் வீரருமாகிய ஈ.வெ.ராமசாமிப் பெரியார் அவர்கள் (22-2-1931)ல் தமது குடியரசு பத்திரிகையில் வெளியிட்டுள்ள

மதிப்புரை

ஆதிதிராவிடர் சமூக சீர்திருத்த கீதங்கள்

இப்புத்தகம் திரு. மகா மதுரகவி, வீ.வே. முருகேச பாகவதர் அவர்களால் எழுதப்பட்ட தாகும். இதில் ஜாதிக் கொடுமை, தீண்டாமையின் அநீதி, கட்குடியின் தீமை, கல்வியின் அவசியம், ஆதிதிராவிடரின் தற்கால நிலை, அவர்கள் முன்னேறும் வழிகள் முதலியன பற்றி சுயமரியாதை கொள்கைகளோடு நல்ல வர்ண மெட்டு களில் எளிய தமிழில் கீர்த்தனங்களாகத் தொகுக்கப் பெற்றிருக்கிறது. ஒவ்வொரு கீர்த்தனையிலும் நல்ல பொருளும் சுயமரியாதைக் கொள்கைகளும் நிரம்பியுள்ளன. தீண்டப்படா தாரின் மேம்பாட்டில் கவலையும் ஆர்வமும் கொண்ட ஒவ்வொருவரும் படிக்க வேண்டுமென விரும்புகிறோம். இதன் விலை அணா 0-4-0

திராவிடன் ஆசிரியர்
உயர்திரு சனக சங்கர கண்ணப்பர் அவர்கள் கூறிய
மதிப்புரை

ஆதிதிராவிடர் சமூக சீர்திருத்த கீதங்கள்

இவ் அருமையான கீதங்கள் தமிழ்ப் புலவர் திரு.முருகேச பாகவதர் அவர்களால் பாடப் பெற்றனவாகும். இப்பாக்கள் மிக இனிமையாய், அறிவை ஊட்டுவனவாய், கேட்போர் மனத்தைக் கொள்ளை கொள்வனவாய், சாதிப் புரட்டு, மதப்புரட்டு முதலியவைகளை ஒழிப்பனவாய் உள்ளன. இப்பாக்கள் பாடிய திரு.முருகேச பாகவதர் அவர்கள் திறமையைப் பாராட்டுகின்றோம். இப்பாக்கள் ஆதிதிராவிடர் முன்னேற்றத்திற்கு வழிகாட்டுவன வாகலின், இப்பாக்கள் அடங்கிய நூலை யாவரும் வாங்கிப் படித்து ஆதரிக்கக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

சென்னை ஆதிதிராவிட மகாஜன சபையின் போஷகரும், தலைவரும், திருப்போரூர் திருவள்ளுவர் சத்திர முகான்மைக்காரருமாகிய
திரு. அ. முருகேசம்பிள்ளை அவர்கள் எழுதியது.

பூநிறை வண்டினஞ்சோலை பொழிற்சூழ் கொண்ணூர் நிவாசராகிய மகா மதுரகவி வீ.வே.முருகேச பாகவதர் அவர்கள் இயற்றிய இந்நூல் ஆதிதிராவிடர்கட்கு மிகவும் சிறந்தது. அழகிய கீர்த்தனை வாயிலாக அமைக்கப் பட்டிருக்கும் சொற்பெருக்கானது ஆதிதிராவிட மக்களுக்கு பரபரப்புண்டாக்குமென்பதிற் ஐயமில்லை. எவ்வாற்றாறும் பொருத்தமற்ற ஜாதிபேதத்தைக் கண்டித்து, உண்மை தெய்வபக்தி, மதுவிலக்கு, கண்விழிப்பு முதலியவைகளை தெள்ளென எடுத்துக் காட்டி புரிந்த மாபெருந் தொண்டிற்கு ஆதிதிராவிட மக்கள் அனைவரும் இதைத் தவறாமல் வாங்கி வாசிப்பதே சாலச் சிறப்பு தரும் நன்றியென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சதாவிதானம் மஹாஞானபாநு ஸ்ரீலஸ்ரீ பூஞ்சோலை முத்துவீர நாவலர் அவர்கள் மைத்துனரும், மாணவருமாகிய சென்னை எஸ்.வேதமாணிக்கம் அவர்கள் விளம்பியன.

ஆசிரிய குளக விருத்தம்

இகங்காட்டு நன்னெறிக ளிதுவெனத்தேர்ந் தறிஞர் மதிப்பிடத்த குங்கற்
பகங்காட்டுந் தமிழ்மொழியிற் சீர்திருத்தக் கீதங்கள் பரவ வீண்டு
முகங்காட்டுந் தர்ப்பணம்போல் நண்பகல்போல் முழுமதி போல் முதன்மை மேவச்
சுகங்காட்டு முதுவழியிற் புவிக்குதவிப் பெருங்கீர்த்தித் துணைபெற் றானால்
அன்னவன்யா ரெனிலெம்மி னாசிரியர்க் கருஞ்சீட ரவர்க்குச் சீடன்
தென்மொழியாந் தமிழ்மொழியின் மதுரமெலாஞ் சுவை பார்த்துத் தெளிந்து தன்பா
லன்புறுவார் தமக்கூட்டு மகாமதுர கவிவேந்த னவைப்ர சங்கம்
இன்பூரப் பொழியுமுகில் முருகேச பாகவத இசைவல் லோனே.

எனது அன்புநிறைந்த மித்திரர் மகாமதுரகவி திருவாளர் வீ.வே.முருகேச பாகவதர் அவர்களால் எழுதப்பெற்ற இந்நூல் சரித்திர ஆராய்ச்சி யுடனும், தக்க அனுபவத்துடனும், கீர்த்தனை நடையில் பொய், சூது, பொறாமை, ஆபாச ஜாதி, சமய புராண வித்தியாசங்களைக் கடிந்து, சமரச சன்மார்க்க நிலையில் பக்தி அன்பு முதலியவைகளைத் தழுவி, ஆதிதிராவிடர்களின் முன்னேற்றத்திற்கான பல அரிய வழிகளைக் காட்டி சமத்துவம், சகோதரத்துவம், மக்களெழுற்சி கல்வி ஆகியவைகளைப் போதிக்கும் இம்மாதிரியான நூல் ஒன்று எழுதும்படி பலமுறையும் கேட்டுக் கொண்ட எனது வேண்டுகோட்கிணங்கி, கேட்போர் மனது ஆனந்தமடைய இனிய ராகதாளங்களில் தேனினுமினிக்கும் மதுர சொற்களால் அமைத்து ஆதிதிராவிடர்களின் அபிவிருத்தியை நாடி, பாடிய மேற்படி நூலாசிரியாகிய பாகவதருக்கு எனது மனமார்ந்த வந்தனமளிப்பதுடன், கீழ்குறித்த சபையாரின் நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

குலாபிமானங் கருதிய ஒவ்வொருவரும் இதனை வாங்கி வாசித்து இப்படிப் போன்ற பல நூல்கள் எழுதி வெளியிட உற்சாகம் அளிக்குமாறு எல்லாம் வல்ல திருவருளைச் சிந்திக்கின்றேன்.

இங்ஙனம்
M.C. லட்சுமணம் பிள்ளை
பொதுக்காரியதரிசி
(ரிஜிஸ்டர்) செங்கற்பட்டு ஜில்லா
ஆதிதிராவிடர் மகாஜன சபை,
அச்சரபாளையம், பொன்னேரி.

சென்னை கத்திமாநகர் நிவாசரும்
மேற்படியூர் ஸ்ரீகோகுல கிருஷ்ண பரமாத்மா
ஆயுர்வேத வைத்தியசாலை அதிபரும்
மேற்படியூர் பெரியதனக்காரருளொருவரும்
கத்திவாக்கம் கட்டாயக்கல்வி அட்டென்ஷன் கமிட்டி
பிரசிடெண்டும் சென்னை திருவொற்றியூர் மகிழடி
சேர்வையிலும் கத்திமாநகர் அர்ச். சூசையப்பர்
திருமகோற்சவத்திலும்
சுமார் 40 வருடகாலமாய் தரும தண்ணீர் பந்தல்கள்
அமைத்து தரும பரிபாலனம் செய்தவரும்
செங்கற்பட்டு ஜில்லா ரிஜிஸ்ட் ஆதித்திராவிட மகாஜன சபை
பொன்னேரி மாஜி தலைவரும், இந்து பால வைதியரும்
பொதுநல குலாபிமான உண்மை உழைப்பாளருமாகிய
ஸ்ரீமான் க.ந.செ. எல்லப்பதாஸ் உபாத்தியாயர்
அவர்களின் மாணவர் சென்னை மூலைமாநகர்
S.M. *ஷண்முகம் பிள்ளையவர்கள்* *கூறியது.*

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

உலகிலுள்ளோ ரெளிதாக நீதியனைத் தினையுமுணர்ந் துய்யு மாறு
பலகலையின் சாரமெலாம் பண்பாகத் திரட்டியிந்தப் படிமே லென்றுந்
திலகமதாய் ஆதித்திரா விடசமூக சீர்திருத்த கீதந் தந்தான்
கலகமறு மதுரகவி வி.வி.முரு கேசனெனுங் கவிவல் லோனே.

வெண்பா

புன்மதியைத் தீர்க்கும் புகழுடைய கற்பிக்கும்
நன்மதியைச் சேர்த்து நலங்காட்டும் – பன்மதிசூழ்
வல்லமது ரக்கவிசீர் வாணன்முரு கேசனனி
சொல்லருமிந் நூலுணர்ந் தோர்க்கு.

இந்நூலாசிரியரவர்களின் தலைமை மாணாக்கரும்,
மேற்படி சமரச சன்மார்க்க சபையின்
உதவியாசிரியருமாகிய
அமுதகவி ***வி.ஓய். திருவதியவர்கள்*** *கூறியது.*

அறுசீர் விருத்தம்

என்னனைய மாணவர்க்கும் ஏழையாதி திராவிடர்க்கும் எந்த நாளும்
அன்னையினுந் தயவுடையான் பொதுநலத்தின் திருப்பணிக்கே யார்வ மிக்கான்
தன்னிகரில் புகழுடையான் சமரச சன்மார்க்கமதைத் தழைக்கச் செய்வோன்
பொன்னனையத் திருவாக்கான் நனிகொண்ணூர் நகர்வாழும் பொறுமை நோன்பான்.
முக்கனியுந் தீம்பாலும் கற்கண்டும் நறுந் தேனும் முதன்மை பாகுஞ்
சர்க்கரையு மிளநீரும் தனிநெய்யு மருங்கன்னற் சாறு போன்று
இக்கவிக ணம்மவருக் கின்றியமை யாதமிக இன்ப மூட்டும்
அக்கரையா யிதை வாங்கி யகமகிழத் திருவருளை யஞ்சற் செய்வோம்.
பாமரரும் பண்டிதரும் கொண்டாடும் சீர்திருத்தப் பாக்கள் தந்தான
காமருமாப் பெரியோரால் விக்டோர்யா மண்டபத்தில் காட்சி மேவும்
மாமதுரக் கவிராச னெனும்பட்டம் தரப்பெற்றான் மாண்பு நீடும்
நாமணக்கு முருகேச பாகவத னிந்நூலும் நாளும் வாழி.

இந்நூலாசிரியரின் பரமாசிரியராகிய சதாவதானம் - மஹாஞானபானு ஸ்ரீலஸ்ரீ பூஞ்சோலை முத்துவீர நாவலர் அவர்கள் குமாரரும், செங்கற்பட்டு ஜில்லா (ரிஜிஸ்ட்) ஆதிதிராவிட மகாஜன சபையின் பிரசிடெண்டும், பொன்னேரி தாலுக்கா மெத்தூர் கண்ணபிரான் இலவச கலாசாலை ஆனரெரி அசிஸ்டெண்ட் சூப்பரிண்டெண்டும், திருப்போரூர் திருவள்ளுவர் சத்திர முகான்மைக்காரருமாகிய ஷட்டாவதானம் திருவாளர் பூஞ்சோலை மு. வேலாயுதபாணி அவர்கள் விளம்பிய

சிறப்புப் பாயிரம்

ஆசிரியப்பா

உலகை முளுற்றிய வொப்பிலா தற்பர
னிலகிய வருளிங் கெழுந்திடு மக்கட்
பிறப்பினிற் சாதி பிறங்குவ த்வித
சிறப்பினிற் காலுஞ் சிந்துந திக்கரை
யோரம் புகுந்து உயரிந்தி யாவிற்
றீரம் படைத்தத் திறன்மிகு மன்னர்
வானசாத் திரமெலாம் வாகையா னிறுவி

ஞானமிக் குற்ற நல்லுரை புகட்டித்
தம்வய மாக்கிச் சதுர்முகப் பங்கயன்
கம்புயந் தொடையிற் காலிரண் டிரண்டு
வருணத் தவர்கள் வந்தன ராகத்
தெருமரற் றானே தெவ்விதி னுணுர்த்தி
யியற்றிய வாரிய ரீனத் துறையைப்
பயிற்றின ரெண்ணாப் பற்பலப் பிரிவிற்
பழந்தமிழ்க் குடிகட் பணைபடு சேதக
முழுதுணு மாதி யுண்மைத் திராவிடர்
பறையர்பஞ் சமரெனப் பறையறை விக்கு
மறைமுதல் யுக்தி யனுபவத் தமையாச்
சழக்கினைக் களைந்துநஞ் சமூக மீடேற
உழைத்திடு முழைப்பே யொருமனத் துன்னி
பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினா லெனுமுற்
புலவர்தங் கூற்றைப் புலப்பட விளக்கிக்
குலமுன் னேற்றக் குறிப்பா லீண்டு
வழுத்திடு பக்தி மதுவிலக் கன்பு
செழித்தநல் லறிவு தேர்ந்திடு துறையில்
வாலிப வெழிற்சி வளம்பெறு கல்வி
கோலம் புனைந்து குதலையுந் தெரிய
முத்தமி ழினிக்கு முதுமொழி நாட
கத்தமிழ் நடையிற் கவின்சமு கச்சீர்
திருத்தக் கீர்த்தனை திரட்டி யாத்தனன்
பருகுநர்க் கின்பம் பயன்றர வாக.
அன்னவன் யாரெனி லறைகுதுங் கேண்மோ!
மன்னிய புலவர் வயங்குபு சென்னை
கொண்ணூர் பதிநற் குணத்தவர் மெச்சிடும்
தண்ணார் மொழியன் சற்சன ருறவோன்
வேலா யுதவேள் விரும்பிய நோன்பு
மேலா யுதமாய் மிளிர்கான் முளையான்
அகத்திய மரபு வணிபெற வந்து
சகத்தினி னூறவ தானஞ் செய்த
மகாஞான பாநு மாசிலா மணியென
சிகாரம் பம்புரி செல்வனெந் தந்தை
பூ.முத்து வீரப் புகழ்நா வலன்பாற்

பாமுத்து நன்னூற் பருகிய பக்தன்
வாகடங் கண்ட வயித்தியக் குரவன்
பூகட மிமிரும் பொழற்சூலா மெண்ணூர்
வாசகண் மணியன் வாண எல்லப்ப
தாசப் புந்தன் றன்முதற் சீடன்;
அமிழ்தினும் பாகு வாயவன் னைமுத்
தமிழிலக் கியவழி தகுநிலை கற்றோன்
செங்கற்பட் பாதி திராவிட மகாஜன
சங்கத் துதவி காரியதரிசி சன்
மார்க்க சமரச மாசபைப் போதகன்
தீர்க்கசம தர்ம திகழுபி விர்த்தி
வாலிபர் சங்கம் வாய்ந்திடு தாபகன்
சீல முயர்ந்த செழுமையின் ஜாதி
பொதுசபை யெங்கும் போந்துயிர் புரக்கும்
மதுரித வாக்யன் மகாமது ரக்கவி
பட்டம் புனைந்த பாவலன் கீதை
கட்டுரை யெல்லாங் கனிந்தார் மனத்து
அகமகிழ் வடைய வரும்பிர சங்க
சுகம்பொழி மேகந் தூய் நிலை யன்பன்
முருகே சபாக வதன்
றிருநிறை யாயுட் செறிந்துவா ழியவே.

சுபம்! சுபம்!! சுபம்!!!

நூன்முகம்

பூமண்டலமனைத்தும் புரக்கும் எல்லாம் வல்ல சர்வ சக்தியின் பேரருளினிது விளங்கும் இப்பரத கண்டத்தில் ஆதியில் அரசர்களாயும் சகலகலா வல்லுநராயும், சித்து புருஷர்களாயும், சாத்திர நிபுணர்களாயும் தத்துவ ஞான சிரோமணிகளாயும் மேன்மையாய் விளங்கிவந்த பூர்வ தமிழ்க்குடி மக்களாம் ஆதிதிராவிடர்களை இடையில் குடியேறிய ஒரு சில அன்னிய நாடோடிகளும் சுயநலக்காரர்களும் தோன்றி அடக்கியொடுக்கி ஆதிக்கத்தை யெல்லாம் பலவழியில் அழித்து மநு (அ) தர்ம சாத்திர முதலாய அறிவுக்குப் பொருத்தமற்ற பல ஆபாசக் கட்டுக் கதைகளை யெல்லாம் வரைந்து ஒரே கடவுளின் மக்களைப் பலப் பிரிவுகளாகப் பிரித்து, நாட்டில் நாலாயிரஞ் சாதியை யுண்டுபண்ணினது மல்லாமல், சாத்திர பேதம், கோத்திர பேதம், சமய பேதம், மதபேதம், குலப்பேத முதலிய பல பேதங்களையும் தீண்டாமை, வேண்டாமை, தொடாமை, கொடாமை, பார்க்காமை, சேர்க்காமை, கேட்காமை, மீட்காமையாகிய பல மோசபேதங்களையெல்லாம் சாதித்து தருமத்தை யோட்டி அதர்மத்தை நிலைநாட்டினார்களென்பது மிகையாகாது.

அன்றுதொட்டு இன்றுவரை அவ்வேற்றுமைத் தருவானது மிகவும் பருத்து பல கிளையோடி நாடு நகரம் கிராமங்கள் எல்லாவற்றையும் மூடிக்கொண்டு யதார்த்த பக்தி, சமரசம், சன்மார்க்கம், சகோதரத்துவம், அன்பு, சத்தியம், கருணை, ஒற்றுமை இவையாய தூய வழிப்பாதைகளை அடைத்து விட்டதை எண்ணி எண்ணி உண்மை தேசாபிமான அறிஞர்கள் கண்ணீர் விடல் கண்கூடேயாம். அத்தகைய கொடிய விருட்சத்தை அடுத்தடுத்து அநேக மேதாவிகளும், பெரியோர்களும், சீர்திருத்தக் காரர்களும் தோன்றி நியாய வீர குடாரங்கொண்டு சலியாது வெட்டி வெட்டி வீழ்த்திக் கொண்டு வரும்பொழுதே காருண்யம் பொருந்திய இங்கிலீஷாராளுகையின் இருபதாம் நூற்றாண்டிலும் கூட, துளிர் விடுகிறதென்றால் எவரைத் தான் நோவது? என்னத் தான் செய்வது? எனவே, பண்டைப் பெரியார்களாம் நாயன்மார்கள், ஆழ்வாராதிகள்,

சங்கரர், மத்வர், ராமாநுஜர், சமய குரவர், பகவான் புத்தர், ஏசுநாதர், மகமது, ஔவை, திருவள்ளுவர், கபிலர், அகத்தியர், திருமூலர், நாலடியார், தாயுமானவர், பட்டினத்தடிகள், அருணகிரிநாதர், இராமலிங்க சுவாமிகள், மற்றும் சித்தர்கள், ராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், குணங்குடியார், சுவாமி ஓம்பிரகாசர், அயோத்திதாசர், சதாவதானம் பூஞ்சோலை முத்துவீர நாவலர், சுயமரியாதை இயக்கத் தலைவர் ஈ.வெ.இராமசாமிப் பெரியார், திராவிடனாசிரியர் சனகசங்கர கண்ணப்பர், தமிழனாசிரியர் ஜி.அப்பா துரையார், எமது பேராசிரியர் க.ந.செ. எல்லப்பதாசர் மற்றும் பல மேதாவிகளின் திருவுரைகளிலிருந்து இவ்வடியேன் அறிந்துணர்ந்த சொற்ப உண்மை நெறிகளை நம்மனோர்க்குப் பயன்படுமாறு ஏதாவதொரு நூலியற்றப் போதிய வாற்றலில்லாது வெகுநாள் வாளாயிருந்த யான் தற்போது சிறுகுழவிகளையும் பெரியோரையும், பகுத்தறி வில்லாப் பறவை விலங்குகளையும் வசப்படுத்தும் இசைத் தமிழாகிய பாட்டுருவாக்கி இச்சிறு நூலை வெளியிட்டதின் நோக்கமென்ன வென்றால், சமீபத்தில் சில ஜில்லா தாலுக்கா கிராமம் நாகரீகமில்லா நாட்டுப் புறங்களுக்குச் சென்று கண்ணுக்கு நேரே கண்ட உண்மைகளையும் நம்மனோர் படும் கஷ்ட நிஷ்டூரங் களையும், சாதிச் செருக்குடையோர் நங்குல ஏழைமக்களை மிருகங் களிலும் கேவலமாய் நடத்தும் அக்ரம அட்டூழியங்களையும் அவைகளால் ஆண்பெண் குழந்தை குட்டிகள் அடையும் வேதனை யையும், சுயநல வெளிவேஷச் சாமிகள், தாசர்கள், நயவஞ்சகர் களின் மோச வலைக்குள் கல்வி வாசனையே அறியாத பாமரமக்கள் சிக்கித் தவிப்பதையும் உணர்ந்து இவைகளிலெல்லாம் ஏமாற்ற மடையாமல் எல்லா வகையிலும் சாக்கிரதையாயிருக்கவும், 'எழுமின், விழுமின், கருதிய கருமம் கைகூடும்வரை, ஓயார் மலுழைமின்' என்ற சுவாமி விவேகாநந்தர் திருவுரையை அடிக்கடி ஞாபகமூட்டவும், வாலிபர்களுக்கு ஒற்றுமை, ஊக்கம், எழுச்சி, குலாபிமான முதலிய சமதரும முண்டாக்கவும், அறியாத் தன்மையினால் செய்யும் வீண்செலவுகளைக் குறைக்கவும், என்சிற்றறிவிற் கெட்டிய சீர்திருத்தங்களை எடுத்துக்காட்டும் வண்ணமும், செங்கற்பட்டு ஜில்லா ரிஜிஸ்டர் ஆதிதிராவிட மகாஜன சபையார் கேட்டுக் கொண்ட வண்ணமும், பழையன கழிதலும், புதியன புகுதலும், வழுவல கால வகையினானே என்று பவணந்தியாரும், கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண் டாடும் கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போக, மலைவருசன்மார்க்கமொன்றே நிலைபெற மெய்யுலகம் வாழ்ந்தோங்க என்று இராமலிங்க சுவாமிகளும், உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும் கல்லா ரறிவிலா தார் என்று குறளாசிரியக் கோமானும் உரைத்த பொய்யமொழிக்கேற்ப கால மறிந்து நடவாதான்

கோலமறியாக் குரங்காவா னென்றவண்ணம் காலதேச வர்த்த மானத்தைக் கருதி ஆதிதிராவிடர்களாயுள்ள தாழ்த்தப்பட்ட அனை வருக்கும் ஏனையோருக்கும் அறிவுக்குப் பொருத்தமற்ற மூடப்பழக்க வழக்கங்களைக் கண்டித்துக் கல்வி, கைத்தொழில், கள்ளுண்ணாமை, சிக்கனம், ஒற்றுமை, யதார்த்த பக்தி, அன்பு, குலாபிமானம், சுயமரியாதையாகிய சமரசமானந்த வாழ்வு தரக்கூடிய இந்நூல், எந்நூற் சூட்டினு மெத்துறைக் காட்டினும் அந்நூற் செல்லாம் அறிவாதியெனவே சீர்திருத்த அறிவுலகமாகிய இக்காலத்தில் சுதந்தர தாகமிகுந்த ஆதிதிராவிட சகோதர சகோதரிகள் அனைவரின் கரங்களிலிருந்து அநேக மேலான படிப்பினைகளும், இலௌகிக ஞானமும், மனத்தெளிவும் உண்டாக்கி சகல சாஸ்திரப் பண்டிதன்போல் திகழ்ந்து நன்மை பயக்குமென்பது எமது துணிபு. ஆகவே, இதனை 'ஆதிதிராவிடர் சமூக சீர்திருத்தக் கீதங்கள்' என்ற பேரிட்டு கற்றோரும், மற்றோரும் எளிதில் உணருமாறு தெள்ளிய நடையிலெழுதித் தமிழ்நாட்டினிடை சமர்ப்பித்துள்ளேன். இதன் மூலம் எவ்வகையிலும் எதையும் குறைகூற வேண்டுமென்றாவது இதனால் ஒரு ஆசிரியராக மதிக்கப்பட வேண்டுமென்றாவது நினைந்தேனல்லேன். ஏழைகள் தொண்டே ஈசன் தொண்டு. ஏழைகள் மகிழ ஈசனு மகிழ்வார் என்ற உயரிய கடமையைக் கைக்கொண்டு நம்மவர்கள் மீதுள்ள வாஞ்சையினால் எழுதிய இந்நூலில் என்னையறியாமலே தாவது குறைகளிருப்பின், எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு, எல்லா மறிந்தாரியம் பாரெதுவும் கல்லார் பிழை கூறுவர் என்று வள்ளுவப் பெருமானார் வாக்கின் தத்துவமறிந்து குற்றங்க ணீக்கிக் குணத்தை யங்கீகரித்து, எல்லோரும் வாங்கிப் படித்துத் தங்கள் நண்பர்களுக்கும் காட்டி.க் குலநலத்தையும், முன்னேற்றத்தையும் கருதி எம்மையும் இந்நூலையும் ஆதரிக்குமாறு அன்புமயமாய் அறிவுக்கறிவாய் விளங்கும் சர்வசக்தியின் திருவருளைச் சிந்தித்து வந்திக்கின்றேன்.

இந்நூலுக்கு அகமகிழ்ந்து சிறப்புப் பாயிரம், அபிப்பிராயம், சாற்றுக் கவிகள், மதிப்புரை, முதலியன தந்து உற்சாகப்படுத்திய பெரியார்களுக்கும், அன்பர்களுக்கும், இதை எழுதத் தூண்டிய செங்கற்பட்டு ஜில்லா (ரிஜிஸ்டர்) ஆதிதிராவிட மகாஜன சபையாருக்கும், அனவரதம் மனமார்ந்த நன்றி வந்தனம் செலுத்தக் கடப்பாடுடைய வனாயிருக்கின்றேன்.

இங்ஙனம் தங்களன்பன்

மகா மதுரகவி வீ.வே. முருகேச பாகவதர்

மங்களவிலாசம், கொண்ணூர், வில்லிவாக்கம்.

ஓம்.சுபம்.

ஆசிரிய வணக்கம்

கலிவிருத்தம்

ஈசனாகி யெழிற்குரு வாகிய
மாச ருக்குஞ்சன் மார்க்க நெறிதனை
ஆசை யாயடி மையெனக் கோதிய
தாச னெல்லப்பன் தண்கழல் போற்றுவாம்.

அவையடக்கம்

அறுசீர் விருத்தம்

வானிற்கும் பகலோன்முன் சிறுமின்மி னிப்பறக்கும்
வண்ணம் போலும்
கானிற்கு மயிலாகு மெழிற்போன்று ளான்கோழி
கண்டே யாடி
தானிற்குந் திறம்போலும் பெற்றோர்முன் குழவிகள்பி
தற்றல் போலென்
பானிற்கு மெனவெண்ணிக் கற்றாரின் திருமுன்பு
பாடி னேனே

ஓம்
திருவருள் துணை

ஆதிதிராவிடர் சமூக சீர்திருத்த கீதங்கள்

காப்பு விருத்தம்

அன்பினை யெவர்க்கு மூட்டி அனைத்துயி ரொன்றே யென்று
அன்பினை பலதிக் கெல்லாம் அறிந்திட பரவச் செய்து
அன்பினைச் சுரந்தே யெம்முள் ஆனந்த சோதி யாகி
அன்பினை யிடமாய்க் கொண்ட அண்ணலைப் பணிகு வாமே.

சுதந்திரக்கனி

ஜாதியெனும் பெருங்காட்டைத் தானழித்துப் போட்டு
சமூகமெனும் நிலந்திருத்தி சமரசசந் மார்க்க
நீதிசுய மரியாதை நெறிவிதையை யூன்றி
நீசபுரா தனப்பழக்க நெடும்பறவை யோட்டி
ஆதரையிற் பேரன்பாம் அரும்புனலே பாய்ச்சி
அரியபகுத் தறிவெனுமோ ரடர்வேலி நாட்டி
ஏதமிலா சாத்வீக காவலரால் காத்த
இனியசுதந் தரக்கனியை யெடுத்துண்ண வாரீர்.

(தில்லையம்பலத்தல என்ற மெட்டு)

இராகம்: உசேனி — தாளம்: ரூபகம்

சுதந்தரக் கனிப் பழுத்திருக்குதாம் – அதை யறுத்துப் புசிக்க
சுறுக்காய் மக்களை வர வழைக்குதாம். (சுதந்

இதமிகும்பெரி யோர்பயிரிட்டதாம் -இந்த உலகில் பொதுவாய்
எல்லோரும்போய் கொள்ளவுட் பட்டதாம். (சுதந்

எட்டு திசையும் சுகந்தம் வீசுதாம் - அதை அடைய முயற்சி
எடுத்தெக்காலும் தொடுத்துப் பேசுதாம். (சுதந்

கையைக் காட்டி நம்மைக் கூப்பிடுதாம் - பகுத்தறிவில்லாத
காக்கைக் கிளியும் நோக்கிச் சாப்பிடுதாம். (சுதந்

தூங்கிக் கிடந்தால் பங்கு வந்திடுமா - சகோதரர்களே
துணியாவிடி லணில் விழுங்கிடுமாம். (சுதந்

எனக்குனக்கென்று போட்டி போடுறார் - உண்மை தொண்டர்கள்
எங்கணுமகா சங்கம் கூடுறார். (சுதந்

சுவைக்க நாவோ மிகப் பதைக்குதே - முரு கேசனறிந்து
சொல்லுந் தமிழால் உள்ளங் கதிக்குதே. (சுதந்

ஜாதிக் கொடுமை

(விடமாட்டேன் விடமாட்டேன்) என்ற மெட்டு

பல்லவி

பரிதாபம் பரிதாபம் - பாரில் ஜாதிக் கொடுமை

சரணங்கள்

அரிதான மானுடவர்க்கம் ஆறறிவு பெற்றிருந்தும்
பெரிதான வித்தியாசம் பேசிடவே மிக மோசம் (பரி

நந்தனார்பாணன் தன்னை நடுவில் வைத்துத் தொழுவார்
அந்தவம் சத்தினரை அண்டவிடா தழுவார் (பரி

ஆளுக்கு ஆளடிமை வந்தோமிகக் கொடுமை
நாளுக்குநாள் வறுமை நாட்டிலில்லையே பொறுமை (பரி

பன்றிநாய் எறுமைதன்னைப் பட்சமாய் தொட்டுக் கொள்வார்
நன்றிகெட்டோர் மக்கள் தம்மை நாடாமல் விரட்டிதள்வார் (பரி

இறைவன் சிருட்டியிலே ஏழுகோடி மாந்தர்களை
பறையர் பஞ்சமரென்ற பழிச்சொல்லைக் கேட்க மிகப் (பரி

கங்கையில் குளித்தென்ன கடவுளைப் பூஜித்தென்ன
சங்கநூல் படித்தென்ன சமத்துவ மில்லாதவர்கள் (புரி

படமாடும் பொம்மைகட்கு பால்பொங்கல் படைக்கின்றார்கள்
நடமாடும் சாமிகளை நாடாமல் அடிக்கின்றார்கள் (புரி

ஆதியிலே ஆண்டவனும் ஆண்பெண்ணையே படைத்தார்
பாதியிலே மிலேச்சரெல்லாம் பலவகையாய் செய்துவிட்டார் (புரி

இடையில் வந்தமடையர் ஈனகுணத் தடியர்
கடைச்சாதி யென்றுசொல்லி கட்டுக்கதை யெழுதிவிட்டார் (புரி

அன்புடைய வறிஞர்பல ரஞ்சாம லுழைக்கின்றார்கள்
என்புதோல் மனிதரெல்லாம் ஏமாந்து விழிக்கின்றார்கள் (புரி

கப்பல்ரெயில் தந்திதபால் கலாசாலை ஆஸ்பத்திரி
ஒப்பும் சத்தியம் நீதிமன்ற மோங்குமிங்கிலீஷாளுகையில் (புரி

மண்டலத்திலினி யேனும் மயங்காம லெழுந்திருங்கள்
தொண்டன் முருகேசன் சொல்லும் தண்டமிழை யுணர்ந்திடுங்கள் (புரி

ஞானக் கண்மணி

மெய்ஞான தங்கம் என்ற மெட்டு

ஜாதிகளில்லை யென்பார் சாத்திரமுறைக்கு தென்பார்
நீதியின்படி நடவார் கண்மணி
நீசர்களாவாரடி – ஞானக்கண்மணி

அன்பே சிவமென்பார் அஃதில்லார் மாடென்பார்
தன்மநிலை யறியார் கண்மணி
தரையிலிருந் தென்னடி – ஞானக்கண்மணி

சத்தியம் அன்புக்கீந்த சகத்திலீ டில்லையடி
பித்தர்கள் பொய்வேதமே கண்மணி
பிதற்றுவார் நம்பாதடி – ஞானக்கண்மணி

அவதாரப் புருஷரெல்லாம் அன்பொன்றையே பொழிந்தார்
விவகாரந் தானறியார் கண்மணி
வீணர்களாவாரடி – ஞானக்கண்மணி

நாட்டைக் கெடுத்து விட்டார் நாலாயிரஞ்சாதி
கோட்டையைக் கட்டிவிட்டார் கண்மணி
கொடுமைகள் செய்துவிட்டார் – ஞானக்கண்மணி

நான்முக னுாருடலில் நாற்சாதி வந்த தென்பார்
ஏனையஜாதி யெல்லாம் கண்மணி
எங்கிருந்து வந்ததடி – ஞானக்கண்மணி

அங்கங் குறைந்திட்டதோ ஆதித்ராவிடர்க்கு
பங்கமே தேனுமுண்டோ கண்மணி
பார்த்திதை சொல்வாயடி – ஞானக்கண்மணி

குக்கல் செத்துக் கிடக்கும் குறுணியமுக் கிருக்கும்
மக்கள் குளத்துநீரை கண்மணி
மறந்துந் தொடக்கூடாதாம் – ஞானக்கண்மணி

பசுவின்பாலை யெடுத்து பருகல்லிலூற்றிடுவர்
சிசுவக்களிக்க மாட்டார் கண்மணி
சீ இவர் கெட்டாரடி – ஞானக்கண்மணி

ஏதாவதோராடை இல்லாதவர்க் கீயார்
பீதாம்பரம் சாத்துவார் கண்மணி
பேசாதசாமிகட்கு – ஞானக்கண்மணி

வாயில்லா சாமிகட்கு வடைதோசை தானமளிப்பார்
தாய்தந்தைக் கீயாரிவர் கண்மணி
தரையிலிருந்தென்னடி – ஞானக்கண்மணி

சிலைக்கெண் ணெய்ஊற்றிடுவார் சீக்காய்தூள் தூவிடுவார்
தலைக்கெண்ணெய் ஊற்றாரிவர் கண்மணி
தர்மிஷ்டராகாரடி – ஞானக்கண்மணி

செல்வத்தை நல்வழியில் செலவாக்கா லோபிகளும்
பெல்லத்தை கங்கையிலே கண்மணி
பெருமையாயெறிவாரடி – ஞானக்கண்மணி

சாமிக்களித் தமயிர் சவுரிமயிரென்று
பூமிக்குள் பணமாகுதே கண்மணி
புல்லர்கள் பிழைப்பீதடி – ஞானக்கண்மணி

கொளுத்திக் கும்பிட்டுத் தொழ கோயில் சாமிகளுக்கு
அளித்தக்கற் பூரமெல்லாம் கண்மணி
அர்ச்சகன் கூடையிலே – ஞானக்கண்மணி

கடவுளும் வேண்டுவது கற்பூரம் திரவியமோ
மடமைதா னென்னவடி கண்மணி
மாசில்லா அன்பில்லையே – ஞானக்கண்மணி

சாமியின் பேரைச் சொல்லிச் சந்ததம் உண்டிபணம்
சேமித்து வயிர்வளர்ப்பார் கண்மணி
செகத்தி லநேகருண்டு – ஞானக்கண்மணி

ஊரையே வஞ்சிப்பார் ஓயாபாவம் செய்வார்
தேரையே சிங்காரிப்பார் கண்மணி
தெய்வத்தை யேமாற்றுவார் – ஞானக்கண்மணி

கமிஷன் ஏஜெண்டாக கடவுளை நியமித்து
நிமிஷமோர் பாவம்செய்வார் கண்மணி
நெய்விளக் கேற்றிடுவார் – ஞானக்கண்மணி

தேகாலயத்தில் வாழும் தேஜோன் மயப்பொருளின்
வாகான நிலையறியார் கண்மணி
வாசித்துப் பூஜித்தென்ன – ஞானக்கண்மணி

ஈசனெனயெண்ணி யெல்லா வுயிர்களையும்
நேசிக்க வகையறியார் கண்மணி
நெறியில்லா மானிடர்கள் – ஞானக்கண்மணி

பல்வழியில் வீணே பணத்தைச் செலவழிப்பார்
கல்விக் களிக்காரிவர் கண்மணி
கர்மிகளாவாரடி – ஞானக்கண்மணி

ஜாதியிலே பிறந்து தன்மட்டிலே வாழ்ந்து
பாதியில் மண்ணாவரே கண்மணி
பாரந்தான் பூமிக்கிவர் – ஞானக்கண்மணி

எச்சில் மொந்தையைக் கையாலெடுத்துக் கள்ளைக் குடிப்பார்
மெச்சும் மேல்ஜாதி யென்பார் கண்மணி
மேன்மையும் ஏதுக்கடி – ஞானக்கண்மணி

மலமுண்ணும் கோழிப்பன்றி மாமிசத்தை யுண்பார்
குலசிரேஷ்டெரென்று சொல்வார் கண்மணி
கூறவும் வெட்கமடி – ஞானக்கண்மணி

மாயக்கார் பொய்வேதம் மநுதர்ம சாத்திரம்
சாயுநற் காலமிது கண்மணி
சமதர்ம காலமிது – ஞானக்கண்மணி

மூடப்பழக்கங்களை முற்றிலுமே யொழித்து
நாடுசு தந்திரம்பெறக் கண்மணி
நாம் கண்ணைத் திறப்போமடி – ஞானக்கண்மணி

ஜாதிமதப் பேய்க்கு சாவுமணி யடித்துவிட்டார்
பாதகமதுப் பேய்க்கு கண்மணி
படுகுழி தோண்டிவிட்டார் – ஞானக்கண்மணி

ஜயஇங்கிலீஷ் கொடிவாழ்க ஜாதிப்பேய் கீழ்தாழ்க
சுயமரியாதை சூழ்க கண்மணி
சுதந்திரம் பெருகுமடி – ஞானக்கண்மணி

இன்னுங்கூற வென்றா லேடிடங் கொள்ளாது
மன்னு முருகேசன்சொல் கண்மணி
மங்களம் பொங்குமடி – ஞானக்கண்மணி

ஜாதி ஒன்றே

நம்பிக்கை கொண்டெல்லாரும் கைராட்டை சுற்றுவோம்

இராகம்: இந்துஸ்தான் காப்பி   தாளம்: ஆதி

பல்லவி

ஜாதியொன்று சமய மொன்று
சாத்ர மொன்றுதான்
சாத்ர மொன்றுதான் – உள்ளக்
கோத்ர மொன்றுதான்.   (ஜாதி

அநுபல்லவி

நாதவிந்துவின் தோற்றம் – உலகில்
நானாஜீவர்கள் ஆற்றம் – இடையில்

நாட்டினிலாரியர் மாற்றிய கூட்சியே
காட்டிடு மநுதர்ம சாத்திரஞ் சாட்சியே. (ஜாதி

தொகையறா

பிறப்பு மொன்றே புலன்பொறிகள் பூதமொன்றே
பெண் களுக்கும் ஆண் களுக்கும் குறிக ளொன்றே
இறப்பு மொன்றே ஊனுறக்க மின்ப துன்பம்
இரவி மதியும் வெயில் மேகம் இளமூப் பொன்றே
மறப்பு மொன்றே நினைப்பு மொன்றே பத்து திங்கள்
மாதாவின் கருப்பைக்கு ள்ளிருந்த தொன்றே
சிறப்பு மொன்றே தாழ்வொன்றே நித்ய மில்லா
சீழ்வடியும் ஊத்தைச் சரீர மொன்றே.

பாட்டு

சீவனும் தேவனு மொன்றே – இதைச்
சிந்தித்துப்பா ரின்றே – நலஞ்
செப்புமதுரக் கவிமுருகேசன்
ஒப்பில்லாச் செந்தமிழ் மிக நன்றே. (ஜாதி

ஜாதி பேயாட்டம்

வன்னத் தினைமாவைத் தெள்ளியே என்ற மெட்டு

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: ரூபகம்

கண்ணிகள்

ஜாதிப்பேய் தலைவிரித் தாடுதே – கற்ற
சற்சனர்கள்மனம் வாடுதே – பூமி
சமரச மெங்கணுந் தேடுதே சிலச்
சண்டாளர்கள் பொய்வேதமே
கண்டுவரைந்தார் நீதமே
சகத்தினை கெடுத்து விட்டாரே – அவர்கள்
சுகத்தினில் களித்துப் பட்டாரே. (ஜாதி

அன்பு சத்யம்தயை போச்சுதே – வீணர்
ஆர்பாட்ட மிகுத்திட லாச்சுதே – அவர்கள்
அநியாயம் வெகுவாக பேச்சுதே – இது
ஆரியர் செய்த வுபாயம்

பாரினில் பரவிய மாயம்
அருமறை நூலிலு மில்லையே - இருந்தால்
தரும முறைப்படி சொல்லையே. (ஜாதி

எண்டிக்கும் புகழும் நேசனே - குரு
எல்லப்பதாசரின் சீஷனே - கற்றோர்க்
கெளியேன் மதுரக்கவி ராசனே - நல்ல
எழில்மிகு கொண்ணூர் வாசன்
மொழி முத்தமிழ் முருகேசன்
ஏட்டினாலெழுதிப் போகுமா - இன்னும்
பாட்டாகப் பாடவு மாகுமா (ஜாதி

தீண்டாமை தீமை

பாங்கிக் கண்ணிகள்

இராகம்: செஞ்சுருட்டி — தாளம்: ஆதி

தீண்டாமை தீமையடிப்	பாங்கி - இந்து
தேசஞ்சீர் கெட்டதடிப்	பாங்கி
ஆண்டவன் சிருட்டியிலே	பாங்கி - ஒரே
ஆண்பெண்ணை யன்றிவுண்டோ	பாங்கி
தீண்டாமை யென்பதுதான்	பாங்கி - பாம்பு
தேள்நெருப்பு மின்சாரம்	பாங்கி
வேண்டாம் மக்களில்பேதம்	பாங்கி - சத்ய
வேதத்தி லில்லையடிப்	பாங்கி
ஆதித்திரா விடர்க்குப்	பாங்கி - மெச்சும்
ஆறறிவு தானில்லையோ	பாங்கி
நீதியாய் நீசொல்லடிப்	பாங்கி - ஜாதி
நெற்றியில் பட்டமுண்டோ	பாங்கி
வேற்றுமை விருக்ஷத்தைப்	பாங்கி - கீழே
வேரொடு வீழ்த்திடடிப்	பாங்கி
கூற்றினுங் கொடியதுப்	பாங்கி - வாயால்
குலத்தாழ்ச்சி சொல்லுவது	பாங்கி
பேதமை யகற்றடிப்	பாங்கி - ஜாதிப்
பிரிவினில் தீமூட்டடிப்	பாங்கி

காதகர் கட்டுகதைப் பாங்கி – இதைக்
கனவி லெரித்திடடிப் பாங்கி

பிரமனிடம் நாலுஜாதிப் பாங்கி – வந்தால்
பிள்ளைப்பெரும் நாலுயோனி பாங்கி
கிரமமாயிருக்க வேண்டும் பாங்கி – சொல்லக்
கேவலமே யதாகும் பாங்கி

போகத்தில் பேதமுண்டோ பாங்கி – குழந்தைப்
பிறப்பினால் பேதமுண்டோ பாங்கி
தேகத்தில் பேதமுண்டோ பாங்கி – நாதவிந்து
சிவப்புவெள்ளை யொன்றல்லோ பாங்கி

செத்தபின் ஜாதியெங்கே பாங்கி – நீ
செய்தொழில் சிறப்புமெங்கே பாங்கி
வைத்தப் பொன் பொருளெங்கே பாங்கி – உந்தன்
வாழ்மனைச் சுற்றமெங்கே பாங்கி

பேதமொழிக்க வேண்டும் பாங்கி – மிகப்
பேதைகள் வாழவேண்டும் பாங்கி
நிதஞ்செழிக்க வேண்டும் பாங்கி – அன்பு
நிலைத்துமெய் யோங்கவேண்டும் பாங்கி

பிறப்பால்வேற் றுமையுண்டோ பாங்கி – யோனி
பீஜத்தில் பேதமுண்டோ பாங்கி
சிறப்பும் சீலமுள்ளவர் பாங்கி – யாரும்
சீரியராவரடிப் பாங்கி

ஜாதியின் செருக்கினால் பாங்கி – குடியர்
சண்டாளர் திருடர்மூடர் பாங்கி
நீதியான மக்களைப் பாங்கி – கண்டால்
நிந்திக்க காலமாச்சே பாங்கி

ஆருக்கும் வேண்டுவதுப் பாங்கி – மெய்
யன்பைத் தவிரவுண்டோ பாங்கி
பாருக்குள் மன்னுயிர்க்கும் பாங்கி – இரங்கும்
பக்தியிது தானடிப் பாங்கி

ஜாதியின் வேற்றுமையால் பாங்கி – உலகில்
சங்கட மாச்சுதடிப் பாங்கி

ஆதிபார தத்தாயின் பாங்கி – மக்கள்
அவஸ்தைப்படல் நீதியோ பாங்கி

ராமகிருஷ்ணப் பரமஹம்சர் பாங்கி – செயலால்
நடந்து காட்டினார்வழிப் பாங்கி
சாமி விவேகானந்தர் பாங்கி – சொன்ன
சத்தியத்தைப் பாரடிநீ பாங்கி

கோயிலில் சுணங்கனும் பாங்கி – காணக்
கூசாமலோடுதடிப் பாங்கி
நாயினுங் கேவலமோ பாங்கி – மக்கள்
நல்லீசன் சேயரல்லோ பாங்கி

தேரைப் பிடித்திழுக்கப் பாங்கி – ஆதி
திராவிடரே வேண்டுமாம் பாங்கி
ஊரையே வஞ்சித்தார் பாங்கி – கோயில்
உள்ளே போகக்கூடாதாம் பாங்கி

பறையர் பஞ்சமரென்றப் பாங்கி – பெரும்
பாவம் பலிக்குமடிப் பாங்கி
குறையால முதக்கண்ணீர் பாங்கி – மிகக்
கூரிய வாளாகும் பாங்கி

தீப்பிடித்த பஞ்செனவே பாங்கி – ஆதி
திராவிடர் வயிறெரிய பாங்கி
காப்பின்றி கனவான்கள் பாங்கி – அவர்கள்
கஷ்டத்தை யுண்டுவாரார் பாங்கி

மாட்டிலுங் கேவலமாய் பாங்கி – பாரத
மக்களை நடத்துகின்றார் பாங்கி
நாட்டில் சென்றுபாரடிப் பாங்கி – அவரை
நசுக்கிச்சாறு பிழிகின்றார் பாங்கி

நரன்செய்த சாமிகட்குப் பாங்கி – புகழ்
நல்லுபசாரஞ் செய்வார் பாங்கி
அரன்செய்த சாமிகளைப் பாங்கி – சற்றும்
ஆதரிப்பா ரில்லையடிப் பாங்கி

தாழ்த்தப்பட்டாரில்லாமல் பாங்கி – பெருந்
தனபாக்யம் பிறர்க்கேதுப் பாங்கி
வாழ்ந்தோர்கள் முடிவிலே பாங்கி – கூட
வாரிக்கொண்டு போனதென்னப் பாங்கி

ஆதிப்பரப் பிரம்மம் பாங்கி – உயிரை
ஆக்குமக் காலையிலே பாங்கி
ஜாதிகளில் லையடி பாங்கி – இடையில்
சாதித்தார் கட்டுச்சொல்லை பாங்கி

வேற்றுமை யொழிக்கவே பாங்கி – மெய்யாய்
வேலைசெய்யன்பர் பதம் பாங்கி
போற்றியே முருகேசன் பாங்கி – நீதிப்
புகன்றசெந் தமிழ்க்கலைப் பாங்கி

மோசம்

(அப்பா பழனிமலை வேலா எனும் இசை)

இராகம்: சஹானா தாளம்: ஆதி

கண்ணிகள்

அந்தோ ஈதென்ன வெகுமோசம்-நாட்டில்
அநியாய ஜாதி வித்தியாசம்
வந்துவிட் டதேபெரும் நாகம் – நம்
வயிறெரிகறிதேயா பாசம் (அந்தோ

பள்ளியில் படித்திடவும் சேர்க்கார் – பொது
பாதையில் நடக்கவும் பார்க்கார்
உள்ளக்குறிப்பறிய மாட்டார் – சும்மா
ஓதுவார் வேதம்வெகு நீட்டாய் (அந்தோ

தண்ணீரெடுக்க விடமாட்டார் – குணத்
தண்முகமொரு போதுங் காட்டார்
கண்ணீர் சொரினும்இதம் நாட்டார் – சும்மா
கடிந்துகொள் வார்நீதி கேட்டால் (அந்தோ

பச்சென்றிருந்தால் வயிறெறிவார் – சும்மா
பார்த்துப்பார்த்துக் கண்ணீர் சொரிவார்

இச்சகத்திலிவரோ பெரியார் – அன்பு
இல்லாதா ரிவரெல்லாஞ் சிறியார் (அந்தோ

நாய்எருமை ஆடுமாடு தன்னை – அவர்
நடுவீட்டில் கொண்டுபோவார் முன்னே
வாயுள்ள மக்கள்வர்க்கம் பின்னே – சேர்ந்து
வரவொட்டார் தொடமாட்டா ரென்னே (அந்தோ

தன்னைப்போல் மனிதனென் றெண்ணார் – சிறிதும்
தகையன்பு சத்தியமே நண்ணார்
என்னகற்றாரிவர் தன்னால் – செத்தால்
எரிநரகில் விழுவார் பின்னால் (அந்தோ

சண்டாளர் செய்திட்டார் சூது-நம்
சாபம்வீ ணாகப்போ காது
தொண்டர் களேயினி தப்பாது – மேல்
துணிந்தெழுவீ ரிப்போது (அந்தோ

மாடுஆடு நாயைக் கேட்பா ரில்லை – நல்ல
மனிதருக்கே பெருந் தொல்லை
கூடுமோ வென்று கேட்டால் பல்லை – காட்டிக்
கூறிடுவார் பொய்வேதச் சொல்லை (அந்தோ

சட்டைக்கோட்டுப் போடக் கூடாதாம் – வண்டியில்
சரியாய் குந்திபோகக் கூடாதாம்
விட்டுத் துணிகட்டக் கூடாதாம் – நாமம்
விபூதியும் போடக் கூடாதாம் (அந்தோ

ஆதிதமிழர் நீங்களென்று – அஞ்சா
தடியும் ஜெயபேரிகை யின்று
பாதியில் வந்தோர் உம்மை வென்று – மிகப்
பழித்தனர் பாவிகள் நின்று (அந்தோ

ஆபத்தில் உம்மைவர வேற்பார் – பின்
அதொழிந்தால் பறையாவென் றேய்ப்பார்
பாபத்தை யிவரெப்போ தீர்ப்பார் – கீதம்
பகர் முருகேசன்தமிழ் பார் பார் (அந்தோ

அநியாயக் காலம்

கண்டாலானந்தமே என்ற மெட்டு

பல்லவி

அநியாயக் காலமே அந்தோவலங் கோலமே. (அநி

அநுபல்லவி

இனியாகிலுமிந்தியா எழாவிடில் கேவலமே (அநி

சரணங்கள்

மனிதவர்க்கத்தினுள்ளே மருவுநாலு ஜாதியாம்
மறையோன் முகத்தில் புஜத்தில் தொடையில் அடியில்வந்த நீதியாம்
புனிதமெண்ணா ஆரியர்கள் பொய்புரட்ட நீதியாம்
போலிவேத சாஸ்திரங்கள் கேலிசெய்யும் வாதியாம்

புலையர் பஞ்சமர்களென்ற பேச்சியும் – உள்ள
புவியிலிவர்க் கேது சுய ராச்சியம் – வீணாய்
அலைவதேனோ அதுமிக பூச்சியம் – நன்றாய்
அஞ்சாமலே நெஞ்சில் நீங்கள் யோசியும்

ஆலயத்தில் ஜாதி
அம்பட்டன் கடையில் ஜாதி
சாலவோட்டலில் ஜாதி
சர்க்கார் தொழிலிலும் ஜாதி (அநி

கோயில் சாமிபேரில் பல்லி ஈஎலியும் ஓடுதே
கூடாதோ மக்கள் தொடவும் பாடாய்மனம் வாடுதே
வாயில்வந்த தெல்லாம்கட்டு கதைதாளம் போடுதே
வழக்கபழக்க மெல்லாம் முழக்கமாய் நீடுதே

வாதுசெய்யும் ஜாதிபேயைத் துறத்தி – பெரும்
வங்காளக் குடாக்கடலி லமிழ்த்தி – அரு
நீதி சுயமரியாதையை திருத்தி – நாம்
நித்தமன்பு சத்தியத்தை நிறுத்தி

நிமிர்ந்துமே எழுமின்
நேசரேகண் விழிமின்
அமர்ந்தொன்றா யுழைமின்
அனைவரையு மழைமின்

வள்ளுவர் திருக்குறளை எல்லாருமே போற்றுறார்
வாகாய் ஔவையார் நூலை வன்மையாக ஏற்றுறார்
கள்ளமில்லாத வும்மை யுள்ளபடி தூற்றுறார்
கண்டால் தொட்டால்கேட்டால் தீட்டுஎன்றல்லவோ சாற்றுறார்

காருண்ய கவர்ன்மெண்ட்டாரைக் கூடுங்கள் - அவரைக்
கனதாய் தந்தையர் போலத் தேடுங்கள் - இந்தப்
பாரினில் சமத்துவமே நாடுங்கள் - சொல்லும்
பக்தன் முருகேசன் தமிழ் பாடுங்கள்.

பலமாயொன்று சேரும்
பரிவுடனெல் லோரும்
குலாபிமானம் பாரும்
கொஞ்சும் வீரர்களே நீரும் (அநி

பாருங்கள்

கோருங்கள் கோருங்கள் என்ற மெட்டு

இராகம்: தேசிகதொடி தாளம்: ஆதி

பல்லவி

பாருங்கள் பாருங்கள் பாருங்களே - கூடி
வாருங்கள் வாருங்கள் வாருங்களே

அநுபல்லவி

பாரில் தீண்டாக் கொடுமை நேரில் வேண்டாதடிமை (பாரு

சரணங்கள்

சேருங்கள் திரவியம் சிக்கனந் தொடுத்து
தேசத்தில் கல்விகைத் தொழிலைக் குரித்து
தேருங்கள் ஒற்றுமையைக் கடைப்பிடித்து
தேழநலம்நாடி யிதங்கூடி நாமே பீடுபெற (பாரு

கையில் குடையும் பிடிக்கக் கூடாதாம்
காலில் பாதரட்சைப் போடக் கூடாதாம்
ஐயோ யிதனா லிவர்க்கென்ன தீதாம்
அநியாயமே யினியாகிலுங் கனிவாகவே மனங்கூடியே (பாரு

ஜாதிச் செறுக்குச் சமயச்செறுக்கு
சாத்திரச் செறுக்கு கோத்திரச் செறுக்கு
பாதியில் பணத்தால் மீறியச் செறுக்கு
பழிபாபமே மனஸ்தாபமே மிகுகோபமே வருதாபமே (பாரு

உற்றுநினைத்திட வுள்ளமே யெரியும்
உண்மையன்பருக்கு கண்ணீரும் சொரியும்
முற்றுமுணர்ந்தவர்க் கல்லவோ தெரியும் முறையோ
மநுநெறியோ உம்மைபறையா வெனக்குறையைப் போக்க

ஆங்கிலராச்சியத் திலிந்தப் பேதம்
ஆனால் சுயராச்சி யத்திலென்னாகும்
பாங்குடனே நீங்களே யோசித்துப் பாரும்
பணிந்தேன் சிரங்குனிந்தேன் சொல்லத் துணிந்தேன்
மனங்கனிந்தேயிதைப்

குதிரையாட்டை மாட்டை யாகத்தில் கொன்று
கூசாமலாரியர் கூடியே தின்று
எதிரேவுங்களைப் புலையர்களென்று
ஏசி மிகப் பேசி வாயால் தூஷிப்பதை ரோஷமாக (பாரு

இந்தியரென்ற நற்பேருக்கே அழிவு
இன்னும் பொருத்திட்டால் மென்மேலும் இழிவு
வந்திடுந்தப்பா தெழுந்திரும்ஒழிவு
வாட்டம்மன் நாட்டமாக கூட்டங்கூடி கேட்டை நீக்க (பாரு

வியாதி வந்தாலேற்ற மருந்தைக் கூட்டி
வீண்பொங்கல்மந்ர தந்ரமதையோட்டி
நியாயவழியில் மதிநிலை நாட்டி
நீதிநெறி யோதுங்குண ஆதித்தமிழ் சோதரரே. (பாரு

நாற்றிசையிலும் சமத்துவம் சூழ்க
நங்குலவநுதாப நாதாக்கள் வாழ்க
வேற்றுமை விருட்சம் வேரோடு வீழ்க
வேதப்பொய் ஜாதிப்பொய் தீதாமநு நீதிப்பொய்யை (பாரு

எத்தனைப் பார்ப்பனர் எத்தனை மன்னர்கள்
எத்தனை வைசியர் எத்தனை சூத்திரர்
அத்தனை பேரையும் மண்ணுண்டு போகுதே
அந்தோ ஜாதிநிந்தை யென்னவிந்தையிதை முந்தி போக்க (பாரு

மதுரக்கவிமுரு கேசன் நல்வாக்கின்
மர்ம மறிந்திதன் நன்மைசீர் தூக்கி
பதியில்சமரச பாதையை நோக்கி
பண்பாய் மிகஅன்பாய் வெகுதென்பாய் கண்முன்பாகவே.

கண்விழிப்பீர்

இராகம்:இந்துஸ்தான் பியாக் தாளம்: ஆதி

பல்லவி

ஆதித்திராவிடரே கண் விழிப்பீர்
அனைவரும் சேர்ந்தொன்றா யுழைப்பீர் (ஆதி

அநுபல்லவி

ஜாதியிலுயர்ந்தவர்களென்று சொல்லும்
நீதியில்லாப் பாதகரை நின்று வெல்லும். (ஆதி

சரணங்கள்

பண்டையத் தமிழர்கள்நா மென்று
பாரினி லஞ்சாமற்பு கன்று
தொண்டர்தம் படையைத் திரட்டிக் கொண்டு
துணிந்துயிர் போனால்போகு தென்று (ஆதி

ஒற்றுமை யன்பைக் கடைப்பிடித்து
ஒரே குடும்பங்களென வடுத்து
சற்றுந் தயங்காமல்நிதி சேர்த்து
சமத்துவ மடைந்திடும் வழிப்பார்த்து (ஆதி

தீங்கிழைக்கு மதுவெறி நீக்கி
தீவிர மாகவேமே னோக்கி
ஓங்குங்கல்வி கைத்தொழிற் பெருக்கி
ஓயாதுழைப்பீர் மனமுறுக்கி (ஆதி

மெத்தைகள் பெருத்தது யாராலே
மேன்மையுண்டானது யாராலே
சொத்துக்கள் பெருத்தது யாராலே
சோதித்துப் பாருங்க ளினிமேலே (ஆதி

புளித்தக் கூழைநீர் குடித்தீரே
பொங்கல் சாதமவர்க் களித்தீரே
களித்தவர்கள் சுகமே வாழ
கவலைகளடைந்தீரே தாழ (ஆதி

அடிமை வாழ்வைத் தொலைத்திடுங்கள்
அஞ்சாசிங்கம் போல் நிலைத்திடுங்கள்
படியில் நம்மைப் பிடித்திடுங்கள்
பார்த்துக் கெடுப்பதை யொழித்திடுங்கள் (ஆதி

மூடப் பழக்கமே நீக்கிடுங்கள்
முன்னேறும் வழியே நோக்கிடுங்கள்
நாடு செழிக்கவே யோசியுங்கள்
நாடோறும் பத்திரிகை வாசியுங்கள் (ஆதி

இதுவுமக்கேற்ற நற்காலம்
இனி வேண்டாமப்பா ஜாலம்
மதுரிதமுருகே சன்கீதம்
மண்டலந் தனிலேநற் போதம் (ஆதி

எழுந்திருங்கள்

(பாரினிலே புகழ் பாரதப் புத்திரரே என்ற மெட்டு)

பல்லவி

அஞ்சாதெழுந்திரும் ஆதித்திராவிடரே – பாரத
அன்னையின் சேயரே

அநுபல்லவி

மிஞ்சாதீரெப்போதும் மெய்மையைப் பாரிலே
சஞ்சலமில்லாமல் சாத்வீகப் போரிலே (அஞ்

தொகையறா

தீண்டாமை சட்டத்தைத் தகர்த்தெறிய வெல்லோரும்
சீக்கிரங்கண் விழிக்க வேண்டும்
வேண்டாத சடங்குகளை மந்திரக்கார் மூழுப்புரட்டை
வெறுத்துக் கல்வி யோங்கவேண்டும்.

வீண்டம்ப செலவுகளைக் குறைக்க வேண்டும் கெட்ட
வெளிச்சம்பந்த மொழிக்கவேண்டும்
மாண்டாலும் சத்தியத்தில் மாளவேண்டும் பால்ய
மணநீக்கி சுகிக்க வேண்டும்.

பாட்டு

மாசில்லா வொற்றுமை தீரவை ராக்கியமே – ஏழை மக்கள் சிலாக்யமே
ஆசை மிகுமுரு கேசன்சங் கீதமே
அன்பும் அளவில்லா இன்பஞ்சேர் நீதமே (அஞ்

வாலிபர்

ஸ்ரீ ராமபாதமா என்ற மெட்டு

இராகம்: அமிருதவாகினி தாளம்: ஆதி

பல்லவி

வாலிப வீரரே வளமிகு சூரரே வாடாமலுழைப்பீரே

அநுபல்லவி

போலிகள் கூற்றை பொய்வேதமாற்றை
போக்கி தன்
மாக்கி அன்பை
தேக்கி நன்மை
நோக்க இன்ப (வாலிப

சரணங்கள்

சிங்கம்போல் நில்லுமே சிரத்தையாய் புல்லுமே
சீறுவோரை வெல்லுமே
மங்களஞ்சொல்லுமே மாயத்தைக் கொல்லுமே
மக்கள் வாழ்க
அக்ரமம் வீழ்க
துக்கம் மாழ்க
வெட்கம் தாழ்க (வாலிப

சமத்வம் சகோதரம் சமரசமாதரம்
சன்மார்க்க மொன்றேதரம்
அமைத்துநம் நாட்டில் அழிப்பீரேகேட்டை

ஆவ லாக
பூவிற் புகழ்
மேவப் பொதுச்
சேவை செய்ய (வாலிப

தமரச் செழிக்கவே தருமந்தழைக்கவே
தாரணி விழைக்கவே
சமதர்மலிர்த்தியே சமைப்பீர்கள் பத்தியே
சங்கங் கூட்டும்
தூங்கங் காட்டும்
பங்க மோட்டக்
கங்கணாங் கட்டும் (வாலிப

சற்குணாங்காட்டுமே ஜாதிப்பேயை யோட்டுமே
சமத்துவக் கொடி நாட்டுமே
நற்பணிக் கூட்டுமே நன்மை சிரேட்டமே
நாடு தியாக
கூடு விவேக
நீடு போக
தேடு யூக (வாலிப

வெறுந் திண்ணைச் சீட்டு வீண்விளையாட்டு
வெறுத்துத் தள்ளிப் போட்டு
தருமம் பாராட்டு தண்முகங் காட்டு
தாசன் முரு
கேசன் சொல்லும்
வாசத் தமிழ்
பேசி வெல்லும் (வாலிப

ஈசன் தொண்டு

தாதிக் கண்ணிகள்

(பாப்பா பாட்டு இசை),

ஏழைகட்கு செய்யும் தொண்டே தாதி – ஜெகத்
தீசன் தொண்டென்றறிவாய் தாதி
வாழையடி வாழையாக தாதி – என்றும்
வாழ்ந்தின்பம் பெற்றிடுவாய் தாதி

கோணாமல் பல்லுயிர்க்கும்	தாதி – அன்பு
கூறாதவர் களெல்லாம்	தாதி
காணாத கடவுளை	தாதி – எப்போ
கண்டடையப் போகிறாரோ	தாதி
இலங்கு முயிருடல்கள்	தாதி – யாவும்
ஈசனார் கோயிலென்று	தாதி
துலங்கு மறிஞர்மொழி	தாதி – போற்றித்
துதிக்கத் தக்கதல்லவோ	தாதி
எல்லார்க்கும் அன்பனாக	தாதி – உலகில்
இருந்து சாவது மேன்மை	தாதி
பொல்லாத லோபியென்றால்	தாதி – உயிர்
போனாலும் தாழ்ச்சியடி	தாதி
கடமுள்ள போதேநன்மை	தாதி – உண்மை
காதலாய் செய்ய வேண்டும்	தாதி
உடல் விழுந்தாலினி	தாதி – பின்னால்
ஒன்றுக்கு முதவாதடி	தாதி
நன்மைசெய்யா தாரெல்லாம்	தாதி – சொறி
நாயினுங் கடையாவார்	தாதி
உண்மைதொண் பாற்றிவந்தால்	தாதி – செத்தால்
உலகம் கொண்டாடுமடி	தாதி
கூடக்கொண்டு வந்ததென்ன	தாதி – செத்தால்
கொண்டுபோவதெது சொல்வாய்	தாதி –
வாடாதுநன்மை செய்யத்	தாதி – புகழ்
வானகம்மண்ணகம் போற்றும்	தாதி
பற்றித் துடருவது	தாதி – கூடப்
பரோபகார மொன்றே	தாதி
சுற்றிலுமுள்ள போகம்	தாதி – உன்னைச்
சூழ்ந்துவாரா தறிவாய்	தாதி
சத்தியத்தின் பொருட்டு	தாதி – பெரும்
சங்கடம் நேர்ந்தாலும்	தாதி
சித்தங்கலங்க வேண்டாம்	தாதி – முயற்சி
திருவினையாக்குமடி	தாதி

பட்சியொன்றுக்கு அன்பாய் தாதி - புத்த
பகவானிரங்கலையா தாதி
இச்சகத்தி லேசுவும் தாதி - எளியோர்க்
கிரங்கி மரித்தாரடி தாதி

கடவுள் கடவுளென்று தாதி - உற்றக்
காசைத் தொலைக்காதடி தாதி
கடவுளார் வேண்டுவது தாதி - வுந்தன்
காசல்ல மெய்யன்படி தாதி

சுதந்திரமாக வேண்டுந் தாதி - வருணாச்
சிரமப்பேய் சாகவேண்டும் தாதி
இதமோங்கி சூழ்கவேண்டும் தாதி - நீதி
இங்கிலீஷார் வாழ்கவேண்டும் தாதி -

பல்லாயிரமாண்டாய் தாதி - மோசம்
பாராதுறங்கி கெட்டோம் தாதி
நல்லநாள் வந்ததடி தாதி - வீர
நாதாக்க ளெழுந்துவிட்டார் தாதி

வேஷமணிந்து கொள்வார் தாதி - பெரும்
வேதாந்தி யென்றுரைப்பார் தாதி -
மோசம்நீ போகாதடி தாதி - யாவு
முற்றுமுணர்ந்து செய்வாய் தாதி

பெற்றாரைப் பழிக்காதே தாதி - வீண்
பெருமையைப் பாராட்டாதே தாதி -
கற்றாரைப் பழிக்காதே தாதி - அடக்கம்
கடலிலும் பெரியது தாதி -

நீதம்சத்தியம் அன்பு தாதி - உலகில்
நிலைக்க மெய்யற மோங்க தாதி
காதலாய் கசிந்துருகி தாதி - மதுரக்
கவிமுருகேசன் சொன்னான் தாதி

கல்வி

இராகம்: ஆனந்த பைரவி தாளம்: ஆதி

ஆக்கும்

கல்வியே வறிவுண் டாக்கும் கல்வியே நெறியுண் டாக்கும்
கல்வியே வருளுண் டாக்கும் கல்வியே பொருளுண் டாக்கும்
கல்வியே ஞானி யாக்கும் கல்வியே மானி யாக்கும்
கல்வியே கவிஞ னாக்கும் கல்வியே புலவ னாக்கும்
கல்வியே பொறுமை யாக்கும் கல்வியே பெருமை யாக்கும்
கல்வியே அன்புண் டாக்கும் கல்வியே இன்புண் டாக்கும்
கல்வியே கண்ய மாக்கும் கல்வியே புண்ய மாக்கும்
கல்வியே சுத்த மாக்கும் கல்வியே புத்தி யாக்கும்
கல்வியே ஜயமுண் டாக்கும் கல்வியே நயமுண் டாக்கும்
கல்வியே பணமுண் டாக்கும் கல்வியே குணமுண் டாக்கும்
கல்வியே சுதந்திர மாக்கும் கல்வியே சமத்துவ மாக்கும்
கல்வியே கீர்த்தி யாக்கும் கல்வியே சீர்த்தி யாக்கும்

நீக்கும்

கல்வியே மடமை நீக்கும் கல்வியே கடனை நீக்கும்
கல்வியே கள்ளை நீக்கும் கல்வியே கொள்ளை நீக்கும்
கல்வியே வறுமை நீக்கும் கல்வியே சிறுமை நீக்கும்
கல்வியே அடிமை நீக்கும் கல்வியே கொடுமை நீக்கும்
கல்வியே கோபம் நீக்கும் கல்வியே தாபம் நீக்கும்
கல்வியே சூது நீக்கும் கல்வியே வாது நீக்கும்
கல்வியே காமம் நீக்கும் கல்வியே தீமை நீக்கும்
கல்வியே குலத்தை நீக்கும் கல்வியே கொலையை நீக்கும்
கல்வியே பொய்யை நீக்கும் கல்வியே ஐயம் நீக்கும்
கல்வியே அச்சம் நீக்கும் கல்வியே லச்சை நீக்கும்
கல்வியே வஞ்சம் நீக்கும் கல்வியே பஞ்சம் நீக்கும்
கல்வியே துன்பம் நீக்கும் கல்வியே கன்மம் நீக்கும்

கள்ளுண்ணாமை

விருத்தம்

நிந்தனைக்கு ஆளாக்கும் பார்வைமாறும்
நிகரில்லா மூளை தனை நாசமாக்கும்
இந்திரியங் கல்லீரல் இருதயத்தை
இரைப்பை யினைத்தான் கெடுக்கும் ஈடில்லாத
புந்தியழித்திடும் நெஞ்சும் குடலும் சும்மா
பொறுக்காமல் தானெரியும் புலம்பச் செய்யு
மந்தியினைப் போலாடி யலைந்து வீணே
மதுபானந் தனையருந்தி மயங்காதீரே.

தாயென்றுந் தங்கையென்றுங் குடியர்க்கேது
தருமகுணம் அன்புநிலை குடியர்க்கேது
வாய்நாறும் குடியருக்கு சத்தியமேது
வாழ்க்கையிலே இன்பசுகம் குடியர்க்கேது
பேய்போலத் தானலைவர்சாந் தியேது
பேரிடிபோல் கர்ச்சிப்ப ரடக்கமேது
நாயும் நுகராதமது பானந்தன்னை
நன்மையென யிவர்குடித்து நலங்கெட்டாரே

சனியனை விலைகொடுத்து வாங்கலாமா
சதிசெய்யும் கள்குடித்து மேங்கலாமா
அநியாய மாயழிந்து சாகலாமா
ஆத்துமாவை கெடுக்கும்வழி போகாலாமா
கனிவாக இதைக்கேட்டு மறக்கலாமா
கைப்பொருளைத் தானிழந்து மிரக்கலாமா
இனியேனு மிதன் தீங்கைத் தானறிந்து
இன்றைக்கே விட்டொழித்தா லின்பந்தானே.

அடைக்கலமே என்ற மெட்டு

இராகம்: ஆரபி. தாளம்: ஆதி

பல்லவி

குடிவெறியே குடிவெறியே
குணத்தையழிக்கும் பெரும் பணத்தை யொழிக்கும் தீயக்

அநுபல்லவி

படியில் மக்கள் நலத்தை பாழாகச்செய்யும் ஈன
முடிவில்தன் னுயிருக்கே மோசம் மதுபான தீயக் (குடி

சரணங்கள்

சண்டையடி தடிக்கு மீசையை முறுக்கும்.
சத்தியமிழந்து பொய் சாட்சியும் உரைக்கும்
கண்டவர்சிரித்திட கண்மூடிக் குடிக்கும்
காரியுமிழும் பேரைக் கைமேலே கொடுக்கும் தீயக் (குடி

காக்கைபோல் தந்திரமாய் கடைக்குள்ளேயோடும்
கனகிளியெனப் பேசும் குரங்கைப் போலாடும்
மூர்க்கமாய்ப் புலியைப் போல் முன்சீறிவாடும்
முழுமதிபோய் பன்றி முறைமையைத் தேடும் தீயக் (குடி

வாக்குளறும்நா வறண்டுகண் மறைக்கும்
வருவார்போவாரை யெல்லாம் வம்புக்கழைக்கும்
போக்கிரிசெயல்மிகும் பொல்லாங்கே அளிக்கும்
போலீசாரிடம் சிக்கிப் புலம்பி பல்லிளிக்கம் தீயக் (குடி

அருந்தும்போது கொஞ்சம் ஆனந்தங்கொடுக்கும்
அடுத்தடுத்துக் கீழே அடிதண்டம் எடுக்கும்
மருந்தென மதிகெட்டு மாறாமல் குடிக்கும்
மலமூத்ரம் எச்சிலிலும் மகிழ்ந்துமே படுக்கும் தீயக் (குடி

இஷ்டர்களுடன் கூடி யெக்காலும்நேய
இல்லாளுமக்களுஞ்சோ றில்லாமல்காய
கஷ்டப்பட்ட பணத்தைக் கள்ளுஞ்சாராய
கடையிலொழித்துஉற்ற சுதிகெட்ட மாய தீயக் (குடி

உள்ள பொருளிழக்கும் ஓட்டாண்டியாக்கும்.
உற்றதாரம்மக்களைப் பெற்றாரையுந்தாக்கும்
எள்ளளவும்சாந்தி யில்லாமல் நீக்கும்
இறுதியில் வயிறுவீங் கின்னுயிர்போக்கும் தீயக் (குடி

அழித்திடும் மானத்தை ஆயுளைதனத்தை
அறிவினையாண்மையை அருங்கல்விகனத்தை
பழித்திடும்அறிஞரை பாழாக்கும்மனத்தை
படிப்படியாய்வளர்க்கும் முடிவில்லாசினத்தை தீயக் (குடி

ஈரல்இருதயத்தை இரைப்பையைக் கெடுக்கும்
இரத்தம்மூளை நரம்பின் இயல்பையேமடிக்கும்
பாரினில்சத் தரும பலனையேதடுக்கும்
பகர்முருகேசன் தமிழ்பாட்டறிந்துரைக்கும் தீயக் (குடி

மதுநீக்கு ஞானம்பாமாலை

(மாங்காப் பாலுண்டு என்ற
குதம்பைச் சித்தர் பாடல் மெட்டு)

மத்திய பானத்தை நித்தம் விரும்புவோர்க்கு
புத்தியு மேதுக்கடி – ஞானம்பா
புத்தியு மேதுக்கடி

மெத்தவும் எச்சில்தன்னை நத்தி யருந்துவோர்க்கு
பத்தியு மேதுக்கடி – ஞானம்பா
பத்தியு மேதுக்கடி

பித்தமிகுஞ் சாராய மெத்தக் குடிப்பவர்க்கு
சத்திய மேதுக்கடி – ஞானம்பா
சத்திய மேதுக்கடி

தண்ணீரைப்போல் கள்ளைத் தளராமல் குடிப்போர்க்கு
வெண்ணீறு மேதுக்கடி – ஞானம்பா
வெண்ணீறு மேதுக்கடி

மொந்தைக் கள்ளைத்தூக்கி முகந்தூதி குடிப்போர்க்கு
சந்தன மேதுக்கடி – ஞானம்பா
சந்தன மேதுக்கடி

எங்கேகிடைக்குங் கள்ளென் றேங்கிடும் பாவிகட்கு
குங்குமப்பொட் டேதுக்கடி – ஞானம்பா
குங்குமப்பொட் டேதுக்கடி

சாமியைச் சாக்குசொல்லி சந்ததம் குடிப்போர்க்கு
நாமந்தா னேதுக்கடி – ஞானம்பா
நாமந்தா னேதுக்கடி

கருத்து மாறக்கடையில் கவிழ்ந்துக் குடிப்பவர்க்கு
உருத்ராக்க மேதுக்கடி – ஞானம்பா
உருத்ராக்க மேதுக்கடி

ஒருத்தினம் சமயத்தி லுண்ண தீங்கேதென்போர்க்கு
திருத்துழா யேதுக்கடி – ஞானம்பா
திருத்துழா யேதுக்கடி

காணுவோர் நகைத்திடுங் கள்ளக் குடியருக்கு
பூணூலு மேதுக்கடி – ஞானம்பா
பூணூலு மேதுக்கடி

ஒருநாள் கொஞ்சம்குடிக்க ஒன்றுமில்லை யென்பார்க்குத்
திருநாளு மேதுக்கடி – ஞானம்பா
திருநாளு மேதுக்கடி

சாலமதுக்குடித்துச் சண்டை தொடுப்பவர்க்கு
ஆலய மேதுக்கடி – ஞானம்பா
ஆலய மேதுக்கடி

படியில் தருமகர்த்தர் பக்தர் சாமியார்பட்டம்
குடிகாரர்க் கேதுக்கடி – ஞானம்பா
குடிகாரர்க் கேதுக்கடி

ஆசையாய் மேனாட்டு அரக்கை யுண்பார் தமக்கு
பூசைதா னேதுக்கடி – ஞானம்பா
பூசைதா னேதுக்கடி

வம்புவழக்காடி வாய்நாறும் குடியர்க்கு
கும்பிடு மேதுக்கடி – ஞானம்பா
கும்பிடு மேதுக்கடி

ஈனகஞ்சா அபின் இன்பமாய்க் குடிப்போர்கக்கு
மானந்தா னேதுக்கடி - ஞானம்பா
மானந்தா னேதுக்கடி

சூதாட்ட வெறியாட்டக் களியாட்டப் பிரியர்க்கு
வேதாந்த மேதுக்கடி - ஞானம்பா
வேதாந்த மேதுக்கடி

பாலருக்குக் கல்வி பகராத வஞ்சகற்கு
சீலந்தா னேதுக்கடி - ஞானம்பா
சீலந்தா னேதுக்கடி

கால்நடைகளும் நாடா கள்ளருந் துபவர்க்குப்
பால்தயி ரேதுக்கடி - ஞானம்பா
பால்தயி ரேதுக்கடி

துன்மார்க்க மென்றறிந்தும் துணிந்து குடிப்பவர்க்குச்
சன்மார்க்க மேதுக்கடி - ஞானம்பா
சன்மார்க்க மேதுக்கடி

பங்கம் விளைக்குமென்று பார்த்துங் குடிப்பவர்க்குச்
சங்கங்க ளேதுக்கடி - ஞானம்பா
சங்கங்க ளேதுக்கடி

சாக்கு சொல்லிக்குடிக்கும் சண்டாளருக் கிந்தநல்
வாக்குதா னேதுக்கடி - ஞானம்பா
வாக்குதா னேதுக்கடி

புனைப் பொருளைவிற்று போதவுங் குடிப்போர்க்கு
மனைக்காணி யேதுக்கடி - ஞானம்பா
மனைக்காணி யேதுக்கடி

பாதகச் செயலென்றும் பார்த்தும் குடிப்பவர்க்கு
ஜாதிதா னேதுக்கடி - ஞானம்பா
ஜாதிதா னேதுக்கடி

கொண்டாட்ட மாகவே கூடிக் குடிப்பவர்க்குப்
பெண்டாட்டி யேதுக்கடி - ஞானம்பா
பெண்டாட்டி யேதுக்கடி

பேய்போலவே யலையும் பெருங்குடி காரருக்குத்
தாய்தந்தை யேதுக்கடி – ஞானம்பா
தாய்தந்தை யேதுக்கடி

கள்ளு சாராயக்கடையே கதியென்றிருப்பவர்க்குப்
பிள்ளைக ளேதுக்கடி – ஞானம்பா
பிள்ளைக ளேதுக்கடி

சாலையில் வெறியினால் சாய்ந்துக் கிடப்பவர்க்கு
வேலையு மேதுக்கடி – ஞானம்பா
வேலையு மேதுக்கடி

ஆகாயப் பாலென்று அறிவின்றி குடிப்போர்க்குப்
போகங்க ளேதுக்கடி – ஞானம்பா
போகங்க ளேதுக்கடி

காடுமேடு முள்ளில் கண்ணயர் வோருக்கு
வீடுதா னேதுக்கடி – ஞானம்பா
வீடுதா னேதுக்கடி

மதிமாறிடக் குடித்து மரியாதைக் கெட்டவர்க்கு
அதிகார மேதுக்கடி - ஞானம்பா
அதிகார மேதுக்கடி

ஒருநன்மையுமறியா ஓயாக் குடியர்க்குப்
பெருந்தன்மை யேதுக்கடி – ஞானம்பா
பெருந்தன்மை மேதுக்கடி

மதுபானப் பித்தேறி மயங்கித் திரிபவர்க்குப்
பொதுநல மேதுக்கடி - ஞானம்பா
பொதுநல மேதுக்கடி

பாட்டாக் கள்ளுச்சாராயம் பால்போல் குடிப்பவர்க்கு
நாட்டாண்மை யேதுக்கடி – ஞானம்பா
நாட்டாண்மை யேதுக்கடி

கடன்வாங்கியே குடித்துக் கலங்கிப் புலம்புவோர்க்கு
உடம்புதா னேதுக்கடி – ஞானம்பா
உடம்புதா னேயதுக்கடி

திருத்த மடைந்துநாடு சீராக இதைசொன்னால்
வருத்தந்தா னேதுக்கடி - ஞானம்பா
வருத்தந்தா னேதுக்கடி

பாடியே முருகேசன் பரிந்தின்னும் சொல்லிவிந்த
ஏடிடங் கொள்ளாதடி - ஞானம்பா
ஏடிடங் கொள்ளாதடி

எதுவேண்டும்

இராகம்: மலையாமி தாளம்: அடசாப்பு

பல்லவி

எதுவேண்டும் கேள்மனமே - உனக்
கெதுவேண்டாம் சொல் மனமே.

சரணங்கள்

மதுவுண்டு கடன்கொண்டு கஞ்சாவபினுண்டு
மரியாதைக் கெடவேண்டுமா - நாளும்
பொதுமக்கட் குழைத்தலே ஈசன்தொண்டென வெண்ணிப்
புண்யம் பெறவேண்டுமா - உனக் கெது

பக்கத்துவீட்டார்கள் பதித்திருக்க அதைப்
பார்த்திருக்க வேண்டுமா - பூச்
சக்கரைகற்பூரம் தேங்காய்ப்பழம் சுண்டல்
சாமிக்குத் தரவேண்டுமா - உனக் கெது

கண்டபிரபுக்கள் வுண்டிக்குப் பணத்தினைக்
கண்மூடித்தர வேண்டுமா - எளியோர்
உண்டுபசியாறி வுயிர்வாழச் செய்திட்டு
உண்மையறிய வேண்டுமா - உனக் கெது

பரப்பெருமாள்கோயில் பாழ்குட்டையில் மூழ்கி
பவிசுகுறைய வேண்டுமா - உணவு
இரப்பவர்க்கீந்துநல் லிறைவன் பூசைவீட்டில்
இருந்துசெய்ய வேண்டுமா - உனக் கெது

தலைமொட்டையடித்தடி தண்டம் போட்டுமானம்
தான்கெடவே வேண்டுமா – அன்றி
மலைவருமெய்யன்பா லிறைவனை வாழ்த்தியே
மகிமைபெற வேண்டுமா – உனக் கெது

புத்திக்கெட்டாததோர் கட்டுக்கதையை நம்பி
புலம்பிக் கெட வேண்டுமா – நல்ல
சத்தியத்தைதேடி சன்மார்க்கந்தனில் கூடி
சந்தோஷம்பெற வேண்டுமா – உனக் கெது

சென்றதை மீண்டும் நினைந்துருகிநல்ல
சிந்தைகெட வேண்டுமா – நீ
இன்றேகண் விழித்து பகுத்தறிந்தே யுண்மை
இன்பம்பெற வேண்டுமா – உனக் கெது

பங்காளிதாயாளி பங்கிலே கண்ணாகப்
பதமாயிருக்க வேண்டுமா – கூடி
தங்களைப் போலவே யவர்களை நேசித்துத்
தானிரங்க வேண்டுமா – உனக் கெது

அழகைக் கெடுத்திட நெற்றியிலே பச்சை
அழுகையில்குத்த வேண்டுமா – இன்னும்
பழையவழக்கத்தில் நன்மையில்லாததைப்
பார்த்துஞ் செய்ய வேண்டுமா – உனக் கெது

வேப்பிலையையுடுத்தி மானம்போக மண்ணில்
விழுந்துபுரள வேண்டுமா – கருவில்
காப்பாற்றுங் கடவுளை மனமொழி மெய்களால்
கனிந்துதொழ வேண்டுமா – உனக் கெது

சாமிபேரால் ஆடுகோழிகளை வெட்டி
சாப்பிடவே வேண்டுமா – அன்றி
பூமியில் பல்லுயிர்க் கிரங்கி ஈசன்திருப்
புண்யம்பெற வேண்டுமா – உனக் கெது

படிமீது பழங்கட்டுக் கதைகளைப் படித்தென்றும்
பான்மைக்கெட வேண்டுமா – தமிழன்
குடியரசு குமரன் திராவிடனை வாங்கிக்
குறையைத் தீர்த்தல் வேண்டுமா – உனக் கெது

மூலையில்வேதாந்தம் முணுமுணுச் கப்பேசி
முறைமைகெட வேண்டுமா - பொது
வேலையில் கண்ணாக ஜனநன்மைக்குழைத்திடும்
வேணப்புகழ் வேண்டுமா - உனக் கேது

சுயமரியாதையாய் அடிமைவாழ்வை நீக்கிச்
சுகம்பெறவே வேண்டுமா - நாளும்
அவமரியாதையா யுண்டுறங்கி மிக
அவஸ்தைப்பட வேண்டுமா - உனக் கேது

அரிபக்தன் சிவபக்தன் அவனிவன் பெரியோனென்
அகங்காரங்கொள வேண்டுமா - உள்ள
சருவேசனோருவனென் றேயறிந்துசித்த
சாந்தியடைய வேண்டுமா - உனக் கேது

அன்புள்ளஇறைவனை அன்பாலடைந்தவன்
அநுக்ரகம் பெறவேண்டுமா - வீணாய்
தின்பண்டங்களைக் காட்டி ஏமாற்றித்தான் தின்னும்
திருட்டுத்தனம் வேண்டுமா - உனக் கேது

பெண்களுக்குச் சொத்துரிமை சுதந்திரம்
பெரிதும் தரவேண்டுமா - உள்ளக்
கண்கெட் டடிமையைப்போல் நடத்தியவர்
கனங்குறைக்க வேண்டுமா - உனக் கேது

பெண்ணுக்குமாத்திரம் கற்பையெக்காலும்
பெரிதும் சுமத்த வேண்டுமா - இந்த
மண்ணினில் ஆணெல்லாம் கட்டுத்திட்டமின்றி
மனம்போல் நடக்க வேண்டுமா - உனக் கேது

பத்துவயதுள்ள பெண்ணைக் கிழவனுக்குப்
பரிணயம்செய வேண்டுமா - வயதில்
ஒத்துக்காதல்மிகும் உண்மைத்திருமண
உரிமைதர வேண்டுமா - உனக் கேது

பான்மணம்மாறாத சிறுமிக்கு இளமணம்
பரிந்துசெய்ய வேண்டுமா - நா
நான்கில் மணம்செய்து வாழ்க்கையிலினிதான
நன்மைபெற வேண்டுமா - உனக் கேது

விதவைகளைமூலை வீட்டிலடைத்துவைத்து
வீண்பழிபெற வேண்டுமா – அவர்க்கிதமாக
மணம்செய்து பழிப்புக்கிடமின்றி
இன்பம்பெற வேண்டுமா – உனக் கெது

எங்கும்நிறைந்திடும் இறைவனுக்கு கோயில்
இன்னும்கட்ட வேண்டுமா – உனது
அங்கங்கோயிலாக அறிவேசிவமாக
அன்புசெய்ய வேண்டுமா – உனக் கெது

வினைபோகுமெனவெண்ணி வீண்செலவுவைத்து
விழாக்கள்செய்ய வேண்டுமா – வீடு
மனையாடையாகாரம் கல்வியிவையில்லார்க்கு
மகிழ்ந்துதவ வேண்டுமா – உனக் கெது

கலியாணகுணனான கடவுட்கு வெறுப்பான
கலியாணஞ்செய்ய வேண்டுமா – மனஞ்
சலியாமலேழைகள் தமக்குதவியவர்
சஞ்சலம்தீர்க்க வேண்டுமா – உனக் கெது

கூசாதுபேயாடும் பெண்ணுக்குப் பிரம்படி
கொடுத்தோட்டிவிட வேண்டுமா – ஐயா
பூசாரிகள்செய்யும் அக்ரமங்களுக்கின்னும்
பொறுத்திருக்க வேண்டுமா – உனக் கெது

எதிரேபுகழ்ந்து பின்புறமே யிகழ்ந்திடும்
ஈனகுணம் வேண்டுமா – இந்தப்
பதியில்வஞ்சகமின்றிக் கடவுட்குப் பொதுவாகப்
பரஸ்பரமே வேண்டுமா – உனக் கெது

கூட்டத்தில் பற்பல விஷயத்தைத்தேனெனக்
கூசாதுரைக்க வேண்டுமா – செயலில்
காட்டியே மூன்றிலோர் பங்கேனுஞ்செய்யாத
கசடுகுணம் வேண்டுமா – உனக் கெது

மிக்கசெலவால் சுபாசுபகார்யத்தில்
மேன்மைகெட வேண்டுமா – கண்டு
சிக்கனமாகவே ஏற்றசெலவு செய்து
சீர்மைப்பெற வேண்டுமா – உனக் கெது

பிள்ளைகளுக்குக்கல்வி பெரிதும்ஊட்டியதைப்
பெருமைப்படுத்த வேண்டுமா – ஐயோ
கிள்ளையைப்பூனைகைக் கொடுத்தாப்போல் மாடோட்டக்
கீழ்மைப்படுத்த வேண்டுமா – உனக் கெது

தாய்தந்தை பெரியாரைக் கற்றாரைக் குருவினைத்
தான்போஷிக்க வேண்டுமா – சும்மா
வாய்வேதாந்தம்பேசி சோம்பேறியாய் திரியும்
வம்பருறவு வேண்டுமா – உனக் கெது

உத்தமப் பெற்றார்க்கு உயிர்வாழும்போதுநீ
உணவளிக்க வேண்டுமா – அவர்கள்
செத்தபின் கருமங்கள் செய்துகாசை வீணில்
செலவழிக்க வேண்டுமா – உனக் கெது

ஒற்றுமைநிலைநாட்ட உயிர்தனைத் தந்தேனும்
உழைக்கமுன்வர வேண்டுமா – இளைஞர்
சுற்றியேவீணாக சூதாடி திண்ணையில்
சோர்ந்திருக்க வேண்டுமா – உனக் கெது

பங்கம்விளைத் திடும்பலவழியில் காசைப்
பாழாக்கவும் வேண்டுமா – சத்
சங்கங்களைக்கூட்டிக் கல்வியைப் பெருக்கியே
சமத்துவம்பெற வேண்டுமா – உனக் கெது

நீசத்தனமாக அடிமைவாழ்வில் சிக்கி
நீசுகம்கெட வேண்டுமா – ஒரே
ஈசன்மக்களுக்குள்ளே நானும்ஒருவனென்று
எழுந்துமுன் வரவேண்டுமா – உனக் கெது

வெளிவேஷச் சாமிகள் ஏமாற்றிப் பணம்தண்டும்
வேட்கையொழிய வேண்டுமா – உற்ற
எளியோருக்கீந்துநல் விதங்கூறி நன்மையை
என்றும்செய்ய வேண்டுமா – உனக் கெது

உள்ளதைமுருகேசன் உரைத்தானதைக்கண்டு
உண்மையறிய வேண்டுமா – அன்றிக்
கள்ளத்தனமாகப் புறங்கூறிச் சீறியே
கவிழ்ந்துவிழ வேண்டுமா – உனக் கெது

மக்கள்

செந்தில்நாயகமே என்ற மெட்டு

இராகம்: பிலகரி தாளம்: ரூபகம்

பல்லவி

மக்களாவரோ மாநிலத்தில் பிறந்தோரெல்லாம்

அநுபல்லவி

மானாபிமானம் தானறிதான ஞானமில்லாதார் (மக்

சரணங்கள்

திக்கற்றவருக் கிரங்க வேண்டும்
துக்கந்தவிர்க்கத் துணைசெய்ய வேண்டும்
தீரம்பரோப காரம் நல்லுபசாரம் வேண்டும் (மக்

பொதுநன்மைக்கென்றும் உழைக்க வேண்டும்
மதுரமொழியிற் றிளைக்க வேண்டும்
புண்யம் ஜீவகா ருண்யம் கோதில்லாக் கண்யம் வேண்டும் (மக்

அருமையும் மிகப் பொறுமையும் வேண்டும்
தருமம்தயவும் சத்தியம் வேண்டும்
அன்பும் மாசில்லாத்தென்பும் உண்மையி லின்பும் வேண்டும்

பத்தியும்மனச் சுத்தியும் வேண்டும்
புத்தியுந்திடச் சித்தியும் வேண்டும்
பாசம் அன்பர்கள் நேசம் மனோவுல் லாசம் வேண்டும் (மக்

நாடெங்கும் இன்பாய் செழித்தல் வேண்டும்
மூடப்பழக்கத்தை யொழித்தல் வேண்டும்
நன்மையும் பெருந்தன்மையும் மனவன்மையும் வேண்டும் (மக்

சாண்வயிர் வளர்க்க சாகசமூட்டி
வீண்சடங்கும் வெளிவேடமும் காட்டி
ஜாதியைமநு நீதியைப் பொய்யாயோதியோரெல்லாம் (மக்

நன்னயுமில்லாரை நாடெங்கும் பழிக்கும்
தன்னலங்கருதி பிறர்நலங் கெடுக்கும்
நாசக்காரர்கள் வேடக்காரர்கள் மோசக்காரர்கள் (முக்

களித்துசுகித்து வுண்டுடுத்தி யென்ன
குளித்துக் குழைத்துக் கும்பிட்டுத் தானென்ன
கனமும் கேடில்லா மனமும் நல்லவிற் பனமு மில்லாதார் (முக்

பற்பல சாத்திரம் படித்துப் போட்டார்
கற்பனையின்படி நடக்கவு மாட்டார்
பாபிகள் கெட்ட லோபிகள் தம்மை நாவி லுரைக்க (முக்

கொஞ்சமும் புத்திக் கெட்டாததைச் செப்பும்
வஞ்சனையால் தங்கள் வயிற்றை நிரப்பும்
குடியர்கள் பெருந்தடியர்கள் சுத்தமடையர்க ளெல்லாம் (முக்

முற்றுந்துறந்த முனியெனக் காட்டும்
சுற்றியே பொதுமக்களையே மாற்றும்
மூடர்கள்குடி கேடர்கள் சத்யம் நாடாதா ரெல்லாம் (முக்

தன்மாட்டில் வாழ்ந்துபோவார் சுடுகாடே
அன்பில்லார்பாரி லிரண்டுக் கால்மாடே
தாசன்முத்தமிழ் நேசன் கவிமுரு கேசன் பேசும் (முக்

வேண்டுமை

(ஆதிக்குமுன்ன மனாதி யென்னடி சிங்கி என்ற மெட்டு)

வேண்டுமையை கூறுகின்றேன் கேளடி உண்மை
வேளாண்மைக் பொறுமைநன்மை வொற்றுமை வன்மை
காண்டற்கருந் தாளாண்மை தூய்மை வாய்மை
கட்குடியாமை புலமை தகைமை முறைமை
ஆண்மை திறமை அஞ்சாமை பெருந்தன்மை
ஆனநேர்மை பான்மை சீர்மை அம்மை நிலைமை
கேண்மை அருமை உரிமை கடமை புறங்கூறாமை
கெடுக்காமை மேன்மை செம்மை கொல்லாமை.

வேண்டாமை

வேண்டாமையைச் சாற்றுகிறேன் கேளடி தீமை
வேற்றுமை பொறாமை கொடுமை வெறுமை யடிமை
தீண்டாமை புன்மை வெம்மை மடமை தின்மை
தெரியாமை படிப்பின்மை பொய்மை கடுமை
ஈண்டும் அன்பு இல்லாமை திருட்டுத் தன்மை
ஈயாமை இரக்கும் பான்மை இதஞ்சொல் லாமை
தூண்டுமறிஞர் பகைமை சுத்த மின்மை
துதியாமை பெற்றாரை மதியாமை.

ஏன்ஏன் - தான் தான்

இராகம்:பைரவி தாளம்: ரூபகம்

கண்ணிகள்

தீண்டாமை யென்பதும் உயர்வுதாழ் வென்பதும்
தீட்டுத் தீட்டென்பது மேன் ஏன் – தாங்கள்
ஆண்டைக் ளென்றேழை மக்களை யடக்கி
ஆளுவதற்காகத் தான் தான்

மக்கள் நாளுக்குநாள் புறமதத்தில்மனம்
மயங்காமல் புகுவதுமேன் ஏன் – பொதுவாய்
தக்கசுதந்திரம் தந்தா தரித்துமே
தானிரங்காக் குறை தான் தான்

விதிவிதியென்றுமே வெளியினில் போகாமல்
வீண்காலங் கழிப்ப தேன்ஏன் – ஊக்கம்
மதிகல்வி முயற்சி சுறுசுறுப்பு நல்ல
மனதிட மில்லாமல் தான் தான்

மேனாட்ட ரெல்லோரும் மெச்சத் தகுந்திடும்
மேன்மையாய் வாழுவ தேன்ஏன் – உண்மை
மானாபிமானங்கைத் தொழில்கல்வி யூக்கம்
மங்கா முயற்சியால் தான் தான்

கீழ்நாட்டி லெங்களும் மக்களடிமையாய்
கேவலமாய் வாழ்வ தேன் ஏன் – ஜாதி
பாழ்வேற்றுமைதரு நாளுக்கு நாளோங்கி
பல்பிரி வானதால் தான் தான்.

தங்கம் விளைநாட்டில் தரித்திரம் மக்களைத்
தானடிமைக் கொண்ட தேன் ஏன் – நாளும்
துங்கசமரசம் சுறுசுறுப்பு கல்வி
தூய்மையில்லாக்குறை தான் தான்

பிள்ளைகள் பெண்டுகள் உண்ண வுணவின்றி
பெரிதும் வருந்துவதேன் ஏன் – பாழும்
கள்ளுசாராய் கஞ்சா கடையிலறிவின்றி
காசையழிப்பதால் தான் தான்.

மக்கள்மூடராக மாட்டிலும் கேவல
மாகத்துன் புறுவதேன் ஏன் – நாளில்
அக்கறையாய் பெற்றோர் அவர்களைப் பள்ளிக்கு
அனுப்பாதக் குறையால் தான் தான்.

காளமேகம் போலத் தலைவிரித்துப் பெண்கள்
கனைத்துப் பேயாடுவ தேன்ஏன் – கொண்ட
ஆளனிளைத்தவ னாயிருந்தால் சும்மா
ஆடுவரோடுவர் தான் தான்.

சாமியாடிகுறி சாற்றிக் கண்ணைமூடி
சாகசம் செய்வதுமேன் ஏன் – ஏழை
பாமரமக்களை யேய்த்து வயிர்வளர்க்கப்
பணத்தைப் பறித்திடவே தான் தான்.

கருமாதி கலியாணம் திதி முதலாகிய
காலத்தில் புரோகித மேன் ஏன் – அங்கே
வரும்பாப்பான் வள்ளுவன் பண்டாரம் தாதன்தன்
வயிற்றுப் பிழைப்புக்குத் தான் தான்.

பிச்சையிடாலோபி கணக்கிட முடியாத
பெருஞ்செல்வம் படைத்தது ஏன் ஏன் – சூது
கச்சேரிக்கு கள்ளு சாராயக் கடைக்கு
கணிகையர் தமக்குத் தான் தான்.

மதுமாமிசமுண்டு மானமின்றி சதா
மயங்கித் திரிவது மேன் ஏன் - உடல்
ஒதியெனப் பருத்துப் பூமியில் பாரமாய்
ஒழிந்துபோவதற்குத் தான் தான்.

துக்கமிகும் கடன் சூழ்ந்தெக்காலுமிக
தொல்லைக் குள்ளாவது மேன் ஏன் – உலகில்
சிக்கனமில்லாமல் நன்மைதீமைகளில்
செலவு செய்வதினால் தான் தான்.

என்தெய்வம் பெரிதென்றும் உன்தெய்வம் சிறிதென்றும்
எதிர்வாதம் செய்வது மேன்ஏன் – உலகில்
தன்னிலையறியாதப் புத்தகப் பூச்சிகள்
தங்கள் வாய்மதமே தான் தான்.

சற்றும் பலனின்றி சங்கம்ஊர்களெல்லாம்
சரியாய் நடக்காததேன் ஏன் - நண்பு
ஒற்றுமையில்லாமல் பெரியோர்சொல் கேளாமல்
உழைப்பில்லாக்குறையால் தான் தான்.

கூடப்பிறந்தவர் சத்துருக்களெனுங்
கோடாலிக்காம்பாவ தேன் ஏன் – தன்
கூடப்பிறந்தே வியாதியுயிரினைக்
கொல்லுமென்றாரான்றோர் தான் தான்.

படிமீது பெற்றோரைக் குருவினைக் கற்றாரைப்
பழித்தெதிர்பேசுவ தேன் ஏன் – பாரில்
அடியோடே வாழ்நாளை யகங்காரத்தால் வீணே
அழித்துக் கொள்வதற்குத் தான் தான்.

கோலமறியாத குரங்காகியே மனக்
குறையடைந்திடுவ தேன் ஏன் – நிகழும்
காலத்துக்கேற்ற சீர்திருத்தம் செய்துகொள்ளும்
கடமையில்லாததால் தான் தான்.

மாபாவிகள்சுய நலக்காரர்வஞ்சமே
மலையேறிவிட்டது மேன் ஏன் - அநு
தாபிகள்முயற்சி குறையாமல் சந்ததம்
தயங்காம லுழைப்பதால் தான் தான்.

சுயமரியாதையின் தத்துவமுணர்ந்து
சுகம்பெற அஞ்சுவதேன் ஏன் – கெட்ட
நயவஞ்சகன் கோழை யறிவிலியிம் மூன்று
நபர்களின் மோசமே தான் தான்.

முத்திரைப் பெற்றவர் நாங்களே கடவுட்கு
முதற்பிள்ளை யென்பது மேன் ஏன் – காக்கை
ஒத்தன்பாய் வாழுங் குலாபிமா னங்கண்டும்
உணர்வில்லாக் குறையால் தான் தான்.

உண்ண வுணவின்றி உடுக்க ஆடையின்றி
ஓட்டாண்டி யாவது மேன் ஏன் – கெட்ட
எண்ணத்தா லறிஞரை மதியாமல் புறங்கூறி
எள்ளி நகைத்ததால் தான் தான்.

நடுவீட்டில் மாமிசம் கள்ளு சாராய் கஞ்சா
நன்னாளில் படைப்பதேன் ஏன் – கல்லாக்
கொடும்பா விகள் தங்கள் சாமியைச் சாட்டிமெய்
கொழுக்குமென்று தின்னத் தான் தான்.

செத்தால் மோட்சம்போவே னென்று சிலவெறியர்
செப்பித் திரிவது மேன் ஏன் – உன்
மத்தர் காணா மோட்சம் போவதெது வுலகில்
மதிமோசம் போவார்கள் தான் தான்.

தொண்டன் முருகேச னுள்ள துள்ளபடி
சொல்லி வந்ததெல்லா மேன் ஏன் – இந்த
மண்டலத்தி விதை மக்கள் நன்கறிந்து
மங்கள மாய்வாழத் தான் தான்.

ஜெயபேரிகை

இராகம்:புன்னாகவராளி தாளம்: ஆதி

ஆடுபாம்பே என்ற மெட்டு

சாற்றுவீரே சாற்றுவீரே – நல்ல
சமத்துவ ஜயபேரிகை சாற்றுவீரே

கூற்றுவனைப் போன்ற கெட்ட ஜாதிக்கொடுமை – உலகில்
குறுக்கிட்டு பலமக்க ளானாராடிமை – இந்த
நாற்றிசையிலும் பரவிநாட்டில் வறுமை – மிக்க
நாளுக்குநாள் பெருத்ததே மீளாக்கடுமை (சாற்

பன்றிஎலி பூனைகாக்கை யணில்தின்போர் – போகும்
பாதையிலேயாதி திராவிடரென்போர் – இனி
என்றும்போகலாகாதென்ற வீணர்மந்த்ரம் – நாட்டில்
இனிபலிக்காதவரின் மோசத் தந்த்ரம் (சாற்

மூடப்பழக்கமனைத்தும் நசித்தாச்சே – மக்கள்
முன்னேற்றமடைந்தின்பம் ருசித்தாச்சே – பெரியார்
தேடரும் சுதந்திரக்கனிப் பழுத்தாச்சே – அதைத்
தின்னமக்களும் கண்ணை விழித்தாச்சே (சாற்

பிறப்பாலுயர்வுதாழ்வு யேதென்றறிந்து – இது
பித்தர்பகல் கனவென வுண்மைப்பிறந்து – காணும்
சிறப்புவதியுங் கல்வி நீதிசிறந்து – மக்கள்
ஜென்மமொன்றெனவே மெய்யன்பு நிறைந்து (சாற்

தீண்டாதவர்களென்றொரு ஜாதியுண்டா – ஈசன்
சிருஷ்டியிலே வித்தியாசம் என்ன கண்டாய் – சொல்லும்
ஆண்டையென்று ஆதியிலிருந்ததுண்டா – இது
அருநீதி நூலில்லை தேசத்தொண்டாய் (சாற்

வஞ்சனை செய்பவருக்கு அஞ்சாமல் – தூய
வாய்மை சத்தியம் அன்பில் எஞ்சாமல் – கெட்டப்
பஞ்சமாபாதகத்தினில் மிஞ்சாமல் – மோசப்
பகல்வேஷக்காரரிடம் கொஞ்சாமல் (சாற்

நாட்டினிலேவிழிப்பு மிஞ்சலாச்சே – கெட்ட
நயவஞ்சக்காரரெல்லாம் அஞ்சலாச்சே – பொய்யைக்
காட்டியே மாற்றும் காலம்பறந்தாச்சே – உண்மைக்
கல்வியறிவின் கண்ணைத் திறந்தாச்சே (சாற்

எத்திக்கும் விடுதலையே கொண்டாடி – நீங்கள்
ஏமாற்றமடையாம லிதந்தேடி – சொல்லத்
தித்திக்கு முருகேசன் பதம்பாடி – வெகு
தீவிரமாகவேயெல் லோருங்கூடி (சாற்

மனத்திற்குணர்த்தல்

இராகம்: நாதநாமக்கிரியை தாளம்: ஆதி

பல்லவி

மனமேவீண் காலங்கழியாதே - இந்த
மகிதல வாழ்வொரு சதமாகாதே.

சந்தச் சரணங்கள்

பனியனையசிறிய துளிபெருகிவரு
வினையொருவுருவென அனைகருப்பைக்குள்
இறைவன்தன் எருளாலீரைந்து திங்கள்
குறையற வளர்ந்துபின் குழந்தையு மாகி
வாகாய்ப் புவியினில் வந்து விழுந்து
காகா வெனப்பரன் கழலிணை பணிந்து
கத்திட வாங்ஙனம் நத்திய மாதர்கள்
சுத்தியுஞ் செய்தபின் மெத்தவு மகிழ்ந்த (மனமே

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணம்
ஆளா கிடவமு தூட்டி வளர்க்க
அருமழ லைக்குத லைமொழி தன்னில்
பெருமிதங் கொண்டு விழுந்து தவிழ்ந்து
அழகு நடைமிக நடந்திடக் கல்விப்
பழகி வாலிபப் பருவமு மாகி
கண்ணெனத் துணைக்கொரு பெண்ணை மணந்து
எண்ணிலாக் காதலால் நண்ணிப் புணர்ந்த (மனமே

எல்லையி லாச்சுகம் பல்வழி யாய்ந்து
இல்லற வாழ்க்கையின் தொல்லையிற் சூழ்ந்து
நரைதிரை மேவப் பிராய முதிர்ந்து
பருவமு முருவமுஞ் சருவமுந் தளர்ந்து
சந்த முதுகும் வளைந்து வொழிந்து
தந்தம் விழவிழி முந்த விருண்டு
நற்கர மிசைதடி தட்டியே யூன்றி
மற்கட மெனும்படி தத்தி நடந்த (மனமே

புத்தி யிழந்து செவிச்செவி டாகி
மெத்த பினத்தவுங் குத்திருமல் மிகத்
தன்வச மற்றுமே நன்மொழி மாற
மன்பதை கூடிட முன்னெஞ்சு முலர
அந்திய காலமும் வந்ததென் றுற்ற
பந்தினர் சூழ்ந்துபால் முந்தவே யூற்ற
புந்தியுஞ் சிந்தையுந் தந்தொழி லற்று
வந்தெம தூதர்கள் கொண்டுயிர் போக (மனமே

மைந்தர்கள் மனைவியர் சிந்தைநொந் தலற
பந்தரிடப்பறை முந்த முழங்க
பிணமென மறுபேர் கணமதில் மாற
நிணவுடல் கழுவியே மணமிகு மலரே
சூடியே பாடையிற் கூடி சுமந்து
தேடியே சுடலையை நாடி நடக்க
கனலெனக்கென்னும் மணலெனக் கென்னும்
புனல்நரி காக்கைநாய் கழுகெனக் கென்னும் (மனமே

பாரினில் வீணே நாறுடல் வளர்த்தாய்
சீரினில் மலைத்துப் பேர்மிகப் படைத்தாய்
தேகமெங்கே வைபோக மெங்கேயுன்
பாகமெங்கே வுத்யோக மெங்கே மேல்
மெத்தை யெங்கே கற்றவித்தை யெங்கே யுற்ற
சொத்து மெங்கே பணமொத்தை யெங்கே நல்
வாக்யமெங்கே சிலாக்ய மெங்கே தன
பாக்யமெங்கே வைராக்ய மெங்கே ஏழை (மனமே

மக்களெங்கே வணக்க மெங்கே யுன்
றொக்க மெங்கே பெண்டக்க மெங்கே யுன்
தீரமெங்கே உபகார மெங்கே ஆச்
சாரமெங்கே விவகார மெங்கே மேற்
குலமெங்கே யுன்பலமெங்கே பெரும்
நிலமெங்கே நன்னல மெங்கே மிகு
பணியெங்கே சீமைத்துணி யெங்கே பொன்
னணியெங்கே கண்மணி யெங்கே பேதை (மனமே

நகையெங்கே நேயர்தொகை யெங்கே பிறர்
பகையெங்கே பலவகை யெங்கே காணி

பூமியெங்கே யுன்சேம மெங்கே யெழுங்
காமமெங்கே நன்நேம மெங்கே பூந்
தோட்டமெங்கே துணைக்கூட்ட மெங்கேசீ
ரோட்டமெங்கே ஆர்ப்பாட்ட மெங்கே வண்டி
மாடெங்கே சொந்த வீடெங்கே யுன்
நாடெங்கே கற்ற வேடெங்கே பாழ் (மனமே

தனமெங்கே விற்பன மெங்கே வுன்
மனமெங்கே பெற்ற கனமெங்கே சேர்த்த
பணமெங்கே பலகுணமெங்கே கொண்ட
மணமெங்கே யுன்பிணை மெங்கே யுன்
நேசரெங்கே சந்தோஷ மெங்கேயுல்
லாசமெங்கே பிரயாசமெங்கேஆ
ஸர செங்கே ஜெயமுரசெங்கே பெற்ற
பரிசெங்கே யுன்சரசெங்கே மூட (மனமே

சட்டமெங்கே பெற்றபட்ட மெங்கே யுற்ற
திட்டமெங்கே உன்னிட்ட மெங்கே நீ
பாடையில் போகையில் கூடவரும் பொருள்
தேடியப் புண்ணியப்பாவ மிரண்டே
ஆதலாலன்பாயெப் போதுமே யுலகில்
நீதமேயுணர்ந்து பேதமே யகற்று
இதமொழி யுரைத்து இரப்பவர்க் களிப்பாய்
நிதமனங் களித்துப் பொதுநன்மைக் குழைப்பாய் (மனமே

யார்க்கும் அன்பனாய் பார்க்குளின்பமாய்
மூர்க்கமின்றி யெளியோர்க்கு தன்மமாய்
தீதூறும் பாதகம் ஐந்தையும் நீக்கு
ஓதரும் சத்தியப் போதஞ்சீர் தூக்கு
வஞ்சனை சஞ்சலம் மிஞ்சிடா தோட்டு
தஞ்சமென்பவருக் கஞ்சலே சாற்று
புன்மையும் தின்மையுங் கன்மமு மொழிப்பாய்
வன்பெரும் பொறாமை லோபமே யழிப்பாய் (மனமே

சன்மார்க்கமிகும் சமரசம் தேர்ந்து
துன்மார்க்க மிலா தன்பரைச் சேர்ந்து
தூய்மையும் நற்குண வாய்மையிற் கூடு
தாய்தந்தை குழு இறைவழிபாடு

ஒழுக்கமும் கற்றவர் பழக்கமே நாடு
அழுக்கா றழித்துநல் வழக்கமே நீடு
பெரியோரறிஞர்க ளுறவினைத் தேடு
சிறியோர் தமையதி பரிவாய்க் கொண்டாடு (மனமே

மக்களைக் கல்வியில் மாண்புறத் தேற்று
துக்க மகற்றிச் சிறக்கமெய் சாற்று
அச்சம் விலக்குவீ ணிச்சை யடக்குபல்
லச்சையைப் போக்குபார் மெச்சச்சீர் தூக்கு
சுத்தமும் பக்தியும் புத்தியும் பெருக்கு
நித்தமும் சித்தமே மெத்தவு முருக்கு
பல்லுயிர்க் கிரக்குங் கல்வியைப் பயிலு
வல்வினை யொழிக்க நல்வினை முயலு (மனமே

அலையுமனக் குரங் காட்டமடக்கு
நிலையிலா ஆணவமமதை யொடுக்கு
ஞானநிதானமுந் தோண இலங்கு
தானமும் மானமும் காண துலங்கு
பண்ணவ ருலவிடுங் கொண்ணூர் வாசன்
வண்ணமா மதுரக்கவி முருகேசன்
பைந்தமிழ் பாடுசு தந்தரந் தேடுநீ
தங்களிகூடு இதமிக நாடு. (மனமே

வாழி விருத்தம்

பொதுநலப் பிரியர் வாழ்க புகழோங்க வாழ்க
மதுரிதத் தொண்டர் வாழ்க மங்களம் பொங்கி வாழ்க
துதிமிகும் அன்பு வாழ்க தூயமாத்தலைவர் வாழ்க
பதிமிசை யிதைப் படித்தோர் பல்லோரும் வாழ்க மன்னோ.

இப்புத்தகம் கிடைக்கும் இடங்கள்

குறிப்பு: இப்புத்தகம் வெளிவந்தபோது இந்நூல் கிடைக்கப்பெற்ற பெருந்தகைகளின் முகவரிகள் இவைகள் என்பது நன்றியோடு போற்றத்தக்கது.

ஷட்டாவதானம். பூ.மு.வேலாயுதபாணி,
31, சடையப்ப மேஸ்திரி தெரு,
மின்ட் அஞ்சல், சென்னை.

எம்.சி. லட்சுமணம்,
அச்சரபாளையம், பொன்னேரி அஞ்சல்.

அமுதகவி வி.ஒய். திருவீதி,
மேலையம்பதி, சீயாலம் தெரு,
வில்லிவாக்கம் அஞ்சல்

எம்.தருமலிங்கம்
150, பல்லாவரம் ஐரோடு
பரங்கிமலை அஞ்சல்

பி.வி. நாகலிங்கம்,
புழல், ரெட்ஹில்ஸ் அஞ்சல்.

இந்நூலாசிரியரிடமும் கிடைக்கும்.

மதுவிலக்கு கீர்த்தனம்

ஓம்

சென்னை கொண்ணூர் ஸ்ரீ சமரச சன்மார்க்க சபையின் போதனாசிரியரும், சத் கதா பிரசங்கியும், செங்கற்பட்டு ஜில்லா பொன்னேரி தாலுக்கா மதுவிலக்குப் பிரசாரகருமாகிய மகா மதுரகவி வீ.வே. முருகேச பாகவதர் அவர்களால் இயற்றப் பெற்ற

மதுவிலக்கு கீர்த்தனம்

(முதற்பாகம்)

இதனுள்
குடிவெறி நீக்கும் கொச்சகம்
குடிகாரன் புலம்பல்,
மதுநீக்கும் சொர்ணம்பா மாலை
முதலிய பல கீதங்களும் அடங்கியுள்ளன.

சந்தரதேவ் பிரஸ்
107, ஏழுகிணற்று வீதி.
சென்னை.

ஓம்

திருவருள் துணை

மதுவிலக்கு கீர்த்தனம்

விருத்தம்

நிந்தனைக்கு ஆளாக்கும் பார்வைமாறும்
நிகரில்லா மூளைதனை நாசமாக்கும்
இந்திரியங் கல்லீரல் இருதயத்தை
இரைப்பை யினைத்தான் கெடுக்கும் ஈடில்லாத
புந்தியழித்திடும் நெஞ்சும் குடலும் சும்மா
பொறுக்காமல் தானெரியும் புலம்பச்செய்யு
மந்தியினைப் போலாடி யலைந்து வீணே
மதுபானந் தனையருந்தி மயங்காதீரே.

குடிவெறி நீக்கும் கொச்சகம்

(முத்திநெறி அறியாத என்ற இசை)

சோதனையின் பிறப்பிடமாம் சோகத்தி னிருப்பிடமாம்
வேதனையின் உறைவிடமாம் வேசித்தனங் கொலைசூது
சாதனைக்கும் அடிப்படையாம் சாத்தான் வாழ்ந்திடுமிடமாம்
பாதகமே விளைத்திடுமிப் பாழ்குடியை யொழிப்பீரே. (சோ

நோக்காது கண்ணிருந்தும் நுவலாது நல்வார்த்தை
கேட்காது காதிருந்தும் கெடுமதியால் நல்வினையே
பார்க்காது தன்மதிப்பை பகுத்தறியாப் பெருந்தீங்கே
ஆக்குமந்த மதுக்குடியை அடியோடே யொழிப்பீரே (சோ

மாடிழந்து மனையிழந்து மதியிழந்து மாண்பிழந்து
வீடிழந்து சுகமிழந்து வியன்பொருளைத் தானிழந்து
நாடிழந்து நகரிழந்து நற்புகழின் நலமிழந்து
பீடிழந்து வாடாமல் பெருங்குடியை யொழிப்பீரே. (சோ

மலமூத்ர முட்பள்ள மண்மேடுதனில் வீழ்த்தும்
ஜலவேட்கையால் நெஞ்சுந் தானுலருமார் படைத்து
சிலவேளை நாவரண்டு சீக்கிரத்தி லுயிர்போக்கும்
நலமில்லா மதுக்குடியை நாடாம லொழிப்பீரே. (சோ

படிமீது பலர்மெச்சும் பண்டிதனா யிருந்தாலும்
கொடிகட்டி வாழ்ந்தாலும் கொற்றவனா யிருந்தாலும்
குடிக்காரப் பயலென்று குறைகூறச் செய்யுமினி
அடியோடே மதுக்குடியை அண்டாம லொழிப்பீரே (சோ

பெண்டுகளின் தாலியையும் பிள்ளைகளின் சேலையையும்
கொண்டபொருள் வேலியையும் கோணாமல் தான்விற்றுக்
கண்டவர்கள்சிரித்திடவே கடன்காரனாக்கு மிந்தச்
சண்டாள மதுக்குடியைச் சாராம லொழிப்பீரே. (சோ

வேடிக்கையாய் முதல்தோணும் வேதனையின் மிகக்காணும்
தேடியபொன் பொருளழியும் தேகம்மனம் மதியொழியும்
வாடிக்கையாய் நிதம்வேணும் வாழ்க்கையில் மிழந்தழிந்தோர்
கோடிபலக் கோடிமதுக் குடிவகையை யொழிப்பீரே. (சோ

தண்டனையால் தற்கொலையால் தானழிந்தோர் பலகோடி
சண்டையிலும் ஜலத்தினிலும் சாய்ந்தவர்கள் மிகுகோடி
பெண்டுகளால் கொலைக்களவால் பேரழிந்தோர் வெகுகோடி
மண்டலத்தில் மதுக்குடியை மயங்காம லொழிப்பீரே (சோ

கல்விக்கு மிடையூறு கனத்திற்கு மிகத்தீது
செல்வத்தைத் தேடாது செப்பாது சத்தியமே
நல்வழியில் செல்லாது நன்மைதனை நாடாது
பல்வழியில் தீங்கிழைக்கும் பாழ்குடியை வொழிப்பீரே. (சோ

நீருண்டு மோருண்டு நெய்யுண்டு பாலுண்டு
சோறுண்டு தயிருண்டு சுகயிளநீர் குணமுண்டு
பேருண்டு பலமுண்டு பெரும் புகழுண்டிதை யுண்டால்
சீருண்டு முருகேசன் செப்புந் தமிழ் நலங்கண்டு (சோ

(தெள்ளு தமிழ்க்குதவும் சீலன் என்ற மெட்டு)

கள்ளு சாராயங் கஞ்சா விலக்கு – இதைக்
கண்டறிந்து உன்மதியைத் துலக்கு – இந்தக்
காசினியிலுன்னை வெகுநாசமாக்கும் இனிமனந்
திரும்பு நலம்விரும்பு (கள்

பள்ளம்படு குழியில் வீழ்த்தும் – மிகப்
பலவா னென்றாலும் கீழே தாழ்த்தும் – இந்தப்
பாரில் பிள்ளைகள் சமுசாரத்துடனே போ
ராட்டம் மனவாட்டம் (கள்

பாம்பினை மடியில் வைப்பாரோ – விஷப்
பாஷாணத்தை யருந்துவாரோ – தீயப்
பஞ்சமா பாதகத்திலே மிஞ்சச்செய்யு முன்புகழைப்
போக்கும் தீங்காக்கும் (கள்

பால்தயிர் நெய்மோர் வெண்ணை விடுத்து – இந்தப்
பாழான மதுபானத்தை குடித்து – வீண்
பரியாசம் பகைமிகும் மரியாதைதனை துலைக்

காலமெல்லாம் கடன்கார னாக்கும் – காண
கனதரித்திரத்தானே மிகுக்கும் – தினம்
கஷ்டப்பட்ட திரவியமும் நஷ்டமாகும் தன்மதிப்பு
போகும் பிணியாகும் (கள்

மனம்வாக்கு மூளையெல்லாம் மழியும் – உற்ற
மானம்போகும் ஞானந்தானே வொழியும் – சொல்லும்
மாமதுரக் கவிராசன் பூமிபுகழ் முருகேசன்
கீதை நல்லபாதை (கள்

விஷத்தைக் குடிக்கலாமா

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: ஆதி

பல்லவி

விஷத்தைக் குடிக்கலாமா வீணாகசாகப்போமா – கெட்ட

அநுபல்லவி

வீணர்களுடன் ஆணுவமாக
நாணமேவிட்டு காணவே கெட்ட

சரணங்கள்

நிசத்தினையே யழிக்கும் நீசத்தனமே செழிக்கும்
விசனத்தையே யளிக்கும் வீண்வம்பையே வளர்க்கும் (விஷ

சீறும்பாம்பெனக் கடிக்கும் *சீ சீ* கெட்டப்பேர் கெடுக்கும்
நாறும் கள்ளைப்பானமென்று நாடிக் காசைத் தேடித் தந்து (விஷ

பீருஸ்கி வொயின் ஸ்பிரிட் பிராந்தி ரம் ஜின்ஸ்டௌட்டு
பேருபோன கொளம்பு பட்டை பிரபுக்களை விழுங்கிவிட்ட (விஷ

பறவையெச்சில் பாளையெச்சில் பலஜீவனிறந்த எச்சில்
நிறைய மொறந்தைபுட்டி யெச்சில்நினைவு தப்பிமனமே வொப்பி (விஷ

ஈச்சங்கள்ளு தென்னங்கள்ளு ஈமிதக்கும் பனங்கள்ளு
நீச்சக்கள்ளு இறுப்புக்கள்ளு நெஞ்செரிக்கும் பாட்டாக்கள்ளு (விஷ

நாயும் நாடாதகள்ளை நல்லதென்று மாந்தர் மெள்ள
வாயின்வழி செலுத்தக்கொடும் வாதனைக்குள் ளமிழ்த்திவிடும் (விஷ

சோதனை மிகவளிக்கும் சோகத்தையே கொடுக்கும்
போதவும் தீங்கிழைக்கும் போக்கிரித்தன லாக்கிரியாம் (விஷ

மனைவியைப் புதைக்கச் செய்யும் மக்களை யடிக்கச் செய்யும்
புனைப்பொருளைத் திருடச்செய்யும் போலீசுக்கு போகச்செய்யும் (விஷ

சண்டையைப் போடச்செய்யும் சாலையிலே வீழச்செய்யும்
மண்டையை யுடைக்கச் செய்யும் மானத்தையிழக்க செய்யும் (விஷ

கடன்மிக வாங்கச்செய்யும் கஞ்சியின்றி யேங்கச்செய்யும்
உடம்பினைக் கெடுக்கச்செய்யும் உற்றாறை பகைக்கச் செய்யும் (விஷ

காட்டாது மரியாதை கஞ்சாவபீன் மிகப்போதை
நாட்டில் முருகேசன் கீதை நம்புவோர்க்கே நல்லபாதை (விஷ

(சோமசேகரனருளும் பாலாவேலா என்ற மெட்டு)

ஆசைகாட்டும் மதுவகையை யோட்டுவீரே - இந்த
அவனியிலே சங்கங்களை கூட்டுவீரே - உற்ற
காசைப்போக்கா வழியை நிலைநாட்டுவீரே - நல்ல
கல்விசெல்வ மோங்கவழி காட்டுவீரே - ஆ...

வேடிக்கையாக முன்னால் தோணுப்பா - சும்மா
வேதனைமெத்தவும் பின்னால் காணுமப்பா - தினம்
வாடிக்கையாய் குடித்து நாணுமப்பா - வீண்
வம்படி வழக்கை சும்மா பேணுமப்பா - ஆ...

எத்தனையோ குடும்பங்களை அழித்திட்டதே - மது
எல்லாரையும் பொல்லாப்பாக்கி பழித்திட்டதே - வாய்மை
சத்தியஞ்சன் மார்க்கமதை வொழித்திட்டதே - பொல்லா
சாத்தானிட சோதனையோ செழித்திட்டதே - ஆ...

நாட்டில் குடியுள்ள மட்டும் பஞ்சந்தானே - இது
நானாவித வழியில் கஷ்டம் மிஞ்சுங்கோனே - அதி
கோட்டிக் கணக்கான பணம் எஞ்சுமானே - யிதுங்
கூறு முருகேசன் தமிழ் கொஞ்சுந்தேனே...

குடிக்காரன் புலம்பல்

(நல்வாக்கு நீ கொடடி என்ற மெட்டு)

பல்லவி

குடியைக் கெடுத்தக் கள்ளே
கோடிவுயிர் தின்றக் கள்ளே

அநுபல்லவி

அடியோடழித்தக் கள்ளே
அஞ்சாதப் பாட்டாக் கள்ளே

சரணங்கள்

தாயை யடித்தக் கள்ளே தாரத்தை யுதைத்த கள்ளே
சேயைப் புடைத்தக் கள்ளே செட்டான புட்டிக் கள்ளே

மண்டை யுடைத்தக் கள்ளே மரியாதை யொழித்தக் கள்ளே
சண்டை தொடுத்தக் கள்ளே சதிசெய்யும் குடுவைக் கள்ளே

கல்வியைக் கெடுத்தக் கள்ளே கடனையளித்தக் கள்ளே
செல்வத்தை யொழித்தக் கள்ளே சேதாரப் பானைக் கள்ளே

வழியில் தள்ளினக் கள்ளே வாய்நாறும் வெறுப்புக் கள்ளே
பழிமிகும் ஈச்சங்கள்ளே பயப்படா இறுப்புக் கள்ளே

நன்மையிழந்தக் கள்ளே நாசஞ்செய் ஜாடிக்கள்ளே
தன்மை யொழித்தக் கள்ளே தயங்காதக் காடிக்கள்ளே

மெய்யைக் கலைத்தக் கள்ளே மேன்மைத் தொலைத்தக்கள்ளே
பொய்யில் நிலைத்தக் கள்ளே பொல்லாத பீப்பாக்கள்ளே

நாட்டைக் கெடுத்தக் கள்ளே நரம்பை மடித்தக் கள்ளே
வீட்டை யழித்தக் கள்ளே வீணானமொந்தைக் கள்ளே

நாற்றம் பிடித்தக் கள்ளே நல்லோரைப் பழித்தக் கள்ளே
சோற்றைத் தள்ளினக் கள்ளே சோர்வானப் புளித்தக் கள்ளே

உடலைவதைத்தக் கள்ளே உள்ளெல்லாம் எரித்தக் கள்ளே
குடலைமுறுக்குங் கள்ளே கொலைக்கேற்றத் தென்னங் கள்ளே

சண்டாளத் தொழிலைச்செய்யச் சந்ததந்தூண்டுங் கள்ளே
தொண்டன் முருகேசன் தன்தண்டமிழ் விளம்புங் கள்ளே

மதுநீக்கு சொர்ணம்பா மாலை

(மெய்ஞானத் தங்கமிது என்ற மெட்டு)

பொதுமக்கள் நன்மைக்கிது போதவு மேசிறந்த
மதுநீக்குஞ் சொர்ணமடி சொர்ணமே
　　மாசில்லா சொர்ணமடி – ஞானச்சொர்ணமே

பன்றியும் நாயும் தொடாபாழானாக் கள்குடித்து
நன்றியிழப்ப தேண்டி சொர்ணமே
　　நாசம்விளைக்குமடி – ஞானச்சொர்ணமே

அஞ்சுபா தகத்திற்கு அடிப்படையான கள்ளாம்
நஞ்சினை நாடுவது சொர்ணமே
　　நாட்டுக் குதவாதடி – ஞானச்சொர்ணமே

மெய்யை யழித்துவிடும் மேன்மைக் குறைத்துவிடும்
பொய்யை வளர்த்துவிடும் சொர்ணமே
　　பொறுமையை நீக்கிவிடும் – ஞானச்சொர்ணமே

பேரைக் கெடுத்துவிடும் பெருமைக் குறைத்துவிடும்
சீரைக்கலைத்து விடும்சொர்ணமே
　　சிறுமை மிகுத்துவிடும் – ஞானச்சொர்ணமே

பெண்டாட்டியை யுதைக்கும் பிள்ளைகளை யடிக்கும்
தண்டங்கொடுத்திடவே சொர்ணமே
　　தாணாவை தேடிச்செல்லும் – ஞானச்சொர்ணமே

ஞானத்தை யுமழிக்கும் நற்புகழை வொழிக்கும்
ஈனத்தை தானளிக்கும்சொர்ணமே
　　இரந்துண்ணச் செய்யுமடி – ஞானச்சொர்ணமே

பாலுண்டால் பலமே நற்பழமுண்டால் குணமேகள்
கள்ளாலென்ன நன்மையடிச் சொர்ணமே
　　அதிதுன்பமாகுமடி – ஞானச்சொர்ணமே

கருப்பண்ணன் முனியாண்டி காத்தவராயனுக்கும்
விருப்பமாய் பூசைபோட்டு சொர்ணமே
விழுந்தாடச் செய்யுமடி – ஞானச்சொர்ணமே

பிச்சைக் குடியென்றும் பிரபலக் குடியென்றும்
எச்சில் குடியென்றும் சொர்ணமே
இரவல் குடியுமுண்டு – ஞானச்சொர்ணமே

வாடிக்கை குடியென்றும் வாலாயக்குடி யென்றும்
வேடிக்கை குடியென்றும் சொர்ணமே
வேணக்குடியுமுண்டு – ஞானச்சொர்ணமே

அபசாரக் குடியென்றும் ஆசைக்குடியென்றும்
விபசாரக் குடியென்றும் சொர்ணமே
வீரக்குடியுமுண்டு – ஞானச்சொர்ணமே

கருமக் குடியென்றும் காவடிக்குடி யென்றும்
தருமக் குடியென்றும் சொர்ணமே
டம்பக் குடியுமுண்டு – ஞானச்சொர்ணமே

திருட்டுக் குடியென்றும் தீரக் குடியென்றும்
முரட்டுக் குடியென்றும் சொர்ணமே
முதன்மைக் குடியுமுண்டு – ஞானச்சொர்ணமே

மேனாட்டுக் குடிவகைகள் மெத்த தினுசுவுண்டு
நானாட்டமாயெடுத்து சொர்ணமே
நவிலமுடியாதடி – ஞானச்சொர்ணமே

நாட்டைவிட்டு இந்த நானாவிதக் குடியை
வோட்ட நாமொன்றாய்கூடி சொர்ணமே
வொத்துவுழைப்போமடி – ஞானச்சொர்ணமே

மண்டலத்தில் பலரும் மங்களமாய் சுகிக்க
தொண்டன் முருகேசனும் சொர்ணமே
சொல்லிமுடித்தானடி – ஞானச்சொர்ணமே

அறிவானந்தக் கீதம்

ஓம்

அறிவானந்தக்கீதம்

இது சுத்திமாநகர் வைத்திய நிபுணராயிருந்த ஸ்ரீமான் க.ந.செ. எல்லப்பதாஸ் அவர்களின் தலைமை மாணவரும், சென்னை கொண்ணூர் மேலயம்பதி, குளத்தூர், புழல் சமதர்ம சன்மார்க்க சபைகளின் ஸ்தாபகரும், மேற்படி ஊர் ஆதிதிராவிட பஞ்சாயத்து கமிட்டி தலைவரும், ஐக்ய நாணய சங்க பஞ்சாயத்தாரும் (ரிஜிஸ்ட்), செங்கற்பட்டு ஜில்லா ஆதிதிராவிட மகாஜன சபை (பொன்னேரி)யின் காரியவமைச்சரில் ஒருவரும், மேற்படி ஜில்லா கவர்ன்மெண்ட் மதுவிலக்குப் பிரசாரகராக இருந்தவருமாகிய சென்னை கொண்ணூர் மகா மதுரகவி வீ.வே. முருகேச பாகவதர் அவர்களால் இயற்றி சென்னை 30சி, செயின்ட் சேவியர் வீதி, சோமேசன் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

1934

விலை அணா 0-2-0

ஓம்

நூன்முகம்

அன்பார்ந்த அறிஞர்களே!

எனது சிற்றறிவிற்கெட்டியவாறு ஒரு சில ஆண்டுகட்கு முன்னும் சமீபத்திலும் எழுதப்பட்ட பாக்களை ஒருங்குதிரட்டி காலதேச வர்த்தமானம் பொதுவாக சீர்திருத்தம் வாலிபர் விழிப்பு ஆண் பெண் சமத்துவம் இவைகளைக் கருதியும் மறுபக்கத்தில் குறிப்பிட்டுள்ள எமது பரஸ்பர நண்பர்களுடையவும், மாணவத் தோழர்களுடையவும் வேண்டு கோளுக்கிணங்கி அறிவானந்தக் கீதம் என்னும் இச்சிறுநூலை வெளியிடலானேன்.

எனவே, இதற்கு முன் வெளியிடப்பட்ட ஆதிதிராவிடர் சுயமரியாதைப் பாடல், சமரச சன்மார்க்க கீதம், ஞானரசக் கீர்த்தனை, பெரம்பூர் ரெயில்வே தொழிலாலைச் சிறப்பு சிந்து, பிரிட்டிஷ் ஆட்சியின் சிறப்புகோவை, மதுவிலக்கு பாடல், ஆதிதிராவிடர் சமூக சீர்திருத்தக் கீதம், சமதர்மக் கோலாட்டக் கீர்த்தனை, இவைகளைச் சகோதர சகோதரிகள் ஆதரித்ததைப் போன்று இவற்றிலும் குற்றங்களை நீக்கி குணத்தை அங்கீகரித்து எம்மையும் இச்சிறு கீதநூலினையும் ஆதரிக்குமாறு தங்களின் அறிவானந்த அன்பை அநவரதம் சிந்திக்கின்றனன்.

நன்றி.

எழுத்துவேலைகளில் இடையிடையே வேண்டிய உதவிகளைச் செய்து எமக்கு ஊக்கமளித்த எனதருமை வாழ்க்கைத்துணைவி திருமதி பகவதியம்மாளுக்கும், அச்சுவேலைகளில் பிழையறப் பரிசீலனை செய்து குறித்த காலத்திற்குள் அச்சிட்டுத் தந்தவரும் ரிஜிஸ்டர் செங்கற்பட்டு ஜில்லா ஆதிதிராவிட மகாஜன சபையின் (பொன்னேரி) பிரசிடெண்டும் சோமேசன் அச்சுக்கூடச் சொந்தக்காரரும், எமது பரமாசிரியர் மகாஞானபாநு 'பூஞ்சோலை' முத்துவீர நாவலரவர்களின் திருக்குமாரரும் எனது உழுவலன்பார்ந்த சகோதரருமாகிய ஸ்ரீமான் ஷட்டாவதானம் பூ.மு.வேலாயுதபாணி அவர்கட்கும், இதனை அச்சிடத் தூண்டின வர்களும் பொருளுதவி செய்தவர்களுமாகிய தோழர்கள் சென்னை தாழ்த்தப்பட்ட கூட்டுறவாளர் பெடரேஷன் பொதுக்காரியதரிசி டி.அருணாச்சலம், சென்னை (டிசிஎஸ்ஏ) தொண்டர் படையின் கமாண்டரான தர்மீகர் ஐ.உலகநாதன் அவர்கட்கும், எனது மாணவத் தோழர்களான சென்னை முத்தியாலுப் பேட்டை நிவாசர் முகமதுசிலார் சாயபு அவர்கட்கும், புழல் ஸ்ரீசமரச சன்மார்க்க சபை, ஆதிதிராவிடர் கோவாபரேட்டிவ் சொசைட்டி பிரசிடெண்டும், வெஸ்லியன் மெத்தடிஸ்ட் சபை பஞ்சாயத்து உறுப்பினருமாகிய பி.வி.மேனியல் நாகலிங்கம் அவர்கட்கும், கொன்னூர் மேலயம்பதி சமரசானந்த சபையின் நிர்வாக உறுப்பினரான வி.வி.ஆறுமுகமூர்த்திக்கும், குளத்தூர் ஆதிதிராவிடர் சமதர்ம அபிவிருத்தி வாலிபர் சங்க நிர்வாக உறுப்பினர் வி.வி.முனிசாமிக்கும், எனது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றனன்.

இங்ஙனம் அன்புள்ளத் தொண்டன்
மகாமதுரகவி வீ.வே.முருகேச பாகவதர்
மங்களவிலாசம், வில்லிவாக்கம் அஞ்சல், சென்னை.

அறிவானந்தக் கீதம்

துதி- விருத்தம்

அறிவு ஆனந்தக் கீதம் அவனியில் பரவு தற்கு
அறிவு ஆனந்த மான அருங்குரு நாதன் சொன்ன
அறிவு ஆனந்த மாகி அனைத்துயிர் தமக்குள் மேவும்
அறிவு ஆனந்த அன்பை அகத்தினி லிருத்தி வாழ்வாம்.

தாய் தந்தையர் வணக்கம்

இந்துப்பூ விலெனை யன்புட னீன்றுபின்
சந்தஞா னக்கலை தன்னில் வளர்த்திட்ட
தந்தைவே லாயுதன் தாய்தெய்வ யானையின்
சுந்தரப் பாதத் துணைமலர்ப் போற்றுவாம்.

பரமாசிரியர் வணக்கம்

பாமுத்து வீரன் நூறு பரமாவ தானஞ் செய்தோன்
நாமுத்து வீரன் மெச்சும் நங்குலத் திலகன் தேச
மாமுத்து வீரன் போற்றும் மாஞான பாநு வென்னும்
பூமுத்து வீரன் திவ்யப் பொன்னடிப் பணிகு வாமே.

ஆசிரியர் வணக்கம்

வல்லாண்மைத் திகழ நாளும் வரும்பொதுத் தொண்டி யற்ற
நல்லார்ந்த அறிஞ ரோடு நாயேனைப் பழக்கி ஞானஞ்
சொல்லாமற் சொல்லி வைத்த சுகந்தரும் வைத்யக் கோமான்
எல்லப்ப தாசன் திவ்ய இணையடி யிறைஞ்சு வாமே.

அறிவே ஆண்டவன்

பொன் கோதண்டா என்ற மெட்டு

இராகம்: அடாணா   தாளம்: ஆதி

பல்லவி

அன்பாம் பகுத்தறிவே ஆண்டவன் வேண்டும்

அநுபல்லவி

இன்ப நெஞ்சம் முதல் ஓதல்
எல்லோருக்கும் நல்லோனாய் பொல்லாமையே நீக்கும் நோக்கும்

சரணங்கள்

பொங்கும்பல் ஜீவன் மீதும்
தங்கும்நல் லாவ லோதும்
எங்கும்வி ளங்கும் போதும்
ஏழைக் கிரங்கு மாழைத்து லங்கும் (அன்

தந்தை தாய்பந்து மித்ரர்
சுந்தர குரு வறிஞர்
மைந்தர் சதி பதிக்கும்
மாசில்லாத் தூய தேசமோங்கு நேய (அன்

வாய்மை ஜெயம் வீரந்தீரம்
தூய்மைவுபச் சாரம் ஈரம்
சேய்மைப் பரோப காரம்
செப்புங் காருண்ய வொப்பில்லா புண்ய (அன்

புன்மை பொய் மடமை கோபம்
தீன்மை பொறாமை லோபம்
கன்மம் வேற்றுமை பாபம்
காணத் தகாத மானொப் பில்லாத (அன்

பதியோர் புகழ்நேச பாச
மதுரக்கவி ராச தேச
துதிமா முருகேச வாசத்
தொண்டன் விளம்புந் தண்டமிழ் கண்ட (அன்

சத்தியமே ஜெயம்

நடந்ததென்ன சொல்லம்மா என்ற மெட்டு

இராகம்: நாத நாமக்கிரியை தாளம்: ஆதி

பல்லவி

சத்தியமே ஜெயமே – அதைச்
சார்ந்தவர்க் குண்டோ பயமே. (சத்

சரணங்கள்

இத்தரை யோரெல்லாம் எதிர்த்து நின்றாலும்
இரந்துண்ணும் வாழ்க்கையில் நிறைந்துக் கொண்டாலும்
நத்திடு நண்பரெல்லாம் வெறுத் தேசினாலும்
நயமில்லாக் கயவர்கள் புறம்பே சினாலும் (சத்

பன்னுமனைவி மக்கள் இன்னல் செய்தாலும்
பட்சசோதர ருற்றார் பகைத்து வைதாலும்
அன்னைதந்தை சீர்குரு ஆர் பழித்தாரும்
அன்புடையா செல்லாந் துன்பிழைத்தாலும் (சத்

ஊரினைவிட்டு வோடிப்போக நேர்ந்தாலும்
உற்ற வெள்ளத்தில் மூழ்கிச் சாக நேர்ந்தாலும்
தாரணியிலக்கினி யெரிக்க நேர்ந்தாலும்
தவிக்குங் கடுஞ்சிறையில் இருக்க நேர்ந்தாலும் (சந்

கொடியமிருகங் கூடி மடிக்க வந்தாலும்
கொல்லும் விஷப்பாம்பெட்டிக் கடிக்கவந்தாலும்
குடிக்கக் கஞ்சியில்லாமல் துடிக்க நேர்ந்தாலும்
கோரும் அரியவுயிர் விடுக்கநேர்ந்தாலும் (சத்

நச்சினை வாயிலூட்ட நாடிவந்தாலும்
நானாவிதப் படைகள் தேடிவந்தாலும்
உச்சியில் இடிவீழ வோடிவந்தாலும்
உள்ளதெல்லா மிழந்து தொல்லை நேர்ந்தாலும் (சத்

சொல்லொணா வறுமைநோய் தொடர்ந்து கொண்டாலும்
துரோகிகள் சதிசெய்யத் துணிந்து வந்தாலும்
பல்விதச் சங்கடங்கள் பரவி நொந்தாலும்
பகர்கொன்னூர் முருகேசன் சுகத்தமிழ் போலும் (சந்

அஞ்சு வயதினிலே என்ற மெட்டு

கிளிக்கண்ணிகள்

சத்தியம் அன்பிலாதச் சண்டாள ருக்குதெய்வ
பக்தியு மேதுக்கடி - கிளியே பஜனையு மேதுக்கடி

மாதாபிதா குருவை மதியாதப் பாவிகட்கு
வேதாந்த மேதுக்கடி - கிளியே வீண்டம்ப மேதுக்கடி

இதமாகப் பல்லுயிர்க்கும் இரங்காத நெஞ்சருக்கு
மதப்பித்த மேதுக்கடி - கிளியே மாநோன்பு மேதுக்கடி

நாடுஞ்சன் மார்க்கநெறி நயமில்லாக் கயவருக்கு
தாடியு மேதுக்கடி - கிளியே தலைச்சடை யேதுக்கடி

உபவாசப் பகுத்தறிவு துலங்கச்செய் யாதவற்கு
உபவாச மேதுக்கடி - கிளியே உயர்தீர்த்த மேதுக்கடி

குருநிந்தைக் கற்றோர் நிந்தைக் கூசாம லுரைப்பவற்கு
திருவெண் ணீறேதுக்கடி - கிளியே திருமணி யேதுக்கடி

பாமர மக்கள்வயிர் பசியை நீக்காதவர்க்கு
நாமந்தா னேதுக்கடி - கிளியே நல்லநா ளேதுக்கடி

பங்கம் விளைக்குமது பானம் அருந்துவோர்க்கு
குங்கும மேதுக்கடி - கிளியே கும்பிடு மேதுக்கடி

ஐந்து பாதகந்தன்னை அஞ்சாமல் செய்பவர்க்கு
சந்தன மேதுக்கடி - கிளியே சாஸ்திர மேதுக்கடி

முன்கோபத்தை யடக்க முடியாத மூர்க்கருக்குத்
தன்மதிப் பேதுக்கடி - கிளியே தலைமைப்பே ரேதுக்கடி

சாலவும் பொதுநன்மைச் சார்ந்து செய்யாதவர்க்கு
ஆலய மேதுக்கடி - கிளியே அபிஷேக மேதுக்கடி

நீதிமதி மெய்கல்வி நெறியறியாதவர்க்கு
சாதியு மேதுக்கடி - கிளியே சமயமு மேதுக்கடி

குருடர் முடவருக்கு கொடுத்துத வாதவர்க்கு
திருவிழா யேதுக்கடி - கிளியே திருத்துழா யேதுக்கடி

அபயம் என்பவர் தம்மை ஆதரியாதவர்க்கு
ஜெபதப மேதுக்கடி – கிளியே சேவையு மேதுக்கடி

மண்டலம் புகழும் நேசன் மகிழ் கொன்னூர் முருகேசன்
தண்டமி ழறிவாயடி - கிளியே சமதர்மம் பொங்குமடி

அன்னை தந்தை முன்னறி தெய்வம்

ஈடேற ஓர் மார்க்கம் சொல்லையா என்ற மெட்டு

பல்லவி

அன்னை தந்தை முன்னறி தெய்வம் – அனைவருக்கும்

அநு சரணங்கள்

உன்னை உதரத்திலே ஓர்பத்து மாதந்தாங்கி
ஓதரும்பல பாடடைந்துமே வேதனையுடன் மேதினி தந்த (அன்

தாலாட்டிப் பாலூட்டித் தன்வயிற்றைக் குறைத்துத் தரையில் விடாமல்
இரவுபகலாய் குறைவு நேராமல் நிறையவே காத்த (அன்

தோள்மீதும் இடுப்பின்மீதும் கால்மீதும் மடியின்மீதும் தூக்கி
அழுகைநீக்கி யசுத்தம் போக்கியேவுனை காக்கவே வந்த (அன்

ஊட்டி வளர்த்துதுய ராற்றிப்பல வழியில் உற்றக் கலைகள்
கற்றுத்தேறவே மெத்தப்பரி வாய்நத்தி மகிழ்ந்த (அன்

தேகத்தில் வியாதிநேர்ந்தால் சோகத்தால் வாடியோடி
திருந்த வேண்டிய மருந்தைவூட்டியே பொருந்த சிகிச்சை வருந்தியே செய்த (அன்

நண்ணிடும் பூவில்பெற்றோர் தன்மீது அன்பில்லாத
நண்பர்களின் உண்மையறிய இன்முருகேசன் றண்மொழிசொலும் (அன்

சங்கீதமே சுகம்

மயில்வாகனமேறி என்ற மெட்டு

இராகம்: அரிகாம்போதி தாளம்: ஆதி

பல்லவி

சங்கீதம் சுகமே சந்ததமே. (சங்

அநு பல்லவி

துக்கமே யளிக்கும் துயரமே யொழிக்கும்
அங்கமிக வினிக்கும் அகில ஜனங்களுக்கும் (சங்

சரணங்கள்

பாலுண்ணும் சேய்க்கும் பரவையரவு கட்கும்
பகுத்தறி வில்லாபல விலங்குகள் தமக்கும்
ஞாலந்தனிலே கற்றார் கல்லார்கள் தமக்கும்
ஞானமுனிவர் கள்சித்தர் மாமன்னர்கள் தமக்கும் (சங்

பருசிலை நகரும் பசுவமுதளிக்கும்
பாதாள நீருங்கரை மீதெட்டிச் சிறக்கும்
அரிவையர்கள் புலம்பும் ஆயாசந் தவிர்க்கும்
அருங்கோபத்தை யொழிக்கும் அலையுமனங் களிக்கும் (சங்

இசையில்லார்க் கின்பம்பல இருக்கிலும் அரிய
ஈடில்லாச் செவிசெல்வம் இல்லாதோர் பெரிய
வசையுளாரென்ற ஆன்றோர் வாசகஞ் சிறக்கும்
வாகான முருகேச பாகவத னுரைக்கும் (சங்

கல்வியே கைகண்ட பொக்கிஷம்

கல்லார்க்கும் கற்றவர்க்கும் என்ற மெட்டு

செல்வத்தைத் தானளிக்கும் சிறப்பினையும் நல்கும்
சீராக்கும் அறநெறியின் திறனையும்ஈண் பாக்கும்
இல்வாழ்வில் பொதுவாழ்க்கை யின்பத்தை யுண்டாக்கும்
ஈடில்லாப் பகுத்தறிவின் எல்லையிலே சேர்க்கும்

தொல்லையொழித் திடும்நாக ரீகஞ்சுறு சுறுப்பே
தோன்றும்விசு வாசங்குணச் சுயஞான மிகுக்கும்
கல்வியழ காக்குங்கன ஆண்பெண்ணி ருவர்க்கும்
கைகண்டப் பொக்கிஷமே காசினியி லம்மா.

கோபம் குடிகெடுக்கும்

பழனிநாதன் என்ற மெட்டு

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: ரூபகம்

பல்லவி

கோபந் தானே குடி கெடுக்கும்
கோள் சூழ் கொடும் பாவமகுடங்கள் கோ

மகுடங்கள்

குடும் பந்தனக் கிடும் பைத்தரும்
கொல்லு மதியைத் தள்ளும் நிதியை கோ
கொஞ்சமும் இதமிகச் சொல்லாது
வஞ்சனைப் பழிமிகும் பொல்லாது கோ
கூட்டியமாச் சங்கங்களைக் கலைக்கும்
நாட்டினிலே பங்கமிக அளிக்கும் கோ

கோதுதருந் தீதுவரும் நீதமின்றி
மேதினியில் வாதுபெருஞ் சோதரர்க்குள் கோ
கொதிக்கும் ரத்தமே மிகுக்கும் பித்தமே
பதைக்குஞ் சித்தமே வதைக்கும் நித்தமே கோ
கொற்றவர் பெற்றவர் கற்றவர் வெறுக்கும்
மற்றவர் உற்றவர் பற்றருவ றுக்கும் கோ

சரணம்

பாபங்களோ ரைந்திற்கும் இதுதானே
பாரிலடிப்படை யாகு மெய்மானே கோ
தாபம்விளைத் திடுஞ் சன்மார்க்க மோட்டுஞ்
சண்டாளப் பேர்காட்டுந் தொண்டன் முருகேசன் சாற்றும் கோ

மெய்த்தலைவர்கள் யார்

வைஷ்ணவ ஜனதோ என்ற மெட்டு

இராகம்:இந்துஸ்தான் பைரவி தாளம்: ஆதி

கண்ணிகள்

சாற்றுமெய்த் தலைவர்கள் யாரெனக் கேளீர்
சந்ததஞ் சுயநல மில்லானே
சீற்றமும் வஞ்சமும் லோபம் பொறாமையும்
சிந்தையில் நினையாச் சீமானே (சாற்

சொன்மன முடற்பரி சுத்தம தானவன்
சோகமில்லான் பொய்ச் சொல்லானே
அந்நிய ருறவினர் என்னும் வித்யாசம்
அறியான் நிந்தனை உரையானே (சாற்

புகழ்ச்சியை யிகழ்ச்சியைப் பொருட்படுத் தானே
புத்தியில் வேலையிற் பிறழானே
சகலரு முவந்திடச் சாற்றுமின் மொழியான்
சாந்தஞ் சமத்துவங் காண்பானே (சாற்

தனக்கொரு தர்மமும் பிறர்க்கொரு தர்மமும்
தானொரு போதும் புகலானே
அனைத்துயிர்க் கிரங்கியே அரும்பசித் தீர்ப்பான்
அவத்தை பிறர்படச் சகியானே (சாற்

கனவிலும் கர்வம் செறுக்கிறு மாப்பு
கடுகள வேனுங் கருதானே
தனதருஞ் சுகமே பெரிதென் றெண்ணான்
தாழ்ந்தோர்க் காவனச் செய்வானே (சாற்

எளியவ ரிடம்பொய் ஏட்டினைக் காட்டி
எடுத்துரைத் தவரை யேய்க்கானே
தெளிவுடன் சொன்னப் படிசெயற் புரிவான்
திருமுருகேசன் சொலுந்தமிழ் படியே (சாற்

வாலிபர் விழிப்பு

தசரத ராஜகுமரா என்ற மெட்டு

பல்லவி

வாலிப வீரர்களே வாரும் வந்துசேரும் நலங்கோரும் விழிப்பாரும்

சரணங்கள்

சாலஇவ்வுலகினில் மக்கள் நம்சுகத்தை
சரியாய் நுகருவதே அரியதோர் வித்தை
மேலுமிக்கோலம் போனால் மீண்டும் நம்மிடத்தே
மெய்மையாய்த் தேடிவாராதே புவிமீதே தப்பாதே இப்போதே (வா

கறுப்புரோமம் வெளுத்து கண்ணிருளாமுன்
காதுகள் செவிடாகி கவலை சூழாமுன்
உறுப்புகளுந் தளர்ந்து ஓய்ந்து போகாமுன்
ஊக்கமிக வுழைப்பீரே விழிப்பீரே அழைப்பீரே களிப்பீரே (வா

தந்தங்கள் நாளுக்குநாள் கொட்டிப் போகாமுன்
தாளாமு துமைவந்து தளர்ச்சியா காமுன்
மந்திபோல் தரைதனில் குந்திச்செல் லாமுன்
மனுஷாபிமானச் சங்கங்கூட்டும் புஜம்நாட்டும் இன்பங்கூட்டும்
துன்பமோட்டும் (வா

சுறுசுறுப்போடு பலம் தொலைந்து போகாமுன்
தோற்றும் நன்மதிதடு மாற்றமா காமுன்
உறுநாடி தளர்ந்துடன் இறுமல் நேராமுன்
உரிமைகள் பொதுவாய் செய்வீரே மெய்பாரே பொய்தீரே உய்வீரே (வா

ஓங்கும் விடுதலையின் உயர்கொடி பிடித்து
ஒற்றுமை துலங்கிடப் பற்றுட னுழைத்து
தீங்குவர் ணாச்ரமக் கோட்டையை யிடித்து
திறமிலா ஜாதிமத மழித்து பீதியொழித்து நீதிசெழித்துக் கியாதிமிகுந்து (வா

உயிர்போக நேரினும் உண்மையை வுரைத்து
உயர்பகுத்தறி வுக்கொவ் வாதத்தை வெறுத்து
பயமின்றி சத்தியத்தைப் பார்மிசை வகுத்து
பரஸ்பரத் தொண்டில் சலியாதீர் மெலியாதீர் நலியாதீர் கலிகால (வா

சுதந்தரம் சமத்துவம் சோதரம் நேரே
துருக்கி ஜப்பான் சைனா ஆதாம்தேரே
இரஷ்யா ஜர்மனியை இங்கிலீஷைப் பாரே
ஈடில்லா ஜெயமிகத் தங்கும் வீரம் பொங்கும் அன்பிலங்கும்
மேநாடெங்கும் (வா

மதுரிதக் கவிமுரு கேசன் சொல்லறிந்து
மண்டல மெண்டிக்கும் கொண்டாடச் சிறந்து
பொதுநலச் சேவையில் போதவு நிறைந்து
புகழ்மிகு சுதந்திரம் பகுப்பீர் செயல்மிகுப்பீர் மனமுகப்பீர்
சுகம்வகுப்பீர் (வா

விடுதலை

கதர் கப்பல் கொடி தோணுதே என்ற மெட்டு

இராகம்: வசந்தா தாளம்: ஆதி

பல்லவி

விடுதலைக் குயில் கூவுதே
விமரிசை யானஜெய சமதர்மப் பூங்காவிலே

அநுபல்லவி

அடிமை வாழ்வோ ஆபாசம் அனைத்திலும் வித்தியாசம்
மடச்சாதி மதமோசம் மண்ணாய்ப் போகஉல்லாச (விடுத

சரணங்கள்

காதல் கலப்புமணங் காசினி செழித்திட
மாதரடிமை யென்ற மடமையை யொழித்திட
மதிவாழ்க - முன்னை - விதிமாழ்க
மக்களெல்லாம் ஓரினமாய் துக்கமின்றி நாளும் சூழ்க (விடுத

கொழுத்த முதலாளிகள் கொடுமை யெல்லாமடிய
உழைக்கும் தொழிலாளர்கள் உண்மைப் பயனடைய
உதவாத - பல - மதபேத
ஊழல்களெல்லாம் கழிக்க ஏழைமக்கள் விழிக்க (விடுத

பொய்வேதப் புராணமந்ரப் புரட்டுகளு மறைய
மெய்யறந் தூய்மை வாய்மை மேன்மையிலே நிறைய
மேதினிலே - இந்தப் - போதினிலே
மிக்கக்கல்வி கைத்தொழிலில் தக்கபடியே சிறக்க (விடுத

முன்வினைச் சகுனம்விதி மூடப்பழக்கம் போக
தன்மதிப் போங்கி மக்கள் சரிநிகர் சமமாக
தகையோங்க - உள்ளப் பகைநீங்க
தைரியமே மிகுக்க சௌகரியமே வகுக்க (விடுத

இறந்தோர்க்குமம் சாமிகட்கும் இயற்றுஞ் செலவனைத்தும்
சிறந்த மக்களின்கல்வி செய்தொழி லுணவிற்கும்
செலுத்திடுவீர் - மிக-வலுத்திடுவீர்
செறியும் பகுத்தறிவே அறிந்துச் சுகித்திடவே (விடுத

வறுமைப் பிணியொழிய வர்ணாச் சிரமமழிய
மறுமை சொர்க்கம் நரக மனப்பான்மை யுங்கழிய
மாமதுரக் - கவி - பாவிதுரன்
வருங்கொன்னூ ருறைநீத அருமுரு கேசன்கீத (விடுத

பெண்மக்கள் துயரம்

ஞானப்பண்டித மோதிலால் என்ற மெட்டு

இராகம்: இந்துஸ்தான் பியாக் தாளம்:ஆதி

பல்லவி

ஆண்களா திக்க மிதுவோ அகிலப் பொதுவோ

அநுபல்லவி

பெண்கள்நா மூங்களிரு கண்கள்போ லிருக்க
பேதமுங் காட்ட லாகுமா இதுதகுமா? (ஆண்

தொகையறா

தீங்கின்றி ஒருஆணை நாங்கள்நோக் கிழற்கற்பு சென்றது
யென்பீர் மேலும்
நாங்கள்தா னிருக்கினும் இறக்கினும் மறுமணம் நாடியே
செய்துக்கொள்வீர்

நீங்கள்தா னிறந்திடில் யெமைகைமை யாக்கியே நெடுமூலை
தனிலடைப்பீர்
ஓங்குநல் லியற்கையி னுணர்ச்சியைத் தடுப்பீர்கள்
ஓரவஞ் சனையே செய்வீர்.

அநுபல்லவி எடுப்பு

உம்மைபோ லறிவு உயிர்புலன் பொறிகள்
எம்மனோருக்கும் இல்லையா இதைச் சொல்லையா (ஆண்

தொகையறா

செல்வத்தில் சுதந்தரம் செய்தொழிலில் சுதந்தரம் சீர்அரசியலில்
சுதந்தரம்
பல்விதத் தும்வழுங் காதடி மைத்தளை பணித்தீர்மன
மொழிவுடற்கும்
கல்வியேன் அடுப்பூதும் பெண்களுக் கென்பீர்கள் கணவனே
தெய்வமென்பீர்
நல்லயிளங் கன்னியை கொடுப்பீர்கிழ வற்குநீர் நரைத்தக்கிழவியை
வெறுப்பீர்

பாட்டு எடுப்பு

நாயகன் அகத்தும் தாயார்தம் அகத்தும்
காயம் அழியும் வரையும் கலங்கச் செய்தீர்

தொகையறா

செவ்வையோ பொம்மைபால் உயிரற்றப் பிணத்தைப் போல்
செய்துவைத்தது முறைமையோ
ஒவ்வுமோ காதல்மண கலப்புமண மறுமண உரிமையைத்
தடுப்பதற்கு
எவ்விதச் சுயநலம் அம்மம்மா பெண்பழி ஏற்குமோ
வெட்கம் வெட்கம்
இவ்விதக் கொடுமை னின்னமும் செய்திடில் இசையுமோ
அறிவுலகு காண்.

பாட்டு எடுப்பு

இனிமேலும் உரைக்க இரத்தமே பொங்குதையோ
தனிமுருகேசன் தமிழால் தர்மமறிந்தும் (ஆண்

தாழ்த்தப்பட்டார் துயரம்

தேயிலைத் தோட்டத்திலே என்ற மெட்டு

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: ரூபகம்

பல்லவி

நாட்டுப் புறங்களிலே – சாப்
பாட்டுக்கும் ஆடைக்கும் பதைக்கிறா ரைய்யய்யோ

சரணங்கள்

மாட்டைப் போல ஆதி-திராவிட
மக்கள் துடிக்கிறார் துக்கத்தால் வாடி
கோட்டுச் சட்டையேது – குளிரின்
கொடுமையா லுடல்மிக நடுங்கியே வொடுங்குறார்
வீட்டுமனை யேது – பாலர்
வேடிக்கை விளையாட்டின் வாடிக்கையேது
பாட்டுச் சங்கமேது – படிக்கப்
பள்ளிக்கூடமேது வெள்ளை வுடையேது (நாட்

தங்க நகையேது – நல்லத்
தண்ணீரேது வெளுக்க வண்ணானே தம்பட்டன்
மங்கலப் பறையேது – வண்டி
மாடேது காலினில் ஜோடேது குடையேது
செங்கல்லால் வீடேது – மீறிச்
சிலருக்கிருந்தால் வீணேகலகஞ் செய்துக்கட்டி
அங்கம் பதைத்திடவே – பாவிகள்
அடித்திடுவாரவரைத் துடித்திடவே அந்தோ (நாட்

சுத்தவுணவேது – செத்தால்
சுடலைக்கு வழியேது உடல்நலனேது
பித்தளைப் பொருளேது – ஆண்
பெண்கள் நிர்வாணமோ கண்காண யிலாது
கத்திக் குமுறுகின்றார் – அவர்கள்
கால்வயிறு கஞ்சிக்கு நால்வழிகளிலும்
பத்துபைசாக் கூலி – அதற்குப்
பகலிலும் இரவிலும் வயலிலே கிடப்பார் (நாட்

ஆங்கில வரசோங்கும் – நாளில்
அநியாய மிருந்தால் இனிவருமெனக் கூறும்
ஏங்குராம ராச்யம் – தன்னில்
என்னென்னச் செய்வாரோ தன்னலச் சாதியார்
ஓங்கிடுஞ் சீர்திருத்த – ஆர்வம்
உண்மையாகக் கொண்டத் தொண்டரே தலைவரே
பாங்கா யிதையறிந்து – உமக்கு
பார்க்கக் கண்ணில்லையோ கேட்கக் காதில்லையோ (நாட்

குழம்பு சாதம் போட்டால் – அவர்கள்
கொழுத்துப் போவாரென்று அழுத்தமாகக் கூறி
பழையப் புளித்தகூழை – ஊற்றப்
பானைப்போல் வயிறுவீங்கித் தானேமடிகின்றார்
குழந்தைகளை மாடு – மேய்க்கக்
கூட்டிப்போய் வலையினில் மாட்டி வைத்துக்கொண்டுத்
தொழும்பன் ஆண்டையென்றும் – பாடஞ்
சொல்லியே ஆண்பெண்ணைக் கொல்லுறா ரய்யையோ (நாட்

கோயில் நுழைவேது – பொதுக்
குளம்பாதைப் பள்ளியில் விளம்பும் சமமேது
நாயினுங் கேவலமோ – இந்திய
நாட்டினில் பிறந்திட்டக் கூட்டமன்றோயிவர்
காயத்தின் வுதிரமெல்லாம் – நாளுங்
கசக்கிப் பிழிந்துடல் நசுங்கிடவே யந்தோ
வாயில்லாப் பூச்சிகளாம் – இவர்கள்
வாட்டமுற் றயல்நா டோட்டம் பிடிக்கின்றார் (நாட்

பத்துரூபா யளித்தால் – அதைப்
பத்தாலே பெருக்கிவட்டிக் குமேல்வட்டி
மொத்தமாய் சேர்த்தெழுதி – படிக்க
முடியாதப் பாமரக் குடிமக்கள் மனைவீடு
சொத்தானச் சிறுநிலமும் – அவர்க்குச்
சொந்தமாகாமலே பத்திரஞ் செய்துபா
யத்தில் பறித்துக் கொள்வார் – கொடுமை
யத்தனை யுஞ்சொல்லச் சித்தங் கலங்குதே (நாட்

எண்ணொணா மக்களிலே – இந்த
ஏழுகோடிமக்கள் தாழ்ந்தவர்களென்றுப்

புண்ணிற்கோ லிட்டதுபோல் – சாற்றப்
போகுமோதரும மாகுமோ புகல்வீர்
கொன்னூ ருறைநேசன் – நன்மைக்
கோரும் மதுரக்கவி கூறும்விஸ்வாசன்
கண்ய முருகேசன் – நேரில்
கண்டறிந்தவுண்மைத் தண்டமிழ் விளம்பும் (நாட்

நியாயங் கூறுதல்

புவனிதாகடனீ என்ற மெட்டு

இராகம்: ஸ்ரீரஞ்சனி தாளம்: ஆதி

பல்லவி

இன்னும் வர்மமா இது தர்மமா
இரங்காதோ நெஞ்சம் ஏற்குமோ வஞ்சம் (இன்

அநுபல்லவி

சின்ன ஜாதியார் என்னும் பழிநீக்கி
சேர்த்த உரிமையைத் தந்தெமைகைத் தூக்க (இன்

சரணங்கள்

பாழும் வர்ணாச்ரமப் பேயின் சூட்சி யாலும்
பணச்செருக் காலுஞ் ஜனச்செருக்காலுந்
தாழும்படிச் செய்தீர் தன்னலத்திலுய்தீர்
தாங்கொணாத் துயரால் நாங்கள் வாடக்கண்டும் (இன்

கோயிலைக் கட்டினோம் குளங்கள் வெட்டினோம்
குடிக்கத் தண்ணீரில்லை கும்பிடத் தெய்வமில்லை
வாயிலையுங் காத்தோம் வாடியுடல் வேர்த்தோம்
வயல்மாடாயுழைத்துப் பயிரிட்டுள்ளே சேர்த்தோம் (இன்

உண்ணுபவர் நீங்கள் உழைப்பவர் நாங்கள்
ஒடுக்கி விட்டீர் எங்களை உயர்ந்திட்டீர் நீங்கள்
கண்ணுங் கருத்துமாகக் கசக்கிப் பிழிந்தீரே
காலம்வந்துஞ் சும்மா ஜாலமோனோ எம்பால் (இன்

தங்குமுதல்தர தானியத்தைக் கண்ணர்
தாட்சண்ய மில்லாமற் றானேவாரிக் கொண்ணர்
பங்கமிகுங் குப்பைப் பதர்களைக் கூட்டிப்
பாதியாயளந்து ஊதியமாய்த் தந்தீர் (இன்

மங்கையர்கள் மார்பை மறைக்கக் கூடாதோ
மங்கல வாத்திய முழங்கக் கூடாதோ
தங்க வெள்ளி நகை அணியக் கூடாதோ
தலையைச் சீவி புஷ்பஞ் சூடவுங் கூடாதோ (இன்

ஏழுகோடி நாங்கள் இந்திய ரல்லவோ
இன்ப சுதந்தரம் எங்களுக்கில்லையோ
சூழும் எங்கள் மீட்சி அன்றிசுய ஆட்சி
சொற்பனத் துமுண்டோ அற்பமதி கொண்டே (இன்

ஏய்த்தக் காலம் மலையேறி விட்டதய்யே
எங்களுக்கு மொரு பங்குகண்டோ மெய்யே
வாய்த்த யெங்கள்கண்ணீர் வாளெனவே வாட்டும்
வாசத் தொண்டன்முரு கேசன்தமிழ் கேட்டும் (இன்

சுகாதாரம்

விருத்தம்

இராகம்: ஆனந்த பைரவி தாளம்: ஆதி

அகம்வாக்கு உடற்சுத்தம் அநவரதம் ஆக்கல்
அதிகாலை விழித்தல்மல சலமதனைப் போக்கல்
பகற்றூக்கம் மிகப்புணர்ச்சிப் பாழுங்கள்ளு சாராய்
பான்மையிலாபுகைகுடிகள் பலவகையும் நீங்கல்
இகமீது செய்யுறுங்கல் இன்பால்நீர்க் காய்ச்சல்
ஈமொய்த்துப் பொருள்தடுத்தல் இரவுகறி வொழித்தல்
சுகக்காற்று உடற்பயிற்சி சுத்தவுடை மேட்டில்
சூழ்சன்னல் வீடமைத்தல் சுகவழிகாண் மாதோ.

மங்கையரி னிளமணத்தை மகிமீது தடுத்தல்
மாசில்லா மதிகாதல் மணந்தானே முடித்தல்
கங்குலுண்ட பின்னுலாவல் காய்கிழங்குக் கீரை
கனிபருப்பு நல்லவகை கலந்துணவிற் றுய்த்தல்

பங்கமிகும் அசுத்தமதை பலமிதித்தல் நீக்கப்
பாதரட்சைத் தானணிதல் பரவுந்தொத்து வியாதி
தங்குசலத் துறையுங்கொசு தன்பூச்சிப் புழுக்கள்
தனையோட்டல் சுகவழியென் றுரைத்தனரான் றோரே.

மதுவிலக்கு

சினத்தவர் முடிக்கும் என்ற திருப்புகழ் மெட்டு

இராகம்: ஆனந்த பைரவி தாளம்: ஆதி

கண்ணிகள்

மனத்தையுங் கெடுக்குந் தனத்தையுங் குறைக்குஞ்
சினத்தையும் வளர்க்கும் – மதுபானம்
மண்டையை வுடைக்குஞ் சண்டையைத் தொடுக்குந்
தண்டமே கொடுக்கும் – மதியாது
தரித்திரமிகுக்கும் வருத்தமே யளிக்கும்
சிரித்திட விடுக்குந் – தடுமாறும்
தாகமேகொடுக்குஞ் சோகமே வளர்க்கும்
போகமே யிழக்குந் – தகைபோக்கும்

காசையே பறிக்கும் மீசையை முறுக்கும்
ஆசையே அளிக்கும் – கழிநீரே
கச்சேரி சேர்க்கும் பிச்சையு மேர்க்கும்
லச்சை மிகுக்குங் – கடனாக்கும்
தாலியை யறுக்கும் வேலியை யிழக்குஞ்
சேலையை விற்குந் – தமரோட்டும்
தத்தியே நடக்கும் பித்த மேகொடுக்கும்
புத்தியைக் கெடுக்கும் – சத்யம்போம்

சலத்தினில் மூழ்த்தும் நிலத்தினில் வீழ்த்துங்
குலத்தினில் தாழ்த்துஞ் – சதிசெய்யும்
சாதனைவிளைக்குஞ் சோதனை யளிக்கும்
வேதனை கொடுக்குஞ் – சலிப்பாக்கும்
நரம்பையே முறிக்குங் குரங்கென நடிக்கும்
அருங்குணங் கெடுக்கு – சுவைபாக்கும்
நலமல்ல விலக்கும் படியெல்லாஞ் செழிக்கும்
முருகேச னுரைக்கு – நனிநோக்கும்

தீண்டாமைக் கொடுமை

பூசுவதும் வெண்ணீறு என்ற மெட்டு

தீண்டாமை யாவதெது சீறுமர வந்தானே
தீண்டாமை யாவதெது தேள்மின்சா ரந்தானே
தீண்டாமை யாவதெது தீதிராவ கந்தானே
தீண்டாமை யிவையன்றி தேசத்தில் வேறுண்டோ

சிங்கார லஹரி என்ற மெட்டு

இராகம்: நீலாம்பரி தாளம்: ஆதி

பல்லவி

தீண்டாமைப் பிசாசே – உன்
தீமை சொலப் போமோ சே சே

அநுபல்லவி

ஆண்டாண்டாய் ஆணைப் பெண்ணை
அநியாயமாய் அதிமத மீறி
அண்டிக்கொண்டு அதனோடு நிலா மனும்

கீழ்காணும் சுரநடை

ஆலயமடம் பள்ளியிலும் குளத்தோ
டரு முனைவிலும் பொதுவழிப் பொத்தொழிற் பொதுத்தலம்
பொதுகிணர் மதுக்கடை மயிர்வினை ஞர்கள்பாலும்
மேலும்பறப் பாம்புபற மைனாபறக் காக்கைபறக்
குக்கன்பறக் கோயில்பறக் கோலம்பறச் சாமிபற
மேளம்பறச் சபைபறநியதி பறக்குல மெளனத்தலையே
விரித்தனை தின மனம்புழுங்கப் பாவமிகும் (தீண்

சுரம்

சா ரிசநிப சநிபம கமபா
கம பசநிப கமபநி சரிசநி சநிபம
பநிபம பமகம ரிகமரி கரிபாம
காமபநி சசநிப நிநிபம பபமக
மமகச மகபம நிபசநி பமகம
பநிதநி பதபபமகச பமகச நிபமகச
சநிபமகச ரிசநிபம காமபநி (தீண்

சரணம்

கூண்டிற் பட்சியென ஈண்டு மக்கள் துடிக்க
கொடும் பாவிகள் செழிக்க
பூண்ட பொய் நிறைபலப் புரா ணங்கள் வரைந்த
ஆண்டிகள் குழுவினில் ஆதிக்கம் நிறைந்த
வேண்டு மதுரகவி முருகேச னறைந்த (தீண்

செந்தூர் வேலாண்டி என்ற மெட்டு

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: ஆதி

பல்லவி

தீண்டாமைப் பேயே - தீயகுணத்

மகுடங்கள்

சீரியர் கண்டுனைக் காரியுமி ழவுன்
வீரிய மாமலை யேறிவிட் டதினி (தீண்

தேசந் தன்னையா பாசஞ் சூழவே
மோசஞ் செய்ததி நாச மாக்கிய (தீண்

சிறந்திடு தமிழகம் பொருந்திடுந் தோழர்கள்
நிறைந்திடு மனமிக வருந்திடுஞ் சுயநலத் (தீண்

சூது மிகுந்த வுன்றன் தீதுகளினி வொருப்
போதுஞ் செலாதிந்த நீதி யறிந்திடு (தீண்

தொகையறா

உடுக்கைசிலம் பில்லாமில் பூசாரிநைவேத்ய
முயர்வெள்ளிப் பிரம்பில்லாமல்
தொடுக்குமெலி மிச்சங்கனி கூடம் வேப்பிலைநீறு
கொடும்பலி தானில்லாமல்
கொடுத்துனை யறிவினால் பிடித்தாட்டி ஓட்டியே
சூட்சியாம் பெருநெருப்பில்
அடுத்துமே வுயிருடன் தள்ளியே யெரித்திட
அறிஞரினை ஞர்களெழுந்தார்

சரணம்

மாண்டாரைப் போலக் கோடி
மக்களை மதித்தாய்தேடி – உன்
மமதையை யழித்திடச் சமநெறி தழைத்திடக்
கமழ்முரு கேசன்றன் தமிழ்மொழி செழித்திடத் (தீண்

தேக நிலையாமை

கலிகாலப் போக்கு

இராகம்: சங்கராபரணம்

விருத்தம்

கப்பலிலோ ரெயிலிலோ கனமோட்டார் சைக்கிளிலோ
கடினபஸ் லாரி தனிலோ
செப்புமின் சாரத்தி லோடிராம் காரிலோ
செயற்கரிய ஏரோப் ளேனிலோ
ஒப்புந்தொழிற் சாலைகளில் ஓடும்யந்த் ராங்களிலோ
உயரிய சப்ம ரினிலோ
உப்பரிகை லிப்ட்டிலோ பொன்சுரங் கத்திலோ
மக்களுயிர் போகு மன்றோ.

உலகவாழ்வு முடிவில் தாழ்வு என்ற மெட்டு

இராகம்: சங்கராபரணம் தாளம்: ரூபகம்

பல்லவி

அருமை தேகம் அழிந்து போகும்

மகுடங்கள்

அன்பை நுகர்பவர் தன்மை இன்பம் பிறர்க் கருள்வது நன்மை அரு
அண்டும்பூச் செண்டுமுன் கொண்டும்பின் பெண்டுட னுறங்கிய அரு
அத்தம் போகம் அரசு வாழ்வு மெத்த யோகம் தரும் விசேஷ சுக அரு
அப்பமும் நற்கனி வர்க்கமும் ஒப்பறி றப்பிய பொற்புடைய மா அரு
ஆட்டமிகும் பந்துமித்ரர் பெண்டு பிள்ளை ஓட்டமிகும் சந்தையினிற்
சுவட்டமெனத் தரும் அரு

சரணம்

தருமம் சத்தியம் சன்மார்க்கம் சாட்சி
தன்மதிப் போங்கச் செய்வதே மீட்சி
கருமம் சமத்வம் கண்யம்அத் தாட்சி
கண்ட வர்க்கேசேமம் உண்டு என்றும் மாட்சி

கனப் பொது ஜனஉப காரரே
இனமிகு மனுஷவ தாரரே
வனமது ரக்கவி முருகேசன்
வண்டமிழ் பதம்கண் டுணர் ததிஇதம் (அரு

சீர்சிறக்குமேனி என்ற திருப்புகழ் மெட்டு

கண்ணிகள்

இராகம்: இந்துஸ்தான் தோடி தாளம்: ஆதி

பார்அனைத்தும் ஆண்ட மன்னர் முன்னோர்களும்
பாடற்பெற்ற ஞானச் சித்தர் முத்தர்களும்
பாசமுற்ற தேவ பத்தர் நித்தர்களும் – அனைவோரும்
பாமுடலே நீத்து மண்ணாய் மண்ணாய்போகப்
பாரிலுணர்ந் தேழைப் பசி பசிநீக்கிப்
பாதீயப்பொது வாழ்வை நெஞ்சில் நெஞ்சில்தினம்–மறவாதீர்

நாரிமக்கள் தோட்டம் பலம் நிலங்களும்
நாளுஞ்சுகங் காட்டும் உண்டி வண்டிகளும்
நாகரீக மாடி வீடு மாடுகளும் – கடைநாளில்
நாமரையிற் பூண்டச்சிறு சிறுகந்தைக்
கோவணமுங் கூட வராவரா தென
நாணிலத்தில் பார்த்தும் வீணே வீணேநாள்–கழியாதீர்

ஏர்மிகுந்த லோக இன்பம் இன்பந்தனை
யேசகல மாந்தர் தங்கள் தங்களுக்கும்
ஏற்றப் பொதுவாக நல்க நல்க வுண்மை – யறியாத
ஈனமுற்ற சாதிமதம் மதம்பிடித்
தேழைமக்கள் வாழ்வில் இன்னு மின்னுந்தடை
யேபுரியும் பாவம் ஏனோ யேனோயினி – விடுவீரே

சீர்மிகுத்தக் காதல் அறி வறிவினைச்
சேகரித்து யார்க்கும் சரி சரிநிகர்
தேவையெனக் காட்டும் முது முதுவர்கள் - பதம்போற்றி
சேருங் கொன்னூர் வாசத் தொண்டன் தொண்டன்ஜெயந்
தேடுமுரு கேசன் சொலுஞ் சொலுந்தமிழ்
தேனினிக்கக் காணுஞ் சிறுசிறு நெறி - அறிவீரே.

இரக்கம்

ஓம்பினேன் கூட்டைவாளா என்ற தேவார மெட்டு

இராகம்: ஆனந்த பைரவி தாளம்: ஆதி

மிக்கவே செல்வம் பெற்று மேன்மையிற் றிகழ்வா ரேனும்
தக்கமாக் கல்வி கேள்வி தான்படைத் துயர்ந்தா ரேனும்
இக்கலி யுலகம் போற்றும் இணையிலாப் பெரியா ரேனும்
மக்கள்மீ திரக்க மில்லார் மடிந்திட்ட பிணமா வாரே.

மும்மூர்த்தி யான புத்தர் முகமது யேசு நாதர்
கொம்மைஸ்ரீ ராம கிருஷ்ணர் குறள்வள்ளு வர்*ந ரேந்ரர்
நம்மௌவை ராம லிங்கர் நற்றாயு மானார் மற்றும்
செம்மைசே ரிரக்க முன்னோர் தீனர்கள் தெய்வந் தானே.

வாழி விருத்தம்

சதமிகும் சத்யம்நீட தன்மதிப் போங்கி வாழ்க
பதமிகும் அறிவு மல்க பலகலைத் தொழிலும் வாழ்க
இதமிகும் அறிஞர் சூழ்க எழிற்சம தருமம் வாழ்க
விதமிகும் கதால் பூப்ப வித்துவர் வாழ்க மன்னோ.

*நரேந்ரர் - விவேகாநந்தர்

இப்புத்தகமும், 0-3-0 அணாவிலையுள்ள ஆதிதிராவிடச் சமூக சீர்திருத்தக் கீதமும், 0-1-0 அணாவிலையுள்ள சமதர்மக்கோலாட்டக் கீர்த்தனையும் ஆகிய புத்தகங்கள்:

கிடைக்குமிடங்கள்:

குறிப்பு: இப்புத்தகம் வெளிவந்தபோது இந்நூல் கிடைக்கப்பெற்ற பெருந்தகைகளின் முகவரிகள் இவைகள் என்பது நன்றியோடு போற்றத்தக்கது.

1. V.V. *ஆறுமுகமூர்த்தி*
மங்களவிலாசம், கொண்ணூர்,
மேலயம்பதி, வில்லிவாக்கம் போஸ்ட், சென்னை.
2. D. *அருணாச்சலம்*
தாழ்த்தப்பட்ட கூட்டுறவாளர் பெடரேஷன்
பொதுக்காரியதரிசி, இளைப்பாற்று மாதாகோயில்
மயிலாப்பூர் போஸ்ட், சென்னை.
3. *தர்மீகர் ஐ. உலகநாதன்*
D.C.S.A. *தொண்டர்படையின் கமாண்டர்*
நெ.20, ஜெனரல் பாட்டர்ஸ் சாலை,
மவுண்டரோட், சென்னை.
4. N. *முகம்மது சிலார்*
நெ.42, வெற்றிலைப்பாக்கு கடை
கிருஷ்ணன் கோயில் தெரு,
மண்ணடி போஸ்ட், சென்னை
5. P.V. *மேனியல் நாகலிங்கம்*
வெஸ்லியன் மெத்தடிஸ்ட் சபை
பஞ்சாயத்து உறுப்பினர்
புழல், ரெடில்ஸ் போஸ்ட், சென்னை
6. V.V. *முனிசாமி*
ஆதிதிராவிட சமதர்ம அபிவிர்த்தி
வாலிபர் சபை நிர்வாக உறுப்பினர்
குளத்தூர், வில்லிவாக்கம் போஸ்ட், சென்னை

தமிழ்ச் சோலை

தமிழ்ச் சோலை

கவிதை மலர்-1

ஆக்கியோன்

சென்னை கொண்ணூர் மகாமதுரகவி

வீ.வே. முருகேச பாகவதர் அவர்கள்

(ஆதிதிராவிட சமூக சீர்திருத்தம், அறிவானந்தம், சுயமரியாதை, சமதர்மம், சன்மார்க்கம், ஞானரசம், மதுவிலக்கு, சென்னை சிங்காரம், மாதருரிமை, வெள்ளப் பாடல் முதலிய பன்னூலாசிரியர்)

கிடைக்குமிடம்

மங்கள நிலையம்

1, டி.பிளாக் அலெக்சாண்டர் கிராமம்,

பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.

உரிமை பதிவு செய்யப்பட்டது 1946 விலை ரூ.1

சமர்ப்பணம்

பேரார் பம்பாய் பெருந்தா ராவிப்
பாரார் புகழும் பழந்த மிழர்தம்
ஏரார் அன்புக் கீடாய் இந்நூல்
சீரார் சமர்ப்பணம் செய்தேன் கனிந்தே!

– ஆசிரியர்

ஆக்கியோன் முன்னுரை

இந்நூலில் உள்ள பாக்கள் பலதிறப்பட்டவை; என் பொது வாழ்வுக்கிடையில் கிடைக்கப் பெற்றக் குறுகிய அவகாசத்தின் போதெல் லாம் எழுதி வைத்தவை; சில செய்தித் தாள்களில் வெளிவந்தவை; "திராவிட வீரன்" நாடகத்தில் இசைக்கப் பெற்றவை; பல இன்னிசை அரங்குகளில் பாடப் பெற்றவை; அவற்றின் தொகுப்பே இந்நூல்.

3-3-1946-ல் பம்பாய் தாராவி தென்னிந்திய ஆதி திராவிட மகாஜன சங்க ஆண்டு விழாவுக்குத் தலைமை வகித்த போது மகாஜன சங்கத்தார் - மற்றும் பல கழகத்தார் - அன்பர்கள் - தோழர்கள் அளித்த பணமுடிப்பின் துணைகொண்டு வெளியிடப்பட்டதே இத் "தமிழ்ச்சோலை" கவிதை மலர் முதற்பாகம்.

இதன் கண், ஒரே கருத்துக்கள் சில வெவ்வேறு பாக்களில் உள்ளன. இதைத் தனித் தனி இராகங்களில் இசைக்கும்போது சரிப்பட்டு விடும். குற்றங் களைந்து குணநோக்கக் கோருகிறேன்.

இந்நூலை ஒவ்வொரு தமிழர்களும் படித்து, தீண்டாமை வறுமை - மடமை இவை போன்ற பலக் கொடுமைகளை அறவே அழித்து, இன்புற்று வாழ வேண்டுமென்பதே நமது விருப்பம்.

என் உள்ளத்தே எழும் கவிதையைச் சேர்த்து மாலையாகத் தொடுத்து (எழுதிக்) கொடுக்கும் எனது இன்ப வாழ்க்கைத் துணைவி பகவதி அம்மைக்கு என் நெஞ்சுகந்த நன்றி.

வீ.வே. முருகேசன்

முகவுரை

சமுதாய சீர்திருத்த துறையில் நீண்ட நாட்களாக உழைத்து வரும் என் நண்பர் தோழர் வீ.வே.முருகேச பாகவதர் அவர்கள் சிறந்த தமிழ்ப் பற்றும், புலமையும் கொண்டவர். அரிய பெரிய கருத்துக்களை, எளிய, இனிய முறையில் நாட்டு மக்களுக்கு எடுத்துரைத்து மக்கள் நல்வாழ்க்கை பெறுவதற்காக பெருமுயற்சி எடுத்துக் கொள்ளும் பண்புடையவர். அவர் தமது ஆழ்ந்த அனுபவத்தையும், சிறந்த கவித் திறனையும் துணைகொண்டு "தமிழ்ச் சோலை" என்ற நூலை வெளியிட்டிருக்கிறார். "தமிழ்ச் சோலை"யில் அரிய கருத்துக்கள் கொண்ட பல மலர்கள் உள்ளன. மக்கள் எளிதில் பாடத்தக்க 'மெட்டுகள்' கொண்ட பாடல்களும், மற்றும் பல கவிதைகளும் கொண்ட தமிழ்ச் சோலையில் பழங்குடி மக்களின் நிலைமை, பாட்டாளிகளின் துயரம், விதவைகள் விசாரம் ஆகிய பல கருத்துகளும் சமுதாய நிலைமையை விளக்கும் சிறு கவிதைக் கதைகளும் உள்ளன. இவை மக்களுக்குப் புத்தறிவு பிறக்கவும், புதுவாழ்வு பெறவும் உதவும். சிறந்த உவமைகளும், இனிய வர்ணனைகளும் கொண்டுள்ள இக் கவிதைகளைப் பெற்றுத் தமிழர் பெரும் பலன் அடைவார்கள் என்று நம்புகிறேன். மூடப் பழக்க வழக்கங்கள் ஒழிந்து, ஜாதி பேதம் நீங்கி மக்கள் புதுநிலை அடைய வேண்டுமென்று பாடுபடும் சீர்திருத்த வாதிகளின் வேலைக்கு, இந்தக் கவிதைப் பெருந் துணைபுரியும். இத்தகைய நூலை மக்கள் ஆதரித்து கவிஞரை மேலும் மேலும் ஊக்குவிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

சி.என். அண்ணாத்துரை, எம்.ஏ.,
"திராவிட நாடு" ஆசிரியர்

சிறப்புரைகள்

"இளங்கோவன்" தமிழ்ப் பேசும் படக்கதை, வசன எழுத்தாளர்.

மகா மதுரகவி திரு. முருகேச பாகவதர் தாம் எழுதிய 'தமிழ்ச் சோலை' கவிதை மலரை என்னிடம் காட்டிய பொழுது, நான் சற்று ஊக்கக் குறைவுடன் தான் அதைப் படிக்கத் தொடங்கினேன்... நாலைந்து வரிகளைத் தாண்டியதும், நூலின் 'கனம்' எனக்குத் தெரிய ஆரம்பித்தது... நாட்டில் 'அறிவுக்குத்தான் பஞ்சம்' என்று கவிஞர் தைரியமாகச் சொல்லியிருப்பதைக் கண்டதும், எனக்கு உண்மையில் அவரிடம் கொஞ்சம் பற்று ஏற்படலாயிற்று. அதன் மீது நூல் முழுவதையும் படித்தேன், ரசித்தேன், சிந்தித்தேன்.... இன்னும் அவர் கவிதைகளைப் பற்றி சிந்தித்துக் கொண்டு தானிருக்கிறேன். 'இதுவோ பக்தி' என்று அவர் எழுதி இருக்கும் கவிதையில், "அவ்வேழையும் ஒரு கல்லாய் இருந்திடில் துதிப்பர்கள் சாமியாய் சுயவறிவற்றவர்" என்ற வரிகள் என்னைத் தூக்கிவாரிப் போடத்தான் செய்தன. ஆனாலும், அதிக்கிரமத்தைக் கண்டு வீறலிட்டெழும் இதயத்தின் ஒலியில் சற்றுக் கடுமை இருப்பது இயற்கைத்தானே என்பதை உணர்ந்தபோது, உள்ளம் மறுகணம் சாந்தி கண்டது... 'மோட்ச நரகம்', 'தமிழன் அன்றும் இன்றும்', 'தொழிலாளர் துயரம்', 'உழவனின் உயர்வு' என்ற கவிதைகளின் மூலமாகக் கவிஞர் நாட்டின் வீழ்ச்சியைக் கண்டு எப்படித் துடிதுடிக்கிறார் என்பதை எவரும் எளிதில் உணர்ந்து கொள்ள முடிகிறது... 'கண்ணின் சிறப்பு', 'தாமரைப் பெண்' முதலியன கருத்துக்கு விருந்தளிப்பனவே யாகும்... 'எமகண்டம்', 'பல்லி விழுந்த பலன்' - முதலியன நகைச்சுவை சித்திரங்கள்... பெரும்பாலான கவிதைகள் நாட்டின் தற்போதைய நிலைமைக்கு இன்றியமையாதவை... கவியின் ஆழ்ந்த கருத்துகளும், ஆவேசமும், சொற் கோவைகளும் தமிழர் மனத்தைக் கவராமலிருக்க முடியாது... கவிஞர் திரு.முருகேசனார் மேலும்மேலும் இம்மாதிரி நூல்களை நாட்டிற்கு அளிக்க வேண்டுமென்பதே எனது பிரார்த்தனை - கவியிடமல்ல - தெய்வத்திடம்.

டி.சண்முகம், செங்கற்பட்டு மாவட்ட ஆட்சி மன்றத்தலைவர்

"தமிழ்ச் சோலை" என்னும் கவிதை மலர் ஆசிரியர் மகா மதுரகவி முருகேச பாகவதரைப் பற்றி குறைந்தது 25 ஆண்டுகளாக அறிவேன். இவர் நினைத்த மாத்திரத்தில் கவி பாடும் வன்மை உடையவர். மேலும் பொதுவாழ்க்கையில் முக்கியமாகத் தாழ்த்தப்பட்ட மக்களின்

முன்னேற்றத்திற்கு அரும்பாடு படுபவர்களில் இவரும் ஒருவர், இவர் இந்நூலை இயற்ற முன்வந்ததைக் குறித்து நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். இதை எல்லோரும் படித்துப் பயன்பெற வேண்டுமென்பதே எனது பேரவா.

ஜனாப் எம்.எஸ்.காதர் மொய்தீன், முன்னைய கவுரவ நீதிபதி, செம்பியம்.

உணர்ச்சி தரும் விருத்தங்கள் - எழுச்சி தரும் பல்லவிகள் - மீட்சிதரும் புத்துலகப் புரட்சிப் பாக்கள் கொண்டது "தமிழ்ச்சோலை கவிதை மலர்" பேச்சு - இசை - நடிப்பு - உரைநடை - கவிகள் இவற்றால், காந்தம் இரும்பை இழுப்பதைப் போல மக்களை வயப்படுத்தும் தனி ஆற்றல் நிறைந்தவர். இதன் ஆசிரியர் உயர்திரு மகா மதுரகவி முருகேச பாகவதரவர்கள். மக்களின் அறிவுக்கும், முன்னேற்றத்திற்கும் முட்டுக்கட்டையாய் இருக்கும் மதம் சாதி மூடப் பழக்க வழக்கங்களைக் கண்டித்து 27 ஆண்டுகட்கு முன்பே, எதிர்ப்புகளுக்கு அஞ்சாமல் முதன்முதல் 'அஞ்சா தெழுந்திரும் ஆதித் திராவிடரே' - 'தூங்கினது போதும் கண்ணை விழியப்பா' - 'சுதந்தரக் கனி பழுத்திருக்குதாம்' என்ற இவை போன்ற பல பாடல்களின் மூலம் தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்களைத் தட்டியெழுப்பியத் தனிப்பெருமை நமது கவிஞருக்குத்தான் உரியது. இந்நூல் தமிழ் மக்களுக்கு ஓர் அருமருந்தைப் போல நன்மை பயக்குமென்று நம்புகிறேன். வாழ்க கவிஞர்! சூழ்க தமிழ்ச் சோலை!!

திருவாட்டி வ.பா. தாமரைக்கண்ணி, சென்னை

உணவுப் பஞ்சம், துணிப் பஞ்சம், விறகுப் பஞ்சம் என்னும் எத்தகைய பஞ்சங்கள் நம்மை அலைக்கழித்த போதிலும், கவிப்பஞ்சம் இன்னும் நம்மை அண்டாமலிருப்பதற்காக மகிழ்ச்சியடைகிறோம்.

பண்டைய ரோம சாம்ராஜ்யம் தனக்கு ஈடும், எடுப்பும் இன்றி மகோன்னதமான நிலையிலிருந்த காலத்தில், ஓர் அறிஞர் திடீரென ஒருநாள் காலையில் விழித்தெழுந்து, "ரோம சாம்ராஜ்யம் இன்னும் ஒரு நூற்றாண்டுக்குள் அழிந்துவிடும். காரணம், அதில் கவிமரபு அற்றுவிட்டது. கவிகளைச் சுவைப்பாருமில்லை" என்று ஒரு துணிச்சலான செய்தியைச் சொன்னார். இதைக் கேட்டு அக்கால ரோம வீரர்கள் நகைத்தார்கள்; அவர் மீது ராஜத் துவேஷ வழக்குத் தொடர்ந்து அவரைக் கொன்றார்கள்; அவர் மாண்டார். ஆனால், அவருடைய வாக்கு பலிக்கத்தான் செய்தது. ஒரு நூற்றாண்டுக்குள் ரோம சாம்ராஜ்யம் அடிப்படையோடு நிலைகுலைந்து வீழ்ந்தது.

மேற்படி அறிஞர் கூறிய இலக்கணம் இக்காலத்துள்ள வல்லரசுகளில் எதற்கேனும் பொருந்துமோ, என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால், நம் அருமைத் தமிழ்நாட்டுக்கு அது ஒருக்காலும் பொருந்தாது. தமிழ்க் கவி மரபு இதுகாறும் அற்றுப் போனதில்லை. தமிழ்ப் பாட்டுக்களைச் சுவைப்பவர்களின் எண்ணிக்கையும் சுருங்கின தில்லை. வறுமையில் வாடியேனும் தமிழ்ப் புலவர்கள் கவிகளை - ஜீவ களையுள்ள கவிகளைத்தான் சொல்கிறேன் - பாடிக் குவித்திருக்கிறார்கள். ஓர் உண்மைக் கவி ஆயிரம் ஆண்டுகட்கு ஒருமுறைதான் அபூர்வமாகத் தோன்றுவார் என்று சொல்வார்கள். ஆனால், நமது நல்வினையைப் பாருங்கள்! ஒரே காலத்தில் - உதாரணமாக நமது தலைமுறையிலே - பல உண்மைக் கவிகளைப் பெற்றிருக்கும் பேறு நமக்குக் கிடைத்திருக் கிறது. அவர்களை வைத்துப் படைக்க நமக்கு வகையிருக்கிறதா?

மகாமதுரகவி திருவாளர் வீ.வே.முருகேச பாகவதர் நம் கண்முன் உலாவும் அத்தகைய மேதைகளில் ஒருவராவார். அவர் கல்லாத கல்லை கலை இல்லையென்பது அவர் சொல்லாலேயே விளங்கிவிடும். அவர் ஒரு பெரும் பேச்சாளி; சீர்திருத்தக்காரர்; புரட்சிவீரர்; இசை வல்லுநர்; நாடகாசிரியர்; சிறந்த நடிகர்; காலட்சேபம் செய்பவர்; இன்னும் என்னவெல்லாமோ!

மகா மதுரகவி அவர்கள் இயற்றிய பாடல்களின் தொகுதியாகிய "தமிழ் சோலை, கவிதை மலர்" முதல் பாகத்தைக் கண்ணுறும் வாய்ப்பு அண்மையில் எனக்குக் கிடைத்தது. சோலையில் புகுந்தேன். என்னை மறந்தேன். கவிதை மயமாய் விட்டேன். மேலே சொல்ல எனக்கு ஒன்றும தோன்றவில்லை. உண்மைத் தமிழர் ஒவ்வொருவர் கையிலும், அடுக்களையிலும், அலமாரியிலும் இருக்க வேண்டிய நூல் என்று மட்டும் சொல்லத் தோன்றுகிறது. முருகேச பாகவதர் வாழ்க! இந்நூலை அச்சிடுவதற்குப் பொருளுதவி செய்த பம்பாய் பழந்தமிழ் மக்களுக்கு என் வாழ்த்துக்கள்.

'விடுதலைக் கனி' நமது நாவில் தமிழ்ப் பழரசத்தைச் சொட்டு கிறது. 'விடுதலைக்குயில் கூவுதே' என்னும் பாட்டைக் கேட்கும்போது, தமிழ்ச் சோலையில் மாங்கிளை ஒன்றில் கண்ணுக்குத் தெரியாத குயில் ஒன்று கூவுவதைக் கேட்கும் உணர்ச்சியையே நாம் அடைகிறோம். 'விடுதலைத் தீ' நமது ரத்தத்தைக் கொதிப்பேறச் செய்கிறது. 'ஆலயமோ கொலைக் களமோ' என்னும் வரிகள் நமது செவிகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. "பல்லி விழுந்த பலன்" 'எமகண்டம்', 'புதுமை' என்னும் கவிகளில் பாகவதரவர்களின் நகைச்சுவைத் திறன் நன்கு வெளிப்படுகிறது.

புலவர் கதையை நடத்தும் திறத்தினை 'பாகனும், பகுத்தறிவுப் பையனும்' என்னும் பாட்டு காட்டுகிறது. கவிஞர் அவலச் சுவையைச் சித்தரிப்பதில் கைதேர்ந்தவர் என்பதை, 'தொழிலாளர் துயரம்', 'ஆதிதிராவிடர் அகமுருகல்' என்னும் பாட்டுக்கள் விளக்குகின்றன. புலவருடைய எல்லையற்ற கற்பனாசக்தி 'தாமரைப் பெண்'ணிலும் 'இசை'யிலும் புலனாகிறது. 'மஞ்சள் மகத்துவம்' நம்மைத் தூக்கி வாரிப் போட்டு விடுகிறது. பூவாரத்தைப் படிக்கும்போது நாம் சிரிக்காமல் வேறு என்ன செய்யமுடியும்? அந்தமட்டில், மற்றவர்களைப் போல், "சீவாரம்" என்று அமைக்காமற் போனதற்காக நாம் கவிஞருக்கு நன்றி செலுத்த வேண்டும்.

எஸ்.எம். ஞானப்பிரகாசம், பி.ஏ.,பி.எல்., வழக்கறிஞர் சைதாப்பேட்டை

"ஒடுக்கப்பட்ட மக்கள் - பாட்டாளி மக்கள் முன்னேற்றத்திற் காகப் பல்லாண்டுகளாகப் பாடுபடும் அன்பர் மகா மதுரகவி வீ.வே.முருகேச பாகவதர் அவர்கள் இயற்றிய "தமிழ்ச் சோலை" கவிதை மலரைப் பன்முறை படித்தேன். மூடப்பழக்க - வழக்கங்களிலே முன்னணி பெற்று வரும் மக்களின் செயலைக் கண்டித்து அவர் தம் நல் வாழ்க்கைக்கான அறிவியல் - பொருளியல் - சமூகவியல் - இவற்றை ஆழ்ந்த, அகன்ற, அரியக் கருத்துக்களோடு பொருத்தமான சொற்களில், திருத்தமான நடையில், சுருக்கமாக - எனினும் விளக்கமாகக் - கூறும் இயல்புடையவர் நமது முருகேச பாகவதர் என்று "தமிழ்ச் சோலை" சொல்லுகிறது. இக் கவிதை மலர் தமிழனின் அன்றைய - இன்றைய வாழ்நிலையை எடுத்துக்காட்டும் கண்ணாடி; மூடபழக்க வழக்க இருட்டிலே முனைந்திருப்போருக்கு ஒரு மணிவிளக்கு...."

மயிலை சிவமுத்து, தமிழாசிரியர்

"நம் தமிழ்நாட்டிலே தமிழரிடையே இருந்து தமிழர் நல் வாழ்வின் பொருட்டே தொண்டாற்றி வரும் இன்னிசைப் புலவர் மகா மதுரகவி முருகேச பாகவதர் மிக அழகாகப் பேசுவதில் வல்லவர் என்பது எனக்கு நெடுநாட்களுக்கு முன்னரே தெரியும். ஆனால், உணர்ச்சி தோன்றப் பாடுவதில் வல்லவர் என்பதை அவரால் இயற்றப் பெற்ற "தமிழ்ச் சோலை" என்னும் தொகுப்பின் முதன் மலரைக் கண்ணுற்ற பின்னரே நான் நன்குணர்ந்தேன். "எழுவாய் தோழா", "பயனிலை தோழா", "செயப்படு பொருள் தோழா", என்பன போன்ற தலைக் குறிப்பு களைக் கண்டபோது, இவை பொழுது போக்குகந்த விநோதப் பாடல்கள் போலும் என நான் எண்ணினேன். ஆனால் அவைகளைப் படித்துப்

பார்க்கும்போது மக்களுக்கு உணர்ச்சியை மிகுவிக்கும் உயிருள்ள பாடல்களாக இருத்தல் அறிந்து பெரிதும் வியப்புற்றேன். இவ்விதமே "தீண்டாமையின் கொடுமை", "பெண்ணுரிமை", "குருட்டு பழக்க வழக்கங்களின் தன்மை" முதலிய அரிய பொருள்கள் அமைந்துள்ள பாடல்கள் யாவும் புத்தம் புதிய முறையிலே, மக்கள் உள்ளம் கவரும் வகையிலே அமைந்துள்ளன. முற்காலத் தமிழர்கள் வாழ்ந்த நிலை யினையும், இக்காலத் தமிழர்களின் பிற்போக்கினையும் நமது பாவாணர் நினைந்து நினைந்து உள்ளம் உருகிப் பாடியுள்ளார். மகா மதுரகவி முருகேச பாகவதர் அவர்கட்கு என் உள்ளமார்ந்த வாழ்த்து உரியதாகும்..."

மருத்துவ ஞாயிறு பண்டிதர் எஸ்.எஸ். ஆனந்தம்,
தென்னிந்திய மருத்துவ சங்கத் தலைவர், தியாகராய நகர்.

சிறந்த பேச்சாளரும், இன்னிசையாளரும், தமிழ்க்கவிஞருமாகிய மகா மதுரகவி வீ.வே.முருகேச பாகவதர் அவர்கள் தமிழகத்திற்குப் புதியவரல்ல. பல்லாண்டுகளாகத் தன்னுணர்வுக்கும், தமிழர்க்கும் சலியாமல் தொண்டு புரிந்துவரக் கூடியவர். பேச்சளவில் சீர்திருத்தம் பேசி உள்ளூர உளுத்துப்போன வைதிகத்துக்கு அடிமையாகக் கூடியவரல்ல. சொல்லிய வண்ணம் செயலிலும் பிறழாதவர். இவரால் எழுதப்பெற்ற 'தமிழ்ச் சோலை' என்ற கவிதை மலரைப் பார்வையிட் டேன். இதன் பெயருக்கேற்ப ஒவ்வொரு பாக்களும் படிக்கப் படிக்க இன்பத் தேனூறுகிறது. உள்ளத்தைக் கவருகிறது. குறிப்பாக சுகாதாரப் பாடல்களின் கருத்திற்கிணங்க மக்கள் நடந்து வருவார்களாயின் அனைவரும் நோயணுகாமுன் காக்கும் அறிஞர்களாகலாம். எனவே, தமிழர்கள் கவிஞரின் மகாமதுர கவித்தேனை அருந்தி இன்புறுவார்களாக!

"ஜீவபந்து" டி.எஸ்.ஸ்ரீபால்,
தென்னிந்திய ஜீவரட்சா பிரசாரக சபை, தலைமை பிரசாரகர், சென்னை.

"...இந்நூலைத் திறந்ததும், 'எழுவாய் தோழா' என்ற தலைப்பிலுள்ள 'உலகமெலாம் போற்று திருக்குறளைப் பூமேல்' என்ற கவிதையைப் படிக்கும்போது உள்ளமெலாம் பூரிப்படைந்தேன். அந்த ஆரம்ப உயரிய வரிகள் இயற்கை கவிஞர் திருமுருகேச பாகவதர் அவர்களின் சிறந்த அறிவின் சிகரத்தை எடுத்து காட்டும் ஓரளவு கோலாகும். ஆம்! நமது கலை குறள்; நமது வேதம் குறள்; நமது நாகரிகம் குறள்; நமது வாழ்க்கைக்கு அடிப்படை குறள்; என்பதைப் பல இடங்களில் நினைவுபடுத்துகிறார். "ஆடியலங் கோல" மென்னும் அழகிய வெண்பா மூலம் ஆடிமாதத்தில்

பெரியபாளையத்தில் நிகழும் காட்டுமிராண்டி தனத்தை உள்ளம் உருகும் வகையில் அகக் கண்ணில் படம் பிடித்துக் காட்டி மக்களை நல்வழியில் திருப்ப பெரிதும் முயன்றிருக்கிறார்..." வெல்க பகுத்தறிவு! வீழ்க மடமை!!

திருவாட்டி டி.எஸ்.குஞ்சிதம் குருசாமி, பி.ஏ., எல்.டி.

இக்கவிதை நூல் தோழர் மகா மதுரகவி முருகேச பாகவதர் அவர்களால் இனிய, எளிய சொற்களால் அமைக்கப் பெற்ற சுவைமிகுந்த பாடல்களைக் கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது. இக்கவிஞரை சுமார் 16ஆண்டுகளாகவே அறிவேன். தன்மான உணர்ச்சிப் பெற்ற பேச்சாளர், எழுத்தளார், கவிஞருங்கூட! பல நூறு ஆண்டுகளாய் இந்துமதம் என்ற ஆரிய அடக்குமுறைக்கு உட்பட்டுக் கிடந்துழலும் நம் மக்கள் விழிப்படைய இந்நூல் உறுதுணையாய் இருக்குமென்பதில் ஐயமில்லை. "சாதிமதப் பெருங்காட்டைத் தானெரித்துப் போட்டு... தன்மான உயர்விதையை ஊன்றி" என்ற கவிகள் மிகப் பொருத்தமாகவும், அழகாகவும் நவரத்தின மாலையைப் போலக் கோக்கப்பட்டிருக்கின்றன விரிகின்ற தாமரையை அதிகாரத்தால் தடுத்து நிறுத்த முடியுமா?... அதைப் போல விடுதலைத் தீயையும் அணைக்க முடியாது என்ற உவமை மனதில் சுரீலெனப் பதியக்கூடிய ஒன்று. "பல்லி விழுந்த பலன்" நகைச்சுவை பொருந்தியதென்றாலும், உண்மை செறிந்ததல்லவா?... "காலை விழி", "சுகவழி", "கிளிக் கண்ணி" ஆகிய பாடல்கள் சிறுவர்களுக்கான பாடப் புத்தகங்களில் அவசியம் இடம்பெற வேண்டியவை.... "மங்கையர் முறையீடு" என்ற பாடலில் பெண்கள் ஆண்களைக் கேட்க வேண்டிய அத்தனை கேள்விகளையும் அடுக்காக, உருக்கமாகப் பொருத்தமாகக் கேட்டு விட்டார், தோழர் முருகேசனார்.

"துக்கமும் இரக்கமும் உதித்தது; அவ்வேழையும் (ரிக்ஷாக்காரன்) ஒரு கல்லாய் இருந்திடில் துதிப்பர்கள் சாமியாய்" என்ற சொற்களைப் படிக்கும்போது, நம்மை அறியாமலே, சிரிப்பும், கண்ணீரும் கலந்த கோபம் பொங்குகிறது. "மதமெனும் பேய்பிடியாத" மானிடப்பற்று மட்டுமே கொண்டவர்கள் கூட கலைவளர்ச்சியில் பங்கு பெறுவர் என்பதற்கு இக்கவித் திரட்டு மற்றோர் எடுத்துக்காட்டு..."

மு.அண்ணல் தங்கோ, 'தமிழ் நிலம்' எழுத்தாளர் குடியேற்றம், வேலூர்

"என் அன்புக்கும், நன்றிக்கும், உரிய தோழர் சென்னை கொன்னூரெனும் பொன்னூரளித்த பன்னூலாசிரியர் தமிழ்மணி - பகுத்தறிவுப் புலவர் - இனிய நறுங்கவி திரு.வீ.வே.முருகப்ப நாவலர் (மகா மதுரகவி

முருகேச பாகவதர்) அவர்கள் நம் அருந்தமிழ் நிலத்தில் ஆக்கி வளர்த்தளித்த "தமிழ்ச் சோலை"யில் நுழைந்துலாவி பல்சுவைக் கவிதைக் கனிகளை சுவைத்தின்புறும் நல்வாய்ப்பு கிடைத்தமைக்காக மகிழ்ச்சி அடைகிறேன். இந்நாட்டுக்குரியப் பழங்குடித் தமிழ் மக்களை இழிவுபடுத்தும் பாக்களையே இயற்றிவரும் சான்றோர், புலவர், தேசியக் கவிகள், வரக்கவிகள், தாசர்கள், தொண்டர்கள் முதலாய பலர் நிறைந்த நந்தமிழ் நாட்டிலே யார்செய்த தவத்தாலோ எவருடைய உள்ளம் உருகியதாலோ இன்று இங்கொன்று அங்கொன்றெனச் சொல்லுமாறு இரண்டொரு புத்துணர்வு - பகுத்தறிவு - புரட்சிநெறி - உரிமையுளத் தமிழ்ப்பா உழவர்கள் தோன்றத் தொடங்கி உள்ளனர். இவர்களில் திரு முருகப்ப நாவலர் அவர்கள் முதலில் வைத்தெண்ணத் தக்கவாறு இச்சோலையை அமைத்துள்ளார்கள். இவ்வுண்மையை சோலைக்குள் சென்று ஆங்கே அவர் தம் இயற்கையறிவாற் பழுத்து மணம் வீசும் பல்கனி களை சுவைத்து பார்ப்பவர்கள் நன்குணர்வார்கள் என்பதில் ஐயமில்லை. இவ்வினிய பாக்கனி நூல் தமிழ் நிலத்தும், பிறவிடத்தும் உள்ளத் தமிழர் மனைதோறும் தோன்றித் தனித்தமிழ்ப் பற்றும் தனியுரிமைத் தமிழ் அரசும் தோன்றத் துணைபுரியுமென்று நம்புகின்றேன்..."

தி.மு.ஆறுமுகம், தலையமைச்சர், செம்பியம் சர்க்கிள் உணவுகமிட்டி

என் கெழுதகை நண்பரும், பன்னூலாசிரியரும், மகா மதுர கவியெனச் சிறப்பு பெயர் பெற்றவருமாகிய தோழர் வீ.வே.முருகேச பாகவதரவர்கள் தமிழகத்திற்கு அளித்துள்ள தனிப்பரிசாக விளங்குகிறது. "தமிழ்ச் சோலை" இதன்கண் பல அரும்பொருள்கள் செய்யுள் வடிவம் பெற்றுள்ளன. இனிய, எளிய, அழகிய செந்தமிழ்ப் பாமாலைகள் நிறைந்த இத்தனித் தமிழ்நூல் புதுமையுள்ளம் படைத்துப் புதுயுகத்தைக் காண விரைந்து நிற்கும் தமிழர்க்கு உண்மையிலேயே உணர்ச்சியை ஊட்டுவதாகும். தீண்டாமை, பெண்ணுரிமை, சமதர்மம், தொழிலாளர் முன்னேற்றம் முதலியவற்றைக் கிளந்து கூறும் முறையால் பாகவதர் அவர்கள் பெரிதும் வெற்றி பெற்றுள்ளார். "பல்லி விழுந்த பலன்", "எம கண்டம்", போன்ற தலைப்புடைய பாக்கள் நகைச்சுவை ஊட்டுகின்றன. எனவே, எல்லா வகைகளிலும் இந்நூல் மூலமாகத் தமிழ்நாட்டிற்கும், தமிழருக்கும் பாகவதர் அவர்கள் சிறந்த தொண்டு செய்திருக்கிறார்; நல்வழியுங் காட்டியிருக்கின்றார் என்று துணிந்து கூறலாம். தமிழர் ஆதரவளிக்க வேண்டும்; தமிழ்நாடு முழுது மட்டுமல்ல; தமிழர் சென்று வசிக்கும் கடல்கடந்த நாடுகளிலும் "தமிழ்ச் சோலை" சென்று தமிழர் கரங்களில் திகழவேண்டும் என்பது என்னுடைய பெருவிருப்பம்.

ஏ.பி.பார்த்தசாரதி, முன்னைய செம்பியம் பஞ்சாயத்து போர்டு தலைவர்

இவ்வரிய "தமிழ்ச் சோலை"யைத் தமிழ்நாட்டுக்குத் தந்துதவிய திரு. முருகேச பாகவதரவர்களை என் பொது வாழ்வில் பல ஆண்டுகளாக அறிவேன். இவர் ஓர் ஒப்பற்றக் கவிஞர். முக்கியமாக நம் மக்கள் வசிக்கும் நகரம், கிராமம் ஏன்? வெளி மாகாணங்களிலுஞ் சென்று சமூக உயர்வுக்காக பிரசார எந்திரம்போல் இன்றளவும் தளராமல் தொண்டாற்றி வருபவர். "சத்தியமே ஜெயமே அதைச் சார்ந்தவர்க்குண்டோ பயமே" என்று வெகுநாட்களுக்கு முன் வெளியிட்டுள்ள அவரின் கவிதைக்கொப்ப நடைமுறையிலும் ஒழுகி வந்ததனாலேயே இன்று இத்துணை சிறப்புக்குரியவராய் விளங்குகிறார். அறிவுக்கொவ்வாததும், கவைக்குதவாததுமானக் கதைகளைக் கூறி மக்களை மடமையிலாழ்த்தும் பாகவதரல்ல நமது பாகவதர்... ஒவ்வொரு பேச்சிலும், பாட்டிலும், காலட்சேபத்திலும் மிக எளிதாகப் பல ஆதாரங்களுடன் கேட்பவர் வியக்கும் வண்ணம் அறிவையும், சீர்திருத்தத்தையும், "இஞ்ஜெக்ஷன்" செய்து புத்துலகத்திற்கழைத்துச் செல்லும் புரட்சிவீரர். நம் மக்களும் பொதுவாக வாலிபர்களும், இன்றைக்கு ஓரளவு விழிப்பும், எழுச்சியும், வீரமும் நாட்டுப்பற்றும் கொண்டுள்ளார்கள் என்றால், அது நமது கவிஞரின் மொழி இசை, எழுத்து இவற்றினாலேயே என்று துணிந்து கூறலாம்..."

த.வே.முருகேசன், ஆசிரியர், கல்விச்சங்கம், சென்னை.

உலகத்தில் ஒவ்வொருவர் உள்ளத்திலும் உதிக்கும் எண்ணங்கள் பலவாகும்! அவை தம்மாலும், பிறராலும் ஏற்படலாம். என்றாலும், வஞ்சக சூழ்ச்சிக் கூட்டத்தினரால் இடைக்காலத்தில் முளைத்த உயர்வு தாழ்வு, நாட்டை அடிமைக் குழியில் வீழ்த்திவிட்டன என்று தெரிந்த பல தோழர்களும், அறிஞர்களும் அக்கொடுமையினின்று நாட்டை விடுவிக்க அரும்பாடுபட்டு வருகின்றனர். இவர்களில் குறிப்பாக பொதுநலப் பிரியரும், சமூகத் தலைவருமாகிய மகா மதுரகவி வீ.வே.முருகேச பாகவதர் அவர்கள் ஒருவராகும். இவர் தமிழ் மொழிப்பாவாயிலா: இயல், இசை, நாடக ரூபமாய் பகுத்தறிவு நூல்கள் பல இயற்றி அளித்துள்ளனர். இதுபோது "சொல்லுக சொல்லிற் பயனுடைய" என்றவாறு பொருட்பொலிவும், திட்பநுட்பமும் செறிந்து சிறக்க "தமிழ்ச் சோலை" கவிதை மலரை இயற்றி அளித்திருப்பதற்கு நான் நன்றி பாராட்டுவதுடன் இதை விருப்பு வெறுப்பின்றி உன்னி உன்னி உணர்ந்தால் உள்ளம் உருக்கொண்டெழும் என்று கூறினால் மிகையாகாது. ஈண்டு அடிமைத் தளையை அறுத்தழித்தொழித்து அறிவொடு

வாழ அன்பும், ஆர்வமும் கொண்ட அன்பர்கள் ஆதரிக்க முன்வருவார்கள் என்று நம்புகிறேன்.

வே.அண்ணாமலை சாமி, கவிஞரின் மாணவர்களிலொருவன்

எனைப்போன்ற மாணவரும் எளியபழந்
தமிழர்களும் ஏற்றங் காண
பொனைப்போன்ற மொழியாலும் புரட்சிநிறை
கவியாலும் பொருந்த சாற்றி
மினைப்போன்று விளக்கிடுவன் செவிமடுத்தார்
மனந்திரும்ப மேலும் மேலும்
தனைப்போன்று பிறரைமிக நேசிக்குங்
குணம் படைத்த தகைமை மிக்கான்

இங்கிதமாய்க் கவியெழுதித் தள்ளிவிட்டால்
கடன்தீர்ந்த தென்றெண் ணாது
கங்குற்பக லோயாது பலவூர்க்குங்
கால்கடுக்கக் கடுகி லேகி
சங்கம்பல பலநிறுவி புரட்சிக்கனல்
வீசிடவே சாற்றி வீர
மங்களபே ரறிவுட்டைக் கொரியவைத்தான்
தமிழ்மக்கள் மனத்த கத்தே

கத்திநகர் தனில்வாழ்ந்த எல்லப்ப
தாசனெனுங் கவிஞர் கோமான்
உத்தமரின் முதற்சீடன் கல்லாருங்
கற்றாரு முவக்கும் பூமான்
முத்தமிழின் தேன்சுவையைத் தானருந்தி
மற்றோருக்கும் முழுவன் போடு
சித்தமுறத் தருங்குரவன் முருகேசன்
இந்நூலும் சிறந்து வாழி.

சென்னை நகராண்மைக் கழக உறுப்பினரும், டில்லி அரசியல் நிர்ணய சபை அங்கத்தினருமாகிய சட்டாவதானி பூ.மு.வேலாயுதபாணி, எம்.எல்.ஏ., அவர்கள் யாத்த

சிறப்புப் பாயிரம்

உலகுயிர் பரமா யோங்கிடு நிமல
னிலகிய வருளா லியங்குபு கறங்கு
திரைகட லுடீஇய செப்பரு ஞாலத்
துரைபவ ரிடையில் ஓதரும் பன்மொழி
ஊன்று கோலன உயர்சார் மணையன
சான்று நிற்பன சதுரோர் மொழியாம்
தமிழ்ஹீப் ருகிரேக்கும் சமஸ்கிருத லத்தீன்
அமிழ்ந்தன நான்கும் அவைகளிற் றலையாய்
திலகம்போலத் திகழுந் தமிழ் மொழி
நிலத்தோர் போற்றும் நெறியுடைத் தான
கால்டுவெல் அத்தி யட்சர் பெருமான்
மேல்நாட் டுயர்ந்த வின்ஸ்லோ பாதிரி
சார்லஸ் கோவர் தகுவிற் பனர்கள்
சீர்மொழி ஒன்றென செப்பின தமிழ்மொழி
கம்பர் அவ்வைக் கவிகாள மேகம்
அம்புக ழேந்தி யணியொட்ட கூத்தன்
தெள்ளிய குறள்நவில் திருவள் ளுவரும்
குள்ள வடிவன் கோனகத் தியனும்
நற்கீ ரன்பல நற்சங் கத்தோர்
பொற்கிழி யன்ன போதருந் தமிழ்மொழி
பத்துப் பாட்டும் பகரெட்டுத் தொகை
கத்தும் பஞ்ச காவியமுடனே
தொல்காப் பியமுதற் றோன்றிய விலக்கணம்
நல்பதி னென்கீழ் கணக்கெலாம் நாடி
சிறப்புற வந்தத் திருமிகு தமிழ்மொழி
இறப்பினை யகற்றும் இணையிலா தமிழ்மொழி
இந்த மொழியால் இசையுடன் சோலை
தந்து தீஞ்சுவை தண்ணீ ரோட
விடுதலைக் குயிலும் விடுதலைக் கூவ
விடுதலைக் கனியும் விடுதலைத் தீயும்
கடவுளைக் காணுங் கவினுறு தலமுந்
திடமுறு ஆதி திராவிடர் பண்பும்

ஆடி மாதத் தலங்கோ லமெலாம்
ஓடி ஒளிந்திட உண்மைத் தியாகி
இன்னும் பலபல எழிற்பூஞ் செடிகள்
மன்னிட வைத்தான், வாழ்கநந் தமிழர்;
வைத்தவ னாரோ வரைகுதுங் கேண்மோ
மெத்தப் புலவர் மேவிடுஞ் சென்னை
கொன்னூர் பதிநற் குணத்தவர் மெச்சிடும்
பொன்னார் மொழியன் புண்ணிய ருறவோன்
வேலா யுதவேள் விரும்பிய மனையாள்
சீலம் மிளிருந் தெய்வ யானை
அம்மை நோன்பு அவனியி லோங்க
செம்மை பெற்ற திறன்மிகு சேயன்
அகத்திய மரபு வணிபெற வந்து
சகத்தினி னூறவ தானம் செய்த
மகாஞா னபாநு மாசிலா மணியென
சிகாரம் பம்புரி செல்வனெந் தந்தை
பூமுத்து வீரப் புகழ்நா வலன்பாற்
பாமுத்து நன்னூற் பருகிய பக்தன்
வாகடங் கண்ட வயித்தியக் குரவன்
பூகட மிமிரும் பொழிற்சுலா மெண்ணூர்
வாசகண் மணியன் வாணஎல் லப்ப
தாசப் புநிதன் றன்முதற் சீடன்
விழியிமைப் பதுபோல் விரைவினில் நாற்கவி
பொழிவான் மழையாப் புதுமைகள் வழிய
பொன்னே ரிப்பதி புகழ்ந்திட அரசியல்
தன்னே ரிலாமற் றலைசிறந் திடவும்,
மாணவர் உணவின் மன்றமு நிறுவிக்
காணவுங் கல்விக் கழகமுண் டாக்கி
என்சமூ கத்தார் இன்புடன் வாழ
என்னுட னுழைத்த என்னருஞ் சோதரன்
பொதுசவை யெங்கும் போந்துயிர் புரக்கும்
மதுரித வாக்யன் மகாமது ரக்கவி
பட்டம் "விக்டோரியா பப்ளிக் ஹாலில்"
கொட்டு முழக்கோடு கொடுக்கவும் பெற்றவன்
அகமகிழ் வடைய அரும்பிர சங்க
சுகஞ்சொரி மேகந் தூய்நிலை யன்பன்
முருகே சபாகவ தன்சீர்
திருநிறை யாயுட் செறிந்துவா ழியவே!

கவிதை மலர்-1

தமிழ்ச் சோலை

எழுவாய் தோழா!

உலகமெலாம் போற்றுதிருக் குறளைப் பூமேல்
ஓதுவித்த வள்ளுவர்தம் மரபில் வந்த
நிலவுபழந் தமிழரைத்தீண் டாதா ராக்கி
நீதியற்ற தாங்கள்சுக வாழ்வில் வாழப்
பலவழியி லாள்பலத்தாற் றோளு ரத்தால்
பழித்தொடுக்கி வைத்தவர்கள் பார்த்து நாண
இலகுசம உரிமைதனை அடைய என்றும்
இன்றைக்கே சிங்கமென எழுவாய் தோழா!

பாமரரை யேய்த்தழிக்கும் நஞ்சைப் போன்றப்
பாதகர்கள் சுயநலத்தால் மக்கட் குள்ளே
தீமைதருந் தீண்டாமை புகுத்தி விட்டார்!
தேள்அரவம் மின்சாரம் திராவ கம்தீ
பூமிதனி லிவையன்றித் "தீண்டாமை" தான்
புத்தியுள்ள மாந்தரெவர் காணக்கூடும்?
ஏமாந்த திதுவரைக்கும் போதும்! போதும்!
இன்றைக்கே சிங்கமென எழுவாய் தோழா!!

உடம்பெலும்பு முறிந்திடவே செந்நீர் வேர்வை
உதிரப்பல் பாடுபட்டும் வயிற்றுக் கின்றிக்
கடல்கடந்துங் கூலிகளாய் வறுமை நோயால்
காண்தெருவின் மருங்கிலுறை புழுவைப் போன்று
துடிப்பவர்கண் ணீர்துடைக்க எதையுந் தியாகம்
செய்துபழம் பெருமைதனை நிலைநி றுத்த
இடிமுழக்கம் புரிந்துபெரும் வெற்றி காண
இன்றைக்கே சிங்கமென எழுவாய் தோழா!

பயனிலை தோழா!

எண்டிக்கும் பலநாடும் எல்லோரும் போற்றிக்
கொண்டாடும் வள்ளுவரை அவ்வையையும் மறந்து
ஒண்டவந்த வடநாட்டார் வகுத்தபலத் தொன்மை
பண்டிகையின் மூடபழ வழக்கங்க ளான
பழக்கங்கள் பலவற்றால் பயனிலையே தோழா!

தங்கத்துக் கொப்பாகும் தன்மான மேன்மை
சங்கையின்றி வேண்டும் புரட்சிமனப் பான்மை
இங்குகொடுந் தீண்டாமை இழிந்ததனி உரிமை
பங்குமுறும் அறியாமை பாழ்வறுமை தவிர்க்கப்
பாதையமைக் காவிடிலோர் பயனிலையே தோழா!

ரெட்டைமலை சீனிவாசன் ஆயபெருஞ் சிங்கம்
விட்டபல குறைகளையும் நிறைவாக்க எங்கும்
கட்டாயம் ஊரூராய்க் கழகங்கள் அமைப்போம்
பட்டதெல்லாம் இனிபோதும் பகைவர்களை நம்பி
பழம்பெருமை பேசுவதால் பயனிலையே தோழா!

தடந்தோளைத் தட்டிடுவோம்; சமத்துவமே காண்போம்
நடமாடி இனியொருநாள் நாய்வாழ்வு வாழோம்!
திடமான சிங்கம்போல் சிறந்தினிதாய் வாழ்வோம்!
படர்சாதிச் சமயமெனும் பாம்புதலை நொறுக்கப்
பயமினியுங் கொள்ளுவதால் பயனிலையே தோழா!

செயப்படு பொருள் தோழா!

இளங்கைம்பெண் திருமணத்திற் கிசைவ ளாயின்
இன்புமுறச் செயல்வேண்டும்; உயிரை யோம்ப
வளமளிக்கும் நீர், காற்று, உணவு போன்று
மாற்றானை ஒழித்திடவே மானம் வேண்டும்;
களபகுளிர் சேற்றினிலே இனிது வாழ்ந்த
கனஆதித் தமிழர்வழி வந்த நாமே
உளம்வருந்த சேற்றில்புழு வாய்த்து டிப்ப
தொழித்தல்செயப் படுபொருளே உணர்வாய் தோழா!

மக்களுண்டி மக்கள்பறித் துண்ணும் நோக்கால்
மலைபோன்று குவித்துவைக்கும் மானம் அற்றக்
குக்கல்செய லினையாழ்ந்த குழியில் தள்ளிக்
கொடியபஞ்சப் பிணியதனைக் கொல்லல் வேண்டும்;
ஒக்கதிரு மணம்இறுதிச் சடங்கு யாவும்
உயர்தமிழர் முறையினிலே நிகழ்த்தல் வேண்டும்;
அக்கிரம ஆரியர்சொல் மனுவின் சட்டம்
அழித்தல்செயப் படுபொருளே அறிவாய் தோழா!!

நமதரிய நாட்டுபழம் பெருமை தன்னை
நல்லுயிரைத் தந்தேனும் மீட்க வேண்டும்;
சமதருமம் ஆற்றலுடன் ஐக்யம் வீரம்
சாருண்மை காதலுயர் ஒழுக்கம் நீதி
அமைந்துபல கவிதை கதை தீட்டித் தீட்டி
அர்த்தமிலாப் பொய்க்கதையை அழித்தல் வேண்டும்;
கமழும்திருக் குறள்படித்தே இயற்கை வாழ்வில்
களித்தல்செயப் படுபொருளே காண்பாய் தோழா!!!

விடுதலைக் குயில்

இராகம்: பரசு தாளம்:ஆதி

பல்லவி

விடுதலைக் குயில் கூவுதே
விமரிசையான இன்பத் தமிழர் பூஞ்சோலையிலே (வி

அநுபல்லவி

மடமைசாதி மதத்தை மண்ணிற்புதைத் தழிக்க
மக்களெலாம் ஓரினமாய் துக்கமின்றியே தழைக்க (வி

சரணங்கள்

கொழுத்த முதலாளிகள் கொடுமை யெல்லாம் மடிய
உழைக்கும் தொழிலாளர்கள் உண்மைப் பயனடைய
உதவாத-சுய – நலபேத
ஊழல்களெல்லாம் ஒழிக்க ஏழைமக்கள் கண்விழிக்க (வி

பொய்வேதப் புராணமந்த்ரப் புரட்டுகளும் மறைய
மெய்யறந் தூய்மைவாய்மை மேட்டிமையும் நிறைய
மேதினியில் – இந்தப் – போதினிலே
மிக்ககல்வி கைத்தொழிலில் தக்கபடி யேசிறக்க (வி

முன்வினை சகுனம்விதி மூடப்பழக்கம் போகத்
தன்மதிப்போங்கி மக்கள் சரிநிகர் சமமாகத்
தகையோங்க – உள்ளப் – பகை நீங்கத்
தைரியமே மிகுக்கச் சௌகரியமே வகுக்க (வி

இறந்தோர்க்கும் சாமிகட்கும் இயற்றும் செலவனைத்தும்
சிறந்தமக்களின் கல்வி செய்தொழி லுணவிற்கும்
செலுத்திடவே – மிக – வலுத்திடவே
செறியும் பகுத்தறிவே அறிந்து சுகித்திடவே (வி

வறுமை பிணியொழிய வர்ணாச்சிரமம் அழிய
மறுமை சொர்க்கம்நரக மனப்பான்மையுங் கழிய
மாமதுரக் – கவி – பூமகிழ
வருங் கொன்னூருறைநீத அருமுருகேசன் கீத (வி

விடுதலைக் கனி

சாதிமதப் பெருங்காட்டைத் தானெரித்துப் போட்டுத்
தனிநலமாம் மேடழித்துச் சமத்வநிலங் கண்டு
ஓதரிய தன்மான உயர்விதையை யூன்றி
உறுதியெனும் எருவிட்டே உணர்வுபுனற் பாய்ச்சி
ஆதரவாய்ப் பகுத்தறிவாம் அடர்வேலி நாட்டி
அச்சமெனும் புள்ளோட்டி ஆருயிர்போல் வளர்த்த
ஏதமிலாத் 'தமிழ்ச்சோலை' தனிற்பூத்துப் பழுத்த
இனியவிடு தலைக்கனியை யெடுத்துண்ண வாரீர்!

விடுதலைத் தீ

விரிகின்ற தாமரையைத் தோகை தூக்கி
விரித்தாடும் மாமயிலைப் பறக்கும் புள்ளைப்
பரிதிவரும் முனம்கூவும் சேவல் தன்னைப்
பாரிலெந்தச் சட்டம் அதி காரத்தாலும்
அரிதன்றோ தடுத்திடுதல்? அவனி மீது
அங்ஙனமே ஆர்வமிக்கா ரகமே பற்றி
எரிகின்ற விடுதலைத் தீ தனையணைக்க
எவராலும் இயலாது! இயலா தம்மா!!

தியாகி

அச்சமெனும் ஒருவார்த்தைத் தேடிப் பார்க்கின்
அவனகரா தியிற்கிடைப்ப தரிதே யன்றோ!
மெச்சும்லட்சி யக்கொடியைச் செந்நீ ராலே
மேன்மேலும் தோய்த்திடுவான்; மக்கள் வர்க்க

சச்சரவைப் பசிநோயை இழிவைக் காட்டும்
தனிநலத்தை மவுடிகத்தைத் தான ழிக்க
இச்சகத்தில் தனதரிய உயிரும் ஈவான்;
எவனென்றால் இவன்றானே தியாகி யாவான்!

சதிகாரர் அவன்வீட்டைப் பெருநி லத்தைச்
சார்ந்தபொரு ளத்தனையுங் கவர்ந்திட் டாலும்
மதிகாணச் சீர்திருத்தம் மறும லர்ச்சி
வாலிபர்க்குள் தனிப்புரட்சி சமத ருமப்
பதிமேவு பிரசாரத் தொண்ட வன்றன்
பகரரிய உழைப்பையெலாம் மறந்து தீயோர்
இதமின்றித் துரோகமிட எண்ணிட் டாலும்
இலட்சியத்திற் பிறழாதான் தியாகி யாவான்!!

வீர திராவிடன்

இராகம்: பிலகரி　　　　தாளம்:ஆதி

பல்லவி

வீரத் திராவிடனே! இதை அறிவாய்!
வீரத் திராவிடனே!　　(வீ

சரணங்கள்

ஆரிய சாதிமத ஆபாசக் காட்டை
நேரிலழித் தமைப்போம் தனித்தமிழ் நாட்டை　　(வீ

பாட்டாளி வயிறார உண்ணவும் வேண்டும்
நாட்டினில் பெண்மக்கள் நலங்காக்க வேண்டும்　　(வீ

தீண்டாமை என்பதுதான் தீயதோர் சாபம்
வேண்டாம் நமக்குள் இது மிகமிகப் பாவம்　　(வீ

பொதுநலம் உயிரெனப் போற்றுதல் நன்று
மதுரகவிஞன் முருகேசன் பண் போன்று　　(வீ

இளைஞன்

நானுமொரு இளைஞனேயென் றந்த நாளில்
நவின்றநெப்போ லியன்வீர உரையை ஓர்ந்து

ஞானமுயி ரினுமினிய வொழுக்கம் ஆற்றல்
நல்லுடம்பு உள்ளவளம் உறுதி வாய்மை
தேனீயைச் சிற்றெறும்பைப் போலு ழைப்பும்
சிறுஅணில்போல் சுறுசுறுப்பும் பரந்த நோக்கும்
வானிழுந்து வீழினும்அஞ் சாதப் பண்பும்
வயிரநெஞ்சும் வேண்டும்வா லிபரென் போர்க்கே!

திராவிடம்

இராகம்: சாமா தாளம்:ஆதி

பல்லவி

என்னரும் திராவிடமே – கண்ணனைய (எ

அநுபல்லவி

உன்னரும் வாழ்வுக்கு ஓயாமலு ழைப்பேன்
உயிரைத் தந்தேனும் உனைதனி காண்பேன் (எ

சரணம்

பண்டைய நின்தனி வீரம் வைராக்யம்
பண்பறிவாற்றல் ஞானம் மானம் ஈதெல்லாம்
இன்றைய அன்னிய கொள்கையினாலே
இழிநிலையாச்சே – செழிப்பெலாம் போச்சே (எ

இமயமலை முடி மீதினி லொருநாள்
இணையிலா வில்புலிமீன் மூன்றுந் திகழ
அமைந்த மூவேந்தர் கொடியினை நாட்டி
அரும்வெற்றியு வந்த – முருகேன் சந்த (எ

இலட்சிய வீரன்

நெஞ்சாண்மை யில்லாத கோழையவன்
இறக்கின்றான், நித்த நித்தம்.
அஞ்சாத வீரமகன் ஒருமுறைதான்
இறக்கின்றான், உடல்தான் வீழும்;
எஞ்சாத புகழுடம்பு அழியாது,
இலட்சியத்திற் கிறப்பானாயின்!
எஞ்ஞான்றும் இவன்பெயரே பொன்னெ முத்தால்
சரித்திரத்தில் இலங்குந் தானே!

செந்தமிழ் நாடு

(கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற இசை)

பல்லவி

செந்தமிழ் நாட்டின் செல்வம் கரியாய்த்
தீய்ந்து போகுதே மனம்ஆய்ந்து வேகுதே - நம் (செ

சரணம்

சந்துசந்தா யெங்கும் கோயிலுண்டாச்சு
ஜப்பான் கற்பூரம் எரிந்திடலாச்சு
முந்திசீன வெடி வெடித்திட லாச்சு
மோகம் ஆனதே! விவேகம் போனதே! - நம் (செ

வேலையில்லாத தொல்லையினாலே
வெம்பசியால் மக்கள் மடிகிறார் மேலே
ஆலய உற்சவத்தால் இந்தக் காலே
ஆயிரங் கோடி வீணாய் அழியுதே ஓடி - நம் (செ

காண சகித்திடாக் 'கண்றாவி' பதுமை!
காணுதே கோயில் கோபுரப் பதுமை!
ஆணவக் கூட்டத்தினால் வந்த தீமை!
அழிவுநேர்ந்ததே! தமிழர்க் கிழிவுநேர்ந்ததே! - நம் (செ

பிள்ளைப்பெறாச் சாமிக்குப் பெண்டாட்டி எதற்கு?
பள்ளியறை அரச போகங்க ளெதற்கு?
கள்ளச்சிறு இனத்தார் பிழைத்திடத் தனுக்கு
கண்களில்லையா? உண்மை கண்டு கொள்ளய்யா-நம் (செ

பட்டாடை நவமணி நகைகளு மெதற்கு?
பசியில்லா பொம்மைக்குப் பால்பழ மெதற்கு?
'முட்டாள்' தனமிதுவே முதன்மையா யிருக்கு!
மோசம் தானையா! வெளிவேஷம் தானேயா!-நம் (செ

கோயிற்பொது சொத்துக்களைக் கூசாமலெடுத்து
குடிக்கக் கஞ்சியின்றித் தெருக்களில் கிடக்கும்
வாயில்லா மக்களின் தேவைக்கே அளித்தால்
வையம்புகழுமே! சத்தியதெய்வம் மகிழுமே - நம் (செ

தேசஆலயம் திகழும்நல் அறிவாம்
தேவதைக் கன்பினால் அர்ச்சனை புரிவாம்
பாகவதன் முருகேசன் அருஞ்சொல்
பார்த்து வாழுவோம் அறிவுசேர்த்து வாழுவோம்-நம் (செ

அறிவுக்குத்தான் பஞ்சம்!

பஞ்சம்அந்தோ! பஞ்சமது வங்கப் பஞ்சம்!!
படித்திடவும், நினைத்திடவும், கேட்கக் கேட்க!
நெஞ்சமிகத் துடிக்கவைக்கும் கொடியப் பஞ்சம்!
நேரில்பல லட்சமக்க ளுயிர்ப றித்த,
பஞ்சநிலை யருகிருக்க வயிரத் தாலே
பத்துலட்சம் செலவழித்து முடிய மைத்து
வஞ்சமலைப் பெருமாளுக் கணிந்தா ரென்றால்,
மனிதன்பகுத் தறிவினுக்கே பஞ்சம்! பஞ்சம்!!

அழிவதோ தமிழா?

பொன்னைத்தான் செம்பைத்தான் கல்லைத்தான்
கடவுளெனப் போற்று கின்றாய்!
என்னத்தான் சுற்றாய்தான் நம்முன்னோர்
இப்படித்தான் இருந்தா ராவென்
றுன்னைத்தான் கேட்கத்தான் உரைக்கத்தான்
எனக்குந்தான் உரிமை யுண்டு!
தன்னைத்தான் அறிந்தேதான் இயற்கையறி
வினில்வாழ்ந்தார் தமிழர் தானே!

நகத்தில்தான் தூசுத்தான் அணுகத்தான்
காணாத நரிம னத்தார்
செகத்தில்தான் கொழுக்கத்தான் நீமாடா
யுழைக்கத்தான் செய்தா யன்றி
இகத்தில்தான் என்னத்தான் உயர்ந்தாய் நீ
சொல்லத்தான் இயலு மோதான்?
அகத்தில்தான் கருதித்தான் பாராமல்
தமிழா நீ அழியலாமோ?

இதுவோ பக்தி?

ஒருநாள் காலை ஒன்பது மணிக்கு
வருகிறேன், செனைபூக் கடைவழி நடந்து.
அருகிலோர் மெலிந்த ஆள் ரத்த வேர்வை
பெருகிவ ழிந்திடப் பிடித்தொரு 'ரிக்ஷா'
வண்டியை யிழுத்து வந்திடப் பார்த்தேன்.
கொண்டே நின்றான், கந்தர்கோ யில்முன்,
வெள்ளைவி பூதிதூள் மேனியிற் றுலங்கிட
உள்ளிருந் திறங்கினான், உடல்பருத் திட்டஆள்,
வாட்டமும் சோகமாய் வண்டிகா ரன்கரம்
நீட்டிக் கூலிப்பெற நின்றனன், பணிவுடன்,
கொடுத்த தோர் கூலியில் குறைந்தது, ஓரணா,
அடுத்துமே கேட்டனன், அவ்வண்டி காரனும்,
'போட்டுக்கொ டுத்திடும் போகணும் தூர நான்;
மாட்டைப்போ விழுத்தேனே மனங்கல்லோ உனக்கய்யா'
என்றதும், எதிரிக்கு இருவிழி சிவந்தன!

கன்றின்மேல் பாயுமோர் காளையைப் போன்றவன்
தள்ளியே அறைந்தான், தடியன் அவ்வேழையை,
உள்ளமே பதறியே ஓடியக் குண்டனை
எட்டியி ழுத்துநான் விட்டதும், ஏனென்றான்?
'மட்டிதன' மாகுமம் மனிதனை அடித்தது
எனப் புகன் றேனெனை எதிர்த்துமே நின்றவன்
கனல் விழி கக்கிட கடுமொழி வீசினன்,
காட்டினேன், எடுத்தவன் கனமிலாச் செயலினை
வாட்டமாய் வெட்கியே வந்ததும் எதிரினில்
என் முகந் தனையவன் ஏறிட்டுப் பார்த்துமே
மன்னிக்கக் கோரியே மணிக்கரந் தழுவிபின்,
கவலையாய்க் கோயிலின் கதவண்டை நெருங்கினன்.
அவனறி யாமலே அணுகினேன், நானும்பின்,
அந்தவோர் ஏழையை அடித்ததன் கரங்களால்
வந்தமட்டும் அவன் வாய்மூடி தாடையில்
அறைந்துமே கொண்டனன்; அடியறும் பனையெனத்
தறையினில் வீழ்ந்துமே தன்னெதிர் நின்றிடும்
கல்லுரு வந்தனைக் கண்மூடி தொழுதனன்;
சொல்லநா வெழவிலை; துக்கமு மிரக்கமும்
உதித்த 'தவ் வேழையும் ஒருகல்லாய் இருந்திடில்,
துதிப்பர்கள் சாமியாய், சுயவறி வற்றவர்!
எனப்பல எண்ணங்கள் எழுந்தன அலையெனக்
கனமிலாக் காட்சியைக் காணவும் நாணியே
அகன்றதென் விழிகளும் அவ்விடம் விட்டுப் பின்
நகர்ந்ததென் உடம்புமேல் நடந்தது கால்களே!

கடவுளைக் காணும் இடம்!

வண்டியிழுப் பவன்உடம்பின் வேர்வை நீரில்!
வயலினில்மா பாயுழைப்போன் பார்வை தன்னில்!
நொண்டிமுட வன்குருடன் பிச்சை ஏற்போன்!
நோயாளி ஊமையவன் முகத்திலும் நீர்
மொண்டேற்றம் இறைப்பவன்றன் களைப்பு தன்னில்!
மூட்டைசுமந் தேகுமவன் மூச்சுதன்னில்!
கண்டுமலைக் கல்லுடைப்போன் சோகந் தன்னில்
காண்பதெனிற் கடவுளையுங் காணலாமே!

தமிழன் - அன்றும், இன்றும்!

இராகம்: அடாணா தாளம்: ரூபகம்

ஆழாழி கடந்து மேனாட்டில் வாணிபம்
    ஆண்மையாய் செய்தான் - பண்டைத் தமிழன்
பாழாகிக் கோழையாய் எதற்கும் பிற நாட்டைப்
    பார்த்திருக்கின்றான் - இன்றைத் தமிழன் !

ஆனைக்கும் அஞ்சாது வீர வாளேந்தி
    அருஞ்மர் கண்டான் - பண்டைத் தமிழன்
பூனைக் குறுக்கிட்டால் கெட்ட சகுனம் என்று
    புத்தி யிழந்தான் - இன்றைத் தமிழன் !

அஞ்சாம லெதற்கும் அறிவைத்துணை கொண்டு
    ஆனந்தமாய் வாழ்ந்தான் - பண்டைத் தமிழன்
'பஞ்சாங்கம்' 'எமகண்டம்' 'வினை விதி' இவற்றால்
    பஞ்சையாய்ப் போனான் - இன்றைத் தமிழன் !

சோதிமணி முடி திகழ நாட்டை ஆண்டு
    சிறப்புற் றிருந்தான் - பண்டைத் தமிழன்
வீதியோரம் வெய்யில் மழை பனியால் புழுவாய்
    விழுந் திறாக்கின்றான் - இன்றைத் தமிழன் !

ஒப்பிலாத அரும் இயற்கையைத் தெய்வமாய்
    உள்ள முவந்தான் - பண்டைத் தமிழன்
முப்பத்து முக்கோடி தேவரைக் காப்பாற்றி
    முழுமோசம் போனான் - இன்றைத் தமிழன் !

உத்தமப் பெற்றோர்கள் உயிர் வாழும்போது
    உணவீந்து காத்தான் - டண்டைத் தமிழன்
செத்தபின்பு பார்ப்பான் காலில் வீழ்ந்து மூட
    சிரார்த்தம் செய்கின்றான் - இன்றைத் தமிழன் !

காதல் மணங்கண்டு மனமொத்த வாழ்க்கையில்
    களிப்புடன் வாழ்ந்தான் - பண்டைத் தமிழன்
தீதுறும் வைதிக மூடமணஞ் செய்து
    சீரழிகின்றான் - இன்றைத் தமிழன் !

மக்களுற் வாழ உணவாடை வீடு
மகிழ்ந்துதவினான் – பண்டைத் தமிழன்
அக்கரையாய் கோயிற் கட்டி கல்லுக்குப் பால்
அபிஷேகம் செய்கின்றான் – இன்றைத் தமிழன் !

பொதுநல நோக்கமும் சமதர்மப் பண்பும்
பொருந்திட வாழ்ந்தான் – பண்டைத் தமிழன்
மதுரகவி முருகேசன் தமிழ் போன்று
மனம்மாற வேண்டும் – இன்றைத் தமிழன் !

பணம்

இராகம்: பீம்பிளாஸ் தாளம்: ஆதி

பல்லவி

பணமே படைத்தும் குணம் படையார்
பழியே பெறுவாரே – பாரே! (ப

அநுபல்லவி

பணம் பிணமானால் கூடவராதே!
பகுத்தறிந்தே பிறர்க்குதவுதல் சீரே! (ப

சரணம்

அங்கவீனர்க்கும் அருங்கல்வி தனக்கும்
அறிவு வளர்ச்சி சவைக்கும்
எங்கும் நிறைந்த ஏழையர் பசிக்கும்
இல்லம் இல்லாதவர்க்கும் – அளிக்க (ப

என்புமுரிய உயிர் ஊசலாட
இரத்த வேர்வை சிந்த
முன்வண்டி இழுத்து வயல்மாடாய்த் துடிப்போர்
முழு உழைப்பால் கொழுத்த – கொழுத்த (ப

தாயின் வயிற்றில் பிறக்கும் போது
தான்கொண்டு வந்ததேது!
காயம் விழுமுன் அறஞ்செயல் தோது
கவி முருகேசன் சொல்லும் – சொல்லும் (ப

*ஆடி அலங்கோலம்

ஈரவுடை தாங்கி யிளமாதர் மண்படியக்
கோரமுடன் வீழ்ந்தெழுந்து கோரிமிகப் பாரில்
உருளுவதைக் காணநம துள்ளந் துடிக்கும்;
மிருக செயலிதனின் மேல்!

மங்கையரும் ஆடவரும் மாவேப்பி லையணிந்து
அங்கமெலாந் தான்தெரிய ஆடிபுகழ் தங்கியுண்டு
தொல்லைதரும் வாந்திகழி தொத்துநொய் வந்துடலம்
அல்லல் படுவ தறி!

உள்ளொளியாய் நின்றதொரு ஓரறிவித் தீச்செயல்கண்
டெள்ளி நகையாடி யேங்கிகொடுங் – கள்ளு புலால்
தானருந்த நீ பெரிய பாளையத்தைச் சார்ந் தோடிப்
போனதுமாப் புண்ணியமோ புகல்?

ஆலயமோ கொல்களமோ அம்மம்ம! என்றலறக்
கோலம்வந்து ஆடுகோழி கொன்றுதினல் – சீலதமிழ்
நாட்டார் முறையாமோ? நல்லறிவைத் தானிழந்தக்
காட்டுமி ராண்டித்தனங் காண்!

ஞானபுத்தர் ராமலிங்கர் நல்லவ்வை வள்ளுவனார்
தானுதித்த நாட்டினிலே தர்மமதை – தேனழிக்கும்
வண்ணம் அழிக்கவெறும் வாய்வேதாந் தங்கற்றுக்
கண்குருட னானாய் காழு?

இத்தகைய தீச்செயலார் எப்படித்தான் நாடாள்வர்?
பித்தர்களைப் பாருமெனப் பேசிடவே – நத்திப்
புகைப்படங்கள் தானெடுத்துப் போகின்றார் அந்தோ!
வகைகெட்டுச் செல்கிறதே மாண்!

ஆரியர்கள் தாம்வாழத் திராவிடரா லாலயங்கள்
தாரணியில் தானமைத்த தன்மைபோல் – காரியமாய்ப்
பூசாரிவாழப் புலைக்கோயில் கட்டி வைத்தார்
ஆசார மாமோ அறி!

---

* *இப்பாடல்களில் குறிப்பிட்டுள்ள அறிவுக்கொவ்வா நிகழ்ச்சிகள் நடைபெறும், சென்னைக்கடுத்த பெரியபாளையம் என்னும் ஊர்.*

இதுதானோ உன்கல்வி! ஈதாமோ பக்தி!
இதுதானோ தண்டமிழ ரேண்மை! – இதுதானோ
அன்புடைய ஆண்டவனை அண்ட இதுவழியோ
துன்ப குணத்தானே சொல்?

பல்லி விழுந்த பலன் !

என்னூரில் ஒருகிழவர் வயது எண்ப
திருக்குமவர் எனைத்தேடி வந்தா ரோர்நாள்!
முன்நின்றார்! "ஏன் ஐயா?" என்றேன், வந்த
முழுவிவரம் உரைத்திட்டார், பல்லி ஒன்று
தன்னிடது தோளின்மேல் வீழ்ந்த தென்று!
தயங்கினேன்பஞ் சாங்கம் தந்து பார்க்கச் சொன்னார்!
என்சொல்வேன்! பலன்பெண்ணதம் போக மென்றேன்
"எனக்கா? தூ! தூ! பொய்!"யென் றேகினாரே!

எமகண்டம்

ஆசியா ஆப்ரிக்கா அமெரிக்கா – இன்னும்
ஐரோப்பா ஆஸ்ட்ரேலியா வெனவே
காசினியி ஐந்து கண்டங்களாய் – கண்ணால்
காணப் பிரித்தார் அறிஞர்களும்

ஆறாவது கண்டம் எமகண்டம் – இந்த
அகிலத்தில் இல்லாத தனிக் கண்டம்
ஆரியரும் அவர்தாசர்களும் – இதை
அறிவார்கள் தமிழர்கள் அறியாரே!

அந்தந்தக் கண்டங்களுக்குச் செல்ல – தனி
ஆகாயவிமானம் மற்றும் உண்டு
இந்த எமகண்டம் தனக்குச் செல்ல – வழி
இவர்களைக் கேட்டால்தான் இயம்புவரே!

மோட்ச நரகம்

நல்லின்ப மேமோட்சம்; பொய்யே பாவம்;
நனிதுக்க மேநரகம்; விதியே சோம்பல்;
சொல்லுமறு பிறவியே ஏமாற்றம்; நம்மைச்
சூழ்பயம்பேய்; குறைமனமே, சகுனக் குற்றம்;
பல்லுயிர்க்கும் இரங்குமனப் பான்மை நோன்பு;
பகரும்பொது நன்மையதே "பக்தி" யாகும்;
எல்லையிலாத் தைரியமே துணை தாகும்
இயற்கையெலாம் கடவுளென இயம்பலாமே!

சமதர்மம்

(அன்னையும் தந்தையும் தானே என்ற இசை)

பல்லவி

சத்யமும் தன்மமும் ஓங்க – காணும்
சஞ்சலம் பட்டினிப் பஞ்சமும் நீங்க

அநுபல்லவி

சாதி வித்யாசமே வீழ்க – ஈனத்
தன்னல மற்றதோர் பொதுநலம் சூழ்க
நீதி புத்தன் அவ்வை பிராட்டி – மற்றும்
நேர்மை சேர் வள்ளுவர் அருநெறி பரவும்

சரணம்

ஏழையர் உழைப்பினை உறிஞ்சும் – கெட்ட
இழிமனப் பான்மைகள் யாவையும் சேர்த்து
ஆழமாம் பள்ளத்தில் புதைத்து – நன்றே
ஆக்குவோம் நாட்டில் சமதர்ம வீட்டை
அன்றல்லோ யார்க்கும் நல்வாழ்வு – இந்த
ஐக்ய உலகினில் அணுகாது தாழ்வு
இன்பக் கவி முருகேசன் – சொல்லும்
ஈடில்லா செந்தமிழ்ப் பாடல் துலங்கும்

தாமரைப் பெண்

அங்கமெலாஞ் செக்க சிவப்பழகு பெற்றாள்!
அடங்கி மிக உளம்ஒடுங்கி, யேங்கி நீரில்
கங்குலெலாம் தன்விழியை மூடி, ஒற்றைக்
காலாலே தனிநின்று, தவமி யற்றிப்
பொங்கி யெழுந் தனதாசை உணர்ச்சி தன்னைப்
புற்றினிற்பாம் படங்கினதைப் போல டக்கிச்
செங்கதிரோ னாந்தனது காத லன்றன்
திருமுகங்கண் டேநகைத்தாள் கமலப் பெண்ணாள்!

இசை!

ஆடி யெழும் நச்சரவம்! பசுவமுதம் நனிபொழியும்!
அழுஞ் சேய் தூங்கும்!
நாடி வரும் பாதாளத் துறைநீரும்! மலைக் கல்லும்
நகரும்! ஈண்டும்
கூடியழும் பெண்களது களைதீர்க்கும்! அலையு மனங்
கூம்பும்! ஒன்றாய்ச்
சாடி யெழும் மதகரியும் தம்பிக்கும்! இசையின்ப
சக்தி யாலே!

காலை விழிப்பு

இராகம்: பியாகு   தாளம்: ஆதி

பல்லவி

சோதி சொரூப வானில் – ஞான
சூரியனும் எழு முன்னே

அநுபல்லவி

நீ துயிலொழித் தெழுவாயே
காதலாய் மேதினி மீதே   (சோ

சரணம்

செக்கச் சிவந்து வரும் வானம்
செங்கதிர் வருவதன் முன்னம்
குக்குடம் காகமும் ஒலிக்கும்
குளத்தினில் தாமரை மலரும் (சோ

இல்லாதவன் தனிகன் மற்றும்
இழிகுல முயர் குல மென்ற
பொல்லாத பேதங்க ளெரியப்
புவியை யணைத்துக் காயும் அரிய (சோ

வன்ன மலைகள் உடல் மறைத்து
வண்ணம் வழியும் பனிப் போர்வை
தன்னை களையும் ஒளி வெள்ளம்
தண்டமிழ் முருகேசன் விள்ளும் (சோ

இராகம்: சிந்துபைரவி தாளம்: ஆதி

பல்லவி

வேண்டாமே இன்னும் உறக்கம்
கண்ணிணை விழித்தெழு மனமே (வே

அநுபல்லவி

கூண்டுறை பறவைகள் விழித்தே
குதூகல மாகப் பண் ணிசைத்தே
தூண்டுவ தறிந்துனக் கின்னும் மனமே
சுறுசுறுப் பில்லையோ தினமே (வே

தொகை

காலை விழிப்பின் குணம் ஆயுள்விருத்தி
கண்ணியம் மன அமைதி திண்ணியம் சித்தி
சாலவும் தெளிவுறும் மேலான புத்தி
சாந்தமும் உடல்வளமும் வாய்ந்திடும் சக்தி (வே

பாட்டு

சாற்று திதை அறிவாயே
சந்ததம் கடைப் பிடிப்பாயே
ஏற்ற நல்வாழ்விற்கிது முதல் பழக்கம்
இன்கவி முருகேசன் கண்டு உரைக்கும் (வே

மஞ்சள் மகத்துவம்

தோற்றமிக விழிக்குநல்ல ஏ்ருந்த ளிக்கும்!
சுத்தஞ்செயும் ரத்தமதை சுகம்வ ளர்க்கும்!
ஆற்றினிலே நீராடும் பெண்கள் பக்கம்
அணுாது முதலை; இதன் வாடை வீசும்!
நாற்றமதைத் தடுத்தின்ப மணமே சூழும்!
நாயகன்றன் மனங்கவரும்; நன்முகத்தில்
மாற்றுயர்ந்த பசும்பொன்னைப் போலி லங்கும்
மஞ்சள்தனி அழகுசெயும் மாதர் கட்கே!

சுக வழி

அகம் வாக்கும் உடற் சுத்தம் அனவரதம் ஆக்கி
அதிகாலை விழித்துமல சலமதனைப் போக்கிப்
பகற்றூக்கம் மிகப் புணர்ச்சிப் பாழும்மதுக் குடிகள்
பான்மையிலாப் புகைகுடித்தல் பலவகையும் நீக்கி
இகமீது நெய்யுருக்கி இன்பால் நீர் காய்ச்சி
ஈ மொய்த்த பொருள்தடுத்து இரவுகறி யொழித்து
சுசுக் காற்று உடற்பயிற்சி சுத்த வுடை கண்டுஞ்
சூழ் சன்னல் வீடமைத்தல் சுகவழி காண் பாயே!

அங்கந்தனைக் காலைமாலை வெயிலில்நிதம் குளித்தே
அனுதினமும் அடிக்கடிக்குச் சுத்த நீரைக் குடித்துக்
கங்குலுண்ட பின்னுலவிக் காய்கிழங்கு கீரை
கனி பருப்பு நல்லவகை கலந்துணவு உண்டு
பங்கமிகும் அசுத்தம் பல மிதிப்பதனை நீக்கப்
பாதரட்சை தானணிந்து பரவுந்தொத்து நோயார்
தங்குசலத் துறையுங் கொசு தன்பூச்சிப் புழுக்கள்
தனையொழித்தல் சுகவழியாம் தாரணியில் மாதோ!

மனங்கனிந்தே என்ற இசை

பல்லவி

சுகத்துடனே பூவில் வாழ்வோம் பல் லாண்டு

அநுபல்லவி

இகத்துறும் பொல்லாப் பிணித டுப்போம்
இன்பத் தோழிகாள்! இதையறிவீரே! (சு

சரணம்

கூட்டும் குப்பைகளைக் கொண்டுவந்து
கொட்டுவீர் குப்பை தொட்டியில்,
வீட்டெதிரில் மல மூத்ரங் கழிப்பதால்
வேதனை மிஞ்சும் தீதை யழித்து (சு

நோய்கள் நம் செய்கையால் வந்தழிக்கும்
நுண்ணறி விழந்தே கொடும்
பேய் சூனியம் இதனாலே வந்ததாய்ப்
பேதமை கொண்டோர்க் கோதி யுணர்த்தி (சு

ஈக்கள் கொசு எதிர் தங்காமலே
எங்கும் நாப் பறை சாற்றுவோம்
ஊக்கமுடன் முரு கேசன் செந்தமிழ்
ஓதரும் இன்பக் கீத முணர்ந்து (சு

கிளிக்கண்ணி இசை

பஞ்சவர்ணக்கிளியே பவளவாய் செங்கிளியே
கொஞ்சும் பசுங்கிளியே கிளியே
குணமிகத் தூது சொல்வாய் கிளியே!

கொடியப் பிணிக்குத் தோழன் கொசு ஈக்கள் மூட்டுப் பூச்சை
அடியோட ழிப்பாயடி கிளியே
ஆனந்தம் பெறுவாரடி கிளியே!

தினம் நீரிலே குளிக்க சொறி சிரங்கு வாராதடி
உணவை மூடியே வைப்பாய் கிளியே
உடைகளைத் தோய்த் துடுப்பாய் கிளியே!

வீடு தூய்மையாயிருந்தால் வீதி தூய்மையாயிருந்தால்
கேடுசூழ் வியாதி யொன்றுங் கிளியே
கிட்டவும் நெருங்காதடி கிளியே!

அவரவர் வயதிற்கேற்ப அரும்உடற் பயிற்சி செய்தால்
நவசுக வாழ்வு பெற்றுக் கிளியே
நன்மை பெறுவாரடி கிளியே!

அம்மைக் குத்திக் கொள்ளாவிடில் அம்மையெனும் வியாதி வரும்
அம்மன் குறையென்று சொல்லி கிளியே
அறிவை யிழக்காதடி கிளியே!

காற்று வெளிச்சங்கூடி கலந்துபுகாத வீட்டில்
மாற்றானாம் நோய்புகுவான் கிளியே
மனத்திலிருத்தி வாழ்வாய் கிளியே!

மண்டலத் தொண்டர் நேசன் மதுரகவி முருகேசன்
தண்டமிழ் கேட்பாயடி கிளியே
சவுக்கி யமாய் வாழ்வாயடி கிளியே!

காதல் மணக் கொலை!

பஞ்சாங்கம் பார்ப்பானைப் பொருத்தம் கேட்பார்
பையன் பெண்ணின் உடல்உள்ளப் பொருத்தம் பாரார்!
பிஞ்சைப்போல் பெண்ணிருக்கும் ஆன்ப முத்த
பெரும் பழம்போல் தானிருப்பன் பின்னும் சொல்வேன்;
அஞ்சடிக்குக் கீழிருக்கும் ஆணின் தோற்றம்
அவனைவிட உயர்ந்திருக்கும் பனைபோல் பெண்ணே!
கொஞ்சு கிள்ளை போன்றவளைக் குருட ருக்கும்
கொடுப்பரய்யோ! காதல்மணக் கொலை செய்வாரே!!

வரப்போவர் ஆண்வீட்டார் பெண்வீட் டுக்கே!
மணமகனைப் பார்க்கவரு வார்பெண் வீட்டார்!
ஒருநாளும் அத்துணைவர் நேரில் நேராய்
உளமாரக் கண்டறிய ஒன்றுஞ் செய்யார்!
இருவிழிகள் துடித்தேங்கும் கலப்ப தற்கே;
எதிர்பார்க்கும் அறிவோ தேர்ந் தெடுப்பதற்கே!
திருமணமோ கூடும்மனந் தனித்து நிற்கும்!
சிறப்பாகக் காதல் மணக் கொலை செய்வாரே!!

இயற்கை எழில்

ஆடுகின்ற மயில் நடத்தில் தென்றற் காற்றில்
அரும்மழையில் நீர்த்துளியில் எரிநெ ருப்பில்
பாடுகின்ற குயிலிசையில் அடர்பூங் காவில்
பனித்துளியில் இளஞ்சேய்கள் மழலைப் பேச்சில்
சோடுபுறா கொஞ்சுதலில் வயிரக் கற்கள்
தொட்டிரைத்தாற் போல்தோன்றும் வான மீனில்
காடதனில் பெருமலையில் காதல் வாழ்வில்
காண்போமே இயற்கையெழில் காட்சி தானே!

சீருதயச் சூரியனில் மாலை வானில்
தெளிந்தமுழு நிலவதனில் வான வில்லில்
பேரழகில் மங்கையர்தம் புன்சி ரிப்பில்
பேசுமவர் கிளிமொழியில் ஊடல் தன்னில்
நீரருவி குதித்தோடும் பெருவெள் ளத்தில்
நீலபெருங் கடலலையில் அவற்றைத் தாவும்
கார்மேகச் செறிவதனில் கவரும் மின்னில்
காண்போமே இயற்கையெழில் காட்சி தானே!!

பெண் அழகு

கன்னல்மொழி மாதருக்குக் கருங்கூந்தலே அழகு!
பொன்னிறமஞ் சளினழகு! பொட்டழகு! பூ வழகு!
பொன்னகைதம் பலவழகும் உடையழகும் புறவழகே!
புன்னகை கல்வி யொழுக்கம் போற்றும்அக வழகாமே!!

வாழ்க்கைத் துணைவர்

மனைவி

புன்னகையால் தேன்மொழியால் குளிர்ந்த நோக்கால்
பொருந்த வரவேற்றின்ப உணவு நல்கித்
தன்கணவன் குறிப்பறிந்து, மாமன் மாமி
தமரர்களை விருந்தினரை உபச ரித்து,
அன்பாக வரவுக்கும் செலவே செய்து,
அந்தந்தப் பொருளிருக்கும் இடத்தில் வைத்து

இன்பமளிக்கும் அருமருந்தைப் போன்ற வளே
இல்வாழ்க்கைத் துணைவியென இயம்ப லாமே!

கணவன்

ஆதரவாய்ப் பெற்றவராய் அனைத்துந் தானாய்
ஆடைஉண விற்சமமாய்த் தனது டம்பில்
பாதிமனை யாளெனுமெய்க் கூற்றை யோர்ந்து
பலவழியி லவளைமன மகிழச் செய்து,
ஓதரிய தாய்க்குப்பின் தார மென்றே
ஒருபொழுதும் கரவுநினைப் பின்றி தூய
காதல்கனி யெனஅவளைக் கண்ட கத்தே
களிப்பவனே கணவனெனக் கருதலாமே!

பெண்ணின் பெருமை

(அந்நிய சீமைதுணை என்ற இசை)

'பெண்மணிகளுலகக் கண்மணிகளா' மென்ற
உண்மை யுணர்ந்தாயானால் – என்றன் தோழனே
ஒன்றுங்குறை நேராதடா – என்றன் தோழனே (பெ

தாயாம் தோழி தமக்கை தங்கை நன்மந்திரியாம்
நேயப்புவியாம் பெண்ணாம் – என்றன் தோழனே
நேர்வாழ்க்கைத் துணைவியுமாம் – என்றன்தோழனே (பெ

அகில உலகியிற்கை அழகனைத்தும் திரண்டு
நிகரில்லாப் பெண்ணுருவாய் – என்றன் தோழனே
நேரினில் காணுதடா – என்றன் தோழனே (பெ

பெண் தெய்வமில்லை யென்றால் பிரபஞ்சத் தேயுறையும்
எண் ணுடலுயிரேதடா – என்றன் தோழனே
இன்பநிலை தானேதடா – என்றன் தோழனே (பெ

இன்பக் கரும்பைத் தேனை யாழன் இசையமுதை
பொன்னை முத்து மணியை – என்றன் தோழனே
போன்ற பெண் ணருமருந்தாம் – என்றன் தோழனே (பெ

பெரும் பேரறிஞர்களைப் பிரபல வீரர்களை
அருங்கவி வாணர்களை – என்றன் தோழனே
அளித்தவர் அவர்களன்றோ – என்றன் தோழனே (பெ

பூவையர் உரிமையிலே பூத்து மலர்வதுவே
ஆவலுறும் நாகரிகம் – என்றன் தோழனே
அறிந்தும் மறந்த தேனோ – என்றன் தோழனே (பெ

சீரானப் பெண்ணில்லையேல் சிறப்பேது? அன்பேது?
சோறேது? சுகமேதடா – என்றன் தோழனே
சொல்லுந் தெய்வந்தானேதடா – என்றன் தோழனே (பெ

மாதர் விடுதலையின்றி மாநில விடுதலைக்குக்
காதலே கொள்வதெல்லாம் – என்றன் தோழனே
கனவாக முடியுமடா – என்றன் தோழனே (பெ

அரிவையர் தான் வருந்த அகிலமெல்லாம் வருந்தும்
தெரியவே சொன்னானடா – என்றன் தோழனே
தேன்கவி முருகேசனே – என்றன் தோழனே (பெ

எண்ணிப் பார்!

எட்டுவேளை பத்துவேளை இனிய உணவு உண்பவன்
எல்லாபோக வாழ்விற்றுய்த்து செல்வந்தன்னிற் புரள்பவன்
கட்டிற்பஞ்சு மெத்தைமீது காலமெல்லாம் வாழ்பவன்
கால்பிடிக்கக் கைபிடிக்க ஆள்கள் பலகொண்டவன்
பட்டினியால் துடிப்பவனை, பலமணிகள் தானியம்
பாரிற்கண் டளிக்கும் ஏழை பட்சதொழிலாளனை
"இட்டகடவுள் செயலால்நீயே யேழையாகப் பிறந்தனை!"
என்றுயேய்க்கும் கொடுமைபோக்க எழுச்சிகொள்வீர் உம்முளே!

இளங் கைம்பெண் வருந்தல்

இராகம்: சாவேரி தாளம்: ஆதி

பல்லவி

ஏனோ நானோர் பெண்ணாய்ப் பிறந்தேனே – வீணே (ஏ

அநுபல்லவி

ஞானமில்லா நயவஞ்சகர்முன் – வீணே (ஏ

சரணம்

வாசனை யில்லா மலரானேன்நான்
வாலிப தசையில் தாலி யிழந்தேன்
காசினி பழிக்கும் கைம்பெண்ணானேன்
கன்மன வைதிகர்க்குள் – வீணே (ஏ

பறக்கும் கிளியைக் கூண்டிலடைத்து
பதைக்கும் அதனைப் பார்த்து மகிழும்
இரக்கமில்லா ஈனர் நடுவே
இறவா நடைப்பிணமாய் – வீணே (ஏ

உணர்ச்சிப் பெருக்கைக் கொலையே செய்தார்
உடலைவளர்க்க உணவே அளிப்பார்
மணமார் முருகே சன்பா உணர்ந்தே
மதியே பெறுவாரோ – வீணே (ஏ

தமிழ்

(பரனடியே தினம்பணி மனமே என்ற இசை)

பல்லவி

தமிழ் மொழியே நமக்குயிர் மனமே (த
உயிர் மனமே இதை உணர் தினமே – அருந் (த

தொகை

அமுதமும் முக்கனியும் தேனும்
அரிய கரும்பின் சாறும்
கமழ் இளநீரும் பாகும் ஒன்றாகக்
கலந்த தைப் போன்ற (த

தொகை

மேனாட்டில் கீழ்நாட்டில் மற்றெல்லா நாட்டிலும்
மேன்மையுறு பசுவும் கன்றும்
தானாக 'அம்மா' வென்றே நம் தாய்மொழியில்
தனிச் சிறப்புடன் அழைக்கும் (த

தொகை

வள்ளுவன் அவ்வையார் மூவேந்தர் மடியிலும்
வளர்ந்து தவழ்ந்து உலகம்
உள்ளளவும் அழியாது மதுரகவி முருகேசன்
உள்ளொளிர்ந் தோங்கும் (த

மங்கையர் முறையீடு!

பூவுலகு தன்னிலே பெண்களை யடிமையாய்
புறக்கணித் தீர்புழுவ தாய்
புலன் பொறி பகுத்தறிவு எங்களுக் கில்லையோ?
புயபல வீரமு மில்லையோ?
"பாவ ஜென்மங்க" ளென் றீரவர்களாற் பெற்ற
பல ஆண்கள் பாவி அலவோ?
பாரினில் கணவனே தெய்வமு லையடுப்
பங்கரை மோட்ச மென்பீர்!

காவல் கற்பென்பீர்கள் நீர்மட்டும் மனம்போலக்
கண்ட பெண் பின்செல்லு வீர்!
கல்லுங் கணவன்எனப் புல்லும், புருடன் மரம்
களிமண்ணும் துணைவ னென்பீர்!
ஆவல்மிக நீர்மட்டுங் கைம்மைநிலை கொள்ளாது
அரிவையரை 'முண்டை' என்பீர்
அநியாய மினிசொல்ல லாகாது பெண் கொடுமை
ஆண்களின் நீதி யிதுவோ?

தடுப்பீர்கள் பெண்மக்கள் கல்விசொத் துரிமையைத்
          தாங்களே உயர்ந்த கல்வி
தனைப் படிப்பீர் நாங்கள் கல்விகேட் பால்மதம்
          தான் போச்சு தென்று கூறி
அடுப்பூதும் பெண்ணுக்குப் படிப்பெதற் கென்பீர்க
          ளறிவுள்ள ஆண் களுக்கே
ஆயகல்வி வியுமெதற் கென்றுயாம் கேட்டிடி
          லாந்தையென விழி விழிப்பீர்!

கொடுப்பீர்கள் தள்ளாத கிழவனுக் கிளம் பெண்ணைக்
          கொல்வீ ரவரின்ப வாழ்வை!
குறையிலா நகைகளணி விப்பீர்க ளுடலுக்கு!
          கோழையாய் செய்வீர் நெஞ்சை!
தொடுப்பீர் பொய் 'மாதரை நம்பலாகா' தென்று
          தோகையர்க ளில்லை யானால்
சோறேது? நன்மக்கட் பேறேது? உணர்ச்சிதருஞ்
          சுகமேது? உலகேது? காண்!
'திருடனென் றாலுமவன் தெய்வமாவா'னெனச்
          செப்புவீர் பொய்க் கதைகளை!
தேகமிக வழுகிய ரோகியென் றாலுமவன்
          தின்றதையுந் தின்னல் வேண்டும்!
குருடன் செவி டூமையா னாலுமவன் றனைநீக்கிக்
          கொள்ளுமண வுரிமை தாரீர்!
கோதிலாக் காதல்மணக் கலப்புமண விதவைமணக்
          குலாவலின் தூய்மை யறியீர்!

புருடர் முழு வயிறுண்பீர்! பலவேளை உண்ணுவீர்!
          பொருந்துமோ? அம்ம! அம்ம!!
பூவையரெ லாம்உண்டி சுருங்குதல் அழகென்று
          புகலுவீர், மான மின்றி!
ஒருத்திபோ தாதென்று ஒருநூறும் நாடுவீர்!
          உற்றயாம் பிறரை நோக்கின்
ஓலமிட்டு டுறுமியே கற்புபோச் சென்பீர்கள்
          ஒருபாலார்க் கொரு நீதியோ?

கள்ளத்தன மாகமுன் வினைதலை விதியினைக்
          கற்பிப்பீர், புத்தி யற்று!
கண்மணிக ளைப்போன்று பெண்மணிகளை நெஞ்சிற்
          கருதிடும் மேன்மை காணீர்!

பிள்ளைகளைப் பெறுகின்ற யந்த்ரமென வேயெண்ணிப்
பெருமிதங் கொண்டு நாளும்
பேதங்கள் வகுத்திழிவு பேசிடும் மடமையைப்
பெரிதகற் றாது போனால்!

எள்ளி நகை யாடிடும் பகுத்தறிவு வையகம்
ஏமாந்தி ராது இன்னும்
எல்லாவி தக்கொடுமை யினையடித் துக்கொண்டு
ஏகிடும் பொது வுரிமையாம்
வெள்ளத்தில் நும்மோச தந்தரஅணை நில்லாது
வீண்வாத வைதிகர் களே!
வேகமாய்க் காலசக் கரமியங் குதல்கண்டு
வியன்மதி துலக்கு வீரே!

தமிழன்னை முறையீடு!

ஆதியிலிவ் வுலகந்தனில் அனைத்திலும்நீ உயர்ந்திருந்தாய்!
பாதியிலே கீழ்விழுந்தாய், பரதேயக் கூட்டுறவால்!
பேதைநினை நான்காணப் பெற்றவயி றெரிகிறதே
ஆதலினா லினியேனும் அறிந்துணர்ந்து வாழ்வாயே!

சாரமிகுங் காவியங்கள் தனித்தமிழ் நூல்களை மறந்து
பாரதரா மாயணமே படிப்பதிலே நாட்கழித்து
கோரமிகும் வடநாட்டுக் கொள்கைகளில் ஏமாந்தாய்!
ஈரத்தமிழ் தனிமகனே! இன்றே கண்விழிப்பாயே!

பிழைக்கவந்தோர் மாளிகையில் பெரும்படிப்பில் சுகவாழ்வில்
செழிக்கநனி வாழ்கின்றார், செம்பொன்மே னியராக!
இழிநிலையில் சிறுகுடிசை யில்லத்தில் நடைப்பிணமாய்
அழியாமலகக் கண்ணில் ஆய்ந்திவற்றைப் பார்ப்பாயே!

தன்னலஅன் னியநாட்டார் தமைசாமி யெனத்துதித்தே
என்னுதரந் தனிலுதித்த இயல்ஆதி திராவிடரைச்
சின்னமதி யாற்புவியில் 'தீண்டாதா' ரெனவெறுத்தங்
கன்னவர்தம் உரிமைகளை அழித்துமதி யழிந்தாயே!

தெருவோரங் களிலெனது செல்வகுழந் தைகள் புழுவாய்
பரிதாபமாய்த் துடிக்கப் பார்த்துமன மிரங்காமல்

அரும்பாலைக் குடங் குடமாய் அறிவிழந்து சிலைக்கூற்றும்
தருமநெறி இதுதானோ? தமிழ் மகன்நீ உரைப்பாயே!

அமுதில்நஞ்சு கலந்ததைப்போல் அருந்தேனைப் போன்றதொரு
நமதரிய தமிழ்மொழியில் நஞ்சான பிறமொழியைச்
சமயமறிந் தேபுகுத்தித் தனியழகைக் கெடுத்துலகில்
மமதைகொள்ளுங் கயவர்களின் மனக்கோட்டை யிடியாதோ?

நாமம்விபூ திச்சண்டை நாலாயிரம் சாதிச்சண்டை
சாமிகளின் பிரிவுசண்டை சமயவேதச் சண்டையொடு
தீமைதருஞ் சண்டைபல செய்தரிய பழம்பெருமை
சேமதிரா விடநாட்டின் சீர்குலையச் செய்தாயே!

தொழிலாளர் துயரம்

இராகம்: புன்னாகவராளி தாளம்: ஆதி

சொல்லக் கொடுமை! நாவால் சொல்லக் கொடுமை!
தொழிலாளர் எங்களுக்கோ இல்லை உரிமை!
செல்வநிறை முதலாளிச் சீமான்களே!
சித்தமிரங்காத தேனோ பூ மான்களே!
செய்யாதீர்! செய்யாதீர்!
செகத்திலெங்கட்குத் துரோகம் செய்யாதீர்! (1)

மலையைக் குடைந்து பெருங் கற்கள் வெட்டினோம்!
மார்பு துளைத்திட மதில்கள் கட்டினோம்!
அலைகடற் செல்லும் பலக் கப்பல்கள் செய்தோம்!
ஆரண்யங்களழித்தரும் ஊர்களைச் செய்தோம்!
ஆலைகள் செய்தோம்! பாதை யமைத்தோம்
சாலையுடன் சோலைகளை மேலும் வளர்த்தோம்! (2)

நேர்த்தியான வெண்ணெய் தயிர் பால் மோரு
நீங்களுண்ணப் பாங்குடனே நாங்களளித்தோம்!
பாத்திரங்கள் பலவகை பரிந்து செய்தோம்!
பனிமழை வெயிலாலு முடல் தளர்ந்தோம்!
பலச் சீனி நல்ல வெல்லம்
இலைக்கறி காப்பி யையும் விளையச் செய்தோம்! (3)

அருமையாய் ஆடைகளை நாங்கள் வெளுத்தோம்!
அழகாக முகங்காண சவரம் செய்தோம்!
தெருக்கூட்டி யசுத்தமே சேரா தொழித்தோம்!
தேடரிய பாய்கள் பின்னிக் கூடை முடைந்தோம்!
தேனை யளித்தோம்! மீனைப் பிடித்தோம்!
தேங்கனிகள் காய் கிழங்கு நாங்களளித்தோம்! (4)

சங்கீதக் கருவிகளைப் பொங்கமாய்ச் செய்தோம்!
சரியாகக் கேணிகுளம் அரிதாய் கண்டோம்
"பங்கா" யிழுத்தோம்! படுக்க பஞ்சணை செய்தோம்!
பாசமுறு நாய் போலுங்கள் வாசலைக் காத்தோம்!
பண்ணைகள் கண்டோம்! எண்ணெய் கொடுத்தோம்!
மண்ணுக் குளிறங்கி செத்துப் பொன்னை எடுத்தோம்! (5)

பஞ்செடுத்து நூலாக்கி ஆடைகள் நெய்தோம்!
பாரிலவரை நிர்வாணமாய் நேரினிலுய்தோம்!
கஞ்சியின்றி வயிறொட்டி நாங்களிளைத்தோம்!
கலங்கலந் தானியங்கள் கண்டே அளித்தோம்!
காடு வெட்டினோம்! வீடு கட்டினோம்!
பாடுமிக மூட்டை முதுகூடே தூக்கினோம்! (6)

பண்டம் உண்டிகள் சமைத்தோம்! தோலை வெளுத்து
பாதரட்சை செய்தோம். மண்ணால் பானைகள் செய்தோம்
வண்டி யிழுத்தோம் உவர் வாரியில் மூழ்கி
வண்ண வண்ண முத்துக்களை வாரிக் கொடுத்தோம்
வல்ல யந்திரம் எல்லாம் முடித்தோம்
சொல்லு நிலக் கரியையுங் கல்லி எடுத்தோம்! (7)

சுத்தமாய் எழுத்துசெய்தே அச்சு அடித்தோம்
திகழ்பொன்னால் வெள்ளியினால் நகைகள் செய்தோம்
கத்திபீரங்கி துப்பாக்கி மொத்தம் படைத்தோம்
கனிகண்டு வெள்ளிசெம்பு நனிவெட்டினோம்
கண்ணாடி செய்தோம் காகிதஞ் செய்தோம்
எண்ஃணொணாப் பலப் பொருளை மண்மீது செய்தோம்! (8)

சேற்றினிலே புழுவென நாற்றுக்கள் நட்டோம்
செக்குமாடெனவே ரத்தம் கக்கியே விட்டோம்
ஏற்றமும் தானிறைத்தோம் ஏருமுழுதோம்
எல்லா வண்டி வாகனங்கள் நல்லதே செய்தோம்

இப்படி யுண்மை ஒப்ப விருக்க
எப்படியும் எங்கள் பழியப்பா விடுமோ? (9)

உற்றதொழி லாளர்களின் விடுதலையே
உலகை விடுதலை யென்றுண ராதோர்
பற்றில்லா யேழைக்கண்ணீர்க் கிரங்காதோர்
படுகுழி வீழ்வதன்றி வாழ்வேது
பதிமீது – பதிமீது
பைந்தமிழ் முருகேசன் பண்பாடி. (10)

பழந்தமிழ்க் கொடி

தமிழ்க் கொடியே பழந் தமிழ்க் கொடியே
தன்மதிப் பிலுயர்ந்த தமிழ்க் கொடியே
நமது உயிர் வளர்க்கும் சீவக் கொடியே
நல்லுழவு தொழிற்புகழ் மேவுங் கொடியே

இன்ப சமாதான வாழ்வின் வெள்ளைக் கொடியே
ஏரில் ரெண்டு காளைபூட்டி உள்ளக் கொடியே
அன்புறும் விடுதலைக்கு ஆன கொடியே
ஆக்கிக் காத்து அழிக்கும் ஞானக் கொடியே

நங்கையர்க்குள் ளுரிமையுறுங் கொடியே
நாகரிகத்தில் முதன்மை பெறுங் கொடியே
சங்கம் என்றென்றும் போற்றிவருங் கொடியே
சத்தருமப் பயிரைத் தருங் கொடியே

சாதிமத பேதமற்ற நீதிக் கொடியே
சமத்துவ மேயளிக்கும் போதக் கொடியே
மேதினிக்குப் பொதுவான ஆதிக் கொடியே
மெச்சு முருகேசன் இன்பக் கீதக் கொடியே.

உழவனின் உயர்வு

எல்லார்க்கும் உணவளிப்பான் உயிரளிப்பான்
இவ்வுழவன் செல்வமெலாம் ஏரும் மாடும்
கொல்லையிலோர் முருங்கைமரம் குடிசை வீடு

கூடைமுறம் வைக்கோற் போர் கயிறுஞ் சாலும்
'பல்லரிவாள்' மண்வெட்டி மற்றும் உற்றப்
பயிர்த் தொழிற்கு வேண்டும்பல சாமானோடு
செல்வமுடை யோர்மற்றோர் தங்கள் வாயால்
செப்பிடும் 'நாட்டா' னென்ற சிறப்புப் பேரே!

'நாட்டான்' செய் உழவுதொழி லில்லை யென்றால்
நானேது? நீயேது? நகரம் ஏது?
காட்டானை போலும்பு பருப்ப தேது?
கனகம் முத்து ரத்தினத்தை யாரே உண்பர்?
பாட்டாளி யிவன்ரத்த வேர்வை நீராய்ப்
பாய்ச்சிப் பயிரிட்டசீவ ரத்ன மான
மேட்டிமையாம் நெல்மணியைக் கண்ட ளிக்கும்
மெச்சும்உழ வன்தொழிலே புனிதந் தானே!

புனிதசுதந் தரவுழவு தொழிலை யன்றிப்
பூவுலகில் நம்வாழ்க்கைக் குரிய தான
மனிதன் செயும் எத்தொழிலும் இதற்கீ டாமோ?
மன்னன் செங்கோ லைத்தாங்கும் ஏரடிக்கும்
தனி சிறுகோல் தானன்றோ! ஈதொன் றின்றேல்
தனிகர்க்குளே விருந்தேது? களிப்பு மேது?
நனியுணர்ந்தால் யாவரினும் உழவன் தானே
நானிலத்தில் உயர்ந்தோனென நவில லாமே!

தீண்டாமை

(சிறைக்குள் புகுந்த மனமே என்ற இசை)

பல்லவி

தீண்டாமை வித்தியாசம் – நிறைந்ததால்
சீரழிந்ததே தேசம் – பொல்லாத

அநுபல்லவி

வேண்டாத ஆபாசம் – இதை விட
வேறில்லை முழுமோசம் – பொல்லாத

தொகை

ஆடுமாடு கழுதைப் பன்றிநாய் குடிக்கும் நீரை
    ஆறு அறிவு மக்கள்
நாடி குடித்திடவுந் தொடக்கூடாதப்படி செய்தார்
    நாயும் பூனை
ஓடும் அணில் எலி ஓணான் பறவை வௌவால் புகுங்கோயில்
    உள் உரிமை
கூடி ஒரு சமூகஞ் செல்லத் தடுத்தோரின் மிருககுணம்
    கூற வெட்கம்!

சரணத் தொடர்

கொடுமைக் குயர்ந்தக் கூட்டம் - வைதிகக்
குடுக்கை களார்ப்பாட்டம் - இதனைக்
கடுமையாய் சேர்ந்து ஒழிப்போம் - மதுரக்
கவி முருகேசன் உரைக்கும் - பொல்லாத

தாழ்ந்தவர்

ஈனசோம் பேறி உடம்பினைச் சுமந்தே
    ஏழைய ருழைப்பினைக் கவர்ந்து
மானமில் லாது வயிறுவள ர்ப்பார்
    வாழ்க்கையிற் பொதுநலங் காணார்
ஞானமில்லாத மௌடிகப் பழக்க
    நாற்றமாம் சேற்றினி லுழல்வார்
தீனருக் கிரங்கா லோபிய ரிவரே
    செகமிசை தாழ்ந்தவ ராவர்!

உயர்ந்தவர்

இனத்திமி ரழித்தார்! பொதுநலங் காண்பார்!
    ஏழையர்க் கிரங்கிடும் பண்பார்!
கனநிறை யொழுக்க நெறியினிற் பிறழார்!
    கைத்தொழில் புரிந்துயில் வாழ்வார்!
மனத்திலுந் தீமை பிறர்க்கென்றும் நினையார்!
    மக்கள்தம் இனமொன்றாய்க் கருதித்
தனக்கென வாழாப் பிறர்க்குரி யாரே
    தரணியி லுயர்ந்தவ ராவார்!

ஆதித்திராவிடர் அகம் உருகல்

(வானத்தின் மீது மயிலாடக் கண்டேன் என்ற இசை)

நீதியோ இனியும் நேர்மையோ உமக்கே
நேசரே! நீர் உரையும்!
ஆதித்திராவிடர் எங்களின் குறையை
ஓதக் கல்லுங் கரையும்!

பத்துவயது பையனும், தந்தையும்
பத்துமாதக் கர்ப்பிணி
உத்தம மனைவியும் மாடாயுழைத்தோம்
ஓய்வின்றி ராப்பகலாய்!

கோயிலைக் கட்டினோம்; குளத்தைவெட்டினோம்!
கொஞ்சமும் பயனறியோம்!
வாயிலைக் காத்தோம்! நெல்லை யறுத்தோம்!
வாரியுள்ளே சேர்த்தோம்!

மாளிகை கட்டி கொடுத்தோம் உமக்கே!
மண்ணில் படுக்கை எமக்கே!
தோளும் முரிய மூட்டை சுமந்தோம்!
துக்கம் பொங்குது உரைக்க!

எங்கள் குழந்தை மாடு மேய்க்க!
உங்கள் குழந்தை படிக்க
எங்கள் வயிறு ஒட்டியே பதைக்க
உங்களை வைத்தோம் கொழுக்க

பொங்கற் சோறு உமக்கே அளித்தோம்!
புளித்த கூழ் குடித்தோம்!
தங்க மணியை யெடுத்தே கொடுத்தோம்!
தரித்திரராய்த் துடித்தோம்!

தோலைக் கொடுத்துச் சுளையை விழுங்கி
சுகித்தீர் மக்களாக!
ஆலைக் கரும்பாய் உடலைக் கசக்கி
அலைந்தோம் நாயாக!

மங்கையர் கழுத்தில் அங்கியாய்த் திகழும்
தங்க நகைக ளேது?
எங்களின் உழைப்பால் வந்ததை மறந்து
இன்னுஞ் செய்வதோ சூது!

எங்களின் மீட்சிதான் சுய ஆட்சி
என்பதை மறவாதீர்!
சங்கங்கள் கூட்டி எங்கணும் சாற்றிச்
சமவுரிமை தருவீர்!

எங்கேயோ இருந்து வந்தோரை யெல்லாம்!
ஏத்துறீர் "சாமி" யென்று!
உங்களின் கூடப் பிறந்தவர் எம்மை
ஒதுக்குறீர் தூர நின்று!

பல கலைகளில் நல்லாற்றல் நிறைந்த
பல்லோர் எம்மிடையில்
இலகும் மணியாய் இருப்பினும் அவரை
ஏன் என்றுங் கேளீர்!

உண்பவர் நீங்கள் உழைப்பவர் நாங்கள்
ஒவ்வாதக் கொடுமை!
மண்மீதிதனை இனியும் வளர்க்க
விடவோ பெருந்தீமை!

பச்சென்றிருந்தால் கீழும் மேலும்
பார்த்தெரிவீர் மனமே!
இச்சகந் தன்னில் விலங்குகளிடத்தும்
இருக்காதிக் குணமே!

இன்னமும் எடுத்துக் கூறுவதென்றால்
இரத்தம் கொதிக்கும் ஐயே!
பன்னரும் முருகேசன் மனம் வருந்திச்
சொன்ன தெல்லாம் மெய்யே!

திருவள்ளுவர்

பண்டைத்தமிழ்ப் பேரறிஞர் மதுரை யென்னும்
பதித்தச னார்க்கும்உப கேசி யாட்கும்
மண்டலத்தே திருச் சேயாய் வந்த எங்கள்
வள்ளுவரைப் 'புலைச்சி' யென்னும் ஆதி யாளைக்
கண்டவொரு பகவனெனும் பார்ப்பான் கூடிக்
கலந்தன்றே மகவாகப் பெற்றா ரென்றே
சண்டாளர் பொய்க் கதையை எழுதி வைத்துத்
தனித்தமிழர் தமக்கிழிவைச் செய்திட்டாரே!

தலைவன்

தக்கதோ ரெளிய வாழ்க்கையும் அன்பும்
தன்னலங் கருத்துறாத் தகையும்
மிக்கதோர் பதவி பட்டத்தில் வெறுப்பும்
மேதகு ஒழுக்கமும் உழைப்பும்
துக்கமே துடைக்க எதனையுந் தியாகம்
செயும்துணி வோடின்ப மொழியும்
மக்கள்நன் மதிப்பும் சமதன்ம நோக்கும்
வாய்ந்தவனே உண்மைத் தலைவன்!

பாகனும் பகுத்தறிவுப் பையனும்

ஆனைமீ தம்பாரி போட்டுக் கொண்டு – ஓர்
அந்திப் பொழுதினிற் சாலைவழி
போனானோர் பாகனும் மாடுமேய்க்கும் – அந்தப்
பொன்ன னெனும் சின்னப் பையன் கண்டு
ஏனையா யானையின் அம்பாரியில் – போட்டு
இருக்கும் பெருஞ் சுமை யாதென் றனன்
தானியம் ஓர்பக்கம் கல்லோர் பக்கம் – பளுவு
சம எடையாக இருக்கு தென்று

சொல்லினன் பாகனும், பையன் கேட்டு – மிகச்
சோகமாய்ப் பாகன் முகம் நோக்கிப்
பல்லையிளித்துக் கலகலென்று – மிக

பரியாசமாக நகை நகைத்தே
"கல்லை நீக்கி நெல்லை மட்டுஞ்சரி – பங்கு
காண இருபக்கத்தும் அமைத்தால்
பொல்லாப்பாரம் யானைக்குங் குறையும் – பிரித்துப்
போடக் கூடாதோ முன் யோசனையாய்!"

என்று பொன்னன் அறிவு பேசினது – சினம்
யானைப் பாகனுக்கோ பொங்கினது
பன்றியே! நாயே! பொடிப் பயலே – நீதான்
பகர்வதோ புத்தி எனக் கெனவே.
கன்றுகனல் விழி வீசப் பையன் – இரு
கன்னங்கள் சிவக்க அறை கொடுத்துச்
சென்றனன் பாகனும் யானைமீதே; – பலச்
சிந்தித்தான் மனம் மேலே செல்லவில்லை.

அணிலது மரம்விட் டிறங்குதல்போல் – வெகு
அவசரமாக கீழறங்கிப் பாகன்
பணிவுடன் பையனின் கரந்தழுவி – மேலும்
பகருவான், 'பலம் பெற்றேன்; வயதும் பெற்றேன்
துணிவு பெற்றேன் நினை யடித்திடவே – மெச்சும்
சூக்கும அறிவினில் குருபானேன்
திணித்த வயதாலே பெரியோ ராகார் – அறிவில்
சிறியோரும் பெரியோராவார் புவியில்'

மன்னிக்க வேண்டும் எனைத் தம்பி நீ – செய்தேன்
மந்தமதியால் பெருந்தவறே
உன்னறிவை யென்றும் போற்றிடுவேன் – இந்த
உலகுக் கெடுத்தே உரைத்திடுவேன்
ஒதிபெருத்தாற் றூணா காதெனவே – நன்று
ஓதிய ஆன்றோர் மொழிக் கிணங்க
மதி பெருத்தார் உருவிற் சிறியரேனும் – புது
வைய வீட்டைத் தாங்கும் வைரத் தூணே!

புதுமை!

நல்லறஞ்செய் யாதவனை தரும னென்பர்!
நயனமிலாக் குருடனைக்கண் ணப்ப னென்பர்!
கல்வியிலாப் பெண்ணணைச்சரஸ் வதிதா னென்பர்!
கையில்கா சில்லாளைப் பொன்னி யென்பர்!
பல்வளமில் லாதவனை மன்ன னென்பர்!
பயங்கொண்ட கோழைதனை வீர னென்பர்!
பொல்லாத கோபிதன்னைச் சாந்த னென்பர்!
பொருத்தமிலாப் பெயரிதுவும் புதுமை தானே!!

குழந்தை!

கண்ணால் குழந்தை தனைக்காணின்
கடிதே மின்சா ரம்போன்று,
எண்ணம் அதன்பால் பாய்ந்துவிடும்;
இன்பம் அகத்தே தோய்ந்து விடும்!

மகப்பே றழியாப் பெருஞ் செல்வம்
மாசணுகாநன் மாணிக்கம்
பகைவரை நண்பர்க ளாக்கிவிடும்
பண்புறும் வாழ்வின் தனியின்பம்!

பரிதியைக் காண மரைமலரும்;
பாலரைக் காண மனம்விரியும்;
அரிதாம் அன்பைத் தாளிட்டால்
அதனைத் திறக்கும் அருங்குழவி!

தூய்மையிற் குழந்தை தும்பைப் பூ
சிரிப்பில் குழந்தை முல்லை மலர்
காய்தல் இல்லா செங்கரும்பாம்
களிப்பே யளிக்கும் அருமருந்தாம்!

கடும்பனி யோடுங் கதிர்காண
கவல் பறக்குஞ்சேய் முகநோக்க
அடிக்குந் தாய்க்குந் தரும் முத்தம்!
அருஞ்சினம் மாற்றி நகையாக்கும்!

வீட்டி லொருசேய் தவழ்ந்தினிதே
 விளையாடிவரு மெழிற் காண!
சவட்டமாய்ப் பத்துப் பேர்சவடிக்
 குதூகல விருந்துண் பதுபோலாம்!

மறைத்து வைக்குங் குணமேது?
 வாதுஞ் சூதும் புரியாது!
குறைத்து நீட்டிப் பேசிடவோ
 குழந்தை உலகம் அறியாது!

மக்கள் யாவரும் சேயானால்
 மாநிலமீது போருண்டோ?
துக்கம் பொறாமைப் பொய்யுண்டோ?
 துயர்மத சாதிப் பிரிவுண்டோ?

மின்னுஞ் சதங்கை யொலிக்கீதம்
 வீணா நாதம் சேயரற்றல்!
கன்னல் அமுதே தனித்தமிழில்
 கனிந்த மழலை நறுந்தேனே!

கண்ணின் சிறப்பு

உள்ளமதைத் தான் அளக்கும்; ஓசையின்றி
 பலபேசும்; உணர்ச்சி காட்டும்
தெள்ளியதோர் கண்ணாடி; நவரசமே
 வழியும்வழி; தீயோர் நல்லோர்
வெள்ளையென விளக்குமொளி; மக்களுறுப்
 பிற்சிறந்த முகக்கு ளத்தில்
துள்ளு கெண்டை மீனனையத் துலங்குவதே
 கண்களெனச் சொல்லுவாமே!

குழந்தை வளர்ப்பு

மாதர்பலர் குழந்தைகளைப் பெறுகின் றார்கள்!
வளர்க்கவகை யறியாமல் தவிக்கின் றார்கள்!
தீதுறுநோய் போக்கமருந் தளித்தி டாமல்
தெய்வக்குற்றம் தோஷமென்றும் மந்திர வாதி

பாதகங்களில் குழந்தைகளின் இன்னு யிரைப்
பறிக்கொடுத்துக் கதறுகின்ற தாய்மா ருக்கு
ஓதுவதொன் றுண்டாயின் குழந்தை யிவ்வா
றொழிவதிலும் மலடியென வாழ்தல் நன்றாம்!

ஐந்துகண்ணன் பேய்பூதம் என்று சாற்றி
அமுதூட்டல் போலப்பெரும் பயமும் ஊட்டிச்
சந்ததமும் குழந்தைகளைக் கோழை யாக்கித்
தரணிமிசை யவர்வாழ்வைக் குறைத்தி டாமல்
அந்தமுற உடல்வளர்க்கும் முலைப்பா லோடு
அறிவுப்பால் வீரப்பால் கலந்து ஊட்டி
முந்துபழந் தமிழ்வீர மரபு காணும்
முழுப்பொறுப்பு தாய்மார்க்கு மேலும் வேண்டும்!

பூவாரம்

மந்திரமாவது சோறு; மானத்தைக் காப்பது ஆடை
சுந்தரமாவது வீடு துதிக்கப்படுவது அன்பு
வெந்துயர் தீர்ப்பது கல்வி மேன்மையளிப்பதிங் கொழுக்கம்
சிந்தைகவர்வது தியாகம்; இந்த செகத்திலுயர்ந்த தறிவே!

உழைப்பவரே வாழ்வார்

(மீசையுள் ளாண்பிள்ளை என்ற மஸ்தான் சாய்பு பாடலிசை)

பல்லவி

வீரத்திராவிடத் தோழர்களே! - வெகு
விரைவாகவே எழுந்து வாரும்!

அநுபல்லவி

கோர வறுமையினை யழிப்போம் - நம்
குணநாட்டை வேறாகப் பிரிப்போம்
காரியத்தில் கண்ணாய்ச் சுகிப்போம் - பல
கைத்தொழில் கல்வியை வளர்ப்போம் - நம்மைக்
காட்டிக் கொடுப்பவர் வீழ்வார்! - தமிழ்
நாட்டுக்குழைப்பவர் வாழ்வார்! (வீ

சரணம்

தரையினில் தமிழரில் ஒருசில மக்களைத்
தாழ்த்துவோரை நாமும் தாழ்த்துவோம் – ஒரு
குறைவின்றி நம்நாட்டை நாம்பெறும் வரையாவும்
கூடுமானத் தியாகம் புரிகுவோம் – வீணில்
இறைவன் பேரால் செலவாக்கும் பெரும்பொருளை
ஏழையர்க் குதவிடச் சாற்றுவோம் – சற்றும்
கறையில்லா மானமே உயிரினும் மேலாகக்
கருதிச் சமத்துவம் போற்றுவோம் – நம்மைக்
காட்டிக் கொடுப்பவர் வீழ்வார்! – தமிழ்
நாட்டுக் குழைப்பவர் வாழ்வார்! (வீ

பட்டம்பதவி கட்கும் சொகுசான வாழ்வுக்கும்
பஞ்சாகப் பறப்பவர் பறக்கட்டும் – தங்கள்
இட்டம்போல் மக்களை ஏணியாகக் கொண்டு
ஏறிமேலே போவோர் போகட்டும்! – பல
மட்டிக் கொள்கைகளை மக்களிடம் கூறி
வயிறுவளர்ப்பவர் வளர்க்கட்டும் – இவர்கள்
கட்டாயம் ஓர்நாள் கணக்குக் காட்டவேண்டும்
காலம் இவர்க்கு புத்தி கற்பிக்கும் – நம்மைக்
காட்டிக் கொடுப்பவர் வீழ்வார்! – தமிழ்
நாட்டுக் குழைப்பவர் வாழ்வார்! (வீ

அறிவுக்கொவ் வாததோர் பழங்கட்டுக் கதைகளை
அக்கினிக்கே இரை யாக்குவோம் – பொது
நெறிமிக்க மக்கட்குப் பயன்தரும் நூல்களை
நேர்மையாய் தலைமீது தூக்குவோம் – கெட்ட
வெறிமிகும் மதசாதி நச்சு மரத்தினை
வேருடன் வெட்டியே வீழ்த்துவோம் – சகுனம்
குறிக்கும் கோழைத்தனம் வினைவிதிக் கஞ்சாமல்
குணமுருகேசன் பண் ணோக்குவோம் – நம்மைக்
காட்டிக் கொடுப்பவர் வீழ்வார்! – தமிழ்
நாட்டுக் குழைப்பவர் வாழ்வார்! (வீ

நன்றி

பணிநிலவு மிந்நூலை வடிவாய்க் காணப்
பணமுடிப்பு வழங்கியபம் பாய்தா ராவி
திணிநிலவு சமூகநல கழகங் கட்கும்
திகழாதி திராவிடஆண் பெண்க ளுக்கும்
மணிநிலவு முகவுரையும் சிறப்புப் பாவும்
மதிப்புரை நல்கிய அறிஞர் தாய்மார் கட்கும்
அணிநிலவு மென்றனுளக் கமலம் பூத்து
அலர்ந்தபெரும் நன்றிமலர் அணிந்திட் டேனே!

– ஆசிரியர்

மதுரகவிஞரோடு நான்

கவிஞர் க. வெற்றிவேந்தன்

மகாமதுரகவி வீ.வே. முருகேசபாகவதர் அவர்கள் 1964ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14ஆம் நாள் அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளன்று வில்லிவாக்கம் பேருந்து நிலையம் அருகில் உள்ள அம்பேத்கர் சிலை வளாகத்தில் அம்பேத்கர் பிறந்த நாளுக்காக அமைக்கப்பட்ட மேடையில் ஐயா அவர்கள் தலைமையுரை ஆற்றிக்கொண்டிருந்தார்கள். வேறோர் இடத்திற்கு செல்வதற்காக அந்த வழியே வந்தநான் அம்பேத்கர் அவர்களைப் பற்றி சொற்பொழிவு ஆற்றுவதைக்கண்டு, அம்பேத்கர் தொண்டனாகிய நான் அய்யா அவர்களின் சொற்பொழிவு என் இதயத்தை ஈர்த்தது தூய செந்தமிழில். அய்யா அவர்கள் தலைமையுரையை முழுவதுமாகக் கேட்ட பின்பு அங்கிருந்து நான் போகவேண்டிய இடத்திற்கு போய் விட்டேன். பிறகு இல்லம் திரும்பியதும் அய்யா அவர்களின் விலாசத்தை அறிந்து கொண்டு அன்றைய தினமே வில்லிவாக்கத்தில் சென்னை திருவள்ளூர் நெடுஞ் சாலையில் (எம்.டி.எச்.ரோடு) உள்ள அவரது இல்லத்திற்கு சென்று மாலைமணி ஐந்திருக்கும் அந்த அளவில் அவரை சந்திக்கும் வாய்ப்பினைப் பெற்றேன்.

அந்த நாட்களில் சிறுசிறுகவிதைகள் எழுதுவதில் ஆர்வம் கொண்டிருந்த நான் - எழுத்து வடிவில் தாளில் எழுதி வைத்திருந்த கவிதை களில் ஒருசிலவற்றைக் காட்டி அவரிடம் திருத்திக் கொள்ளலாம் என்று சென்றேன். நான் அவரைப் பார்க்க சென்ற நேரம் அய்யா அவர்களும் இருக்கையில் அமர்ந்துகொண்டு ஆழ்ந்த சிந்தனையுடன் குனிந்த தலை நிமிராமல் ஏதோ எழுதிக் கொண்டிருந்தார் அவரை தொந்தரவு செய்யாமல் பார்க்கவேண்டும் பேசவேண்டும் என விரும்பி அவர்முன் அமைதியாக நின்றேன். ஏன் என்றால் அவருடைய ஆழ்ந்த சிந்தனைக்கு இடையூறு வந்திடாமல் இருக்க போய் நின்ற உடனேயே ஐயா வணக்கம் என்றால் அவருடைய சிந்தனை சிறகு களைந்து விடுமோ என்ற பயத்தில் அதற்காகவே அமைதியாக இருந்தேன். இரண்டு மூன்று நிமிடங்கள் ஆகியும் அவருடைய சிந்தனை களையாமல் ஊன்றிய கவனத்துடன் எழுதுவதில் ஆர்வம் காட்டி எழுதிக் கொண்டிருந்தார்.

பிறகு, அய்யா' வணக்கம் என்றேன். உடனே எழுதுவதை நிறுத்தி விட்டு நிமிர்ந்து பார்த்தார் - அவர் முன்னே நான் புன்முறுவல் பூத்த

முகத்துடன் எங்கிருந்து நீங்க? என்று பொலிவுடன் கேட்டார். உடனே நான் என் விலாசத்தை சொல்லி தாந்தோன்றியம்மன் கோவில்தெருவி லிருந்து வருகிறேன் என்றேன். நாற்காலியைக் காட்டி அமருங்க தம்பி என்றார். உடனே நாற்காலியில் அமராமல் சற்று தயங்கி நின்றேன் மரியாதை நிமித்தமாக. மீண்டும் பரவாயில்லை அமருங்கள் என்றார். நான் மீண்டும் ஒருமுறை இருகைகூப்பி வணக்கம் கூறிவிட்டு நாற்காலியில் அமர்ந்தேன். என் வீட்டிற்குப் பக்கத்து தெருவில் தானே வசிக்கிறீங்க என்று நீங்கள் யார்மகன், உங்கள் தகப்பனார் தாயார் பெயர் என்ன என்று கேட்டார். ஐயா நான் என் தமக்கை வீட்டில் இருக்கிறேன். என் சொந்த ஊர் செங்குன்றம் அடுத்தவடகரையெனும் கிராமம் என்று சொல்லி - என் தகப்பனார் பெயர். கங்காதரன், தாயார் பெயர் க. பட்டம்மாள் என்றேன்.

தம்பி நீ பிறந்த ஊரான வடகரையில் நிறைய கால்வாய்க்கள் உண்டு எந்நேரமும் வாய்க்கால்களில் தண்ணீர் ஓடிக்கொண்டே தான் இருக்கும். ஒருதெருவிலிருந்து மற்றொரு தெருவிற்கு போகவேண்டுமானால் வேட்டியைத் தூக்கிகட்டிக் கொண்டுதான் போகவேண்டும். அவருக்கு என்ன ஆயிற்றே தெரியவில்லை மீண்டும் ஒருமுறை உங்க அப்பா பேர் என்ன சொன்னே என்று கேட்டார். நான், கங்காதரன் என்றேன். உயரமா இருப்பாரா - மாடு கன்று வைத்திருப்பவர் தானே என்றார். ஆமாம் ஐயா என்றேன். நீ பிறந்த ஊரிலேயே என்னுடைய மாணாக்கர்கள் இருக்கின்றார்கள் என்றார். உங்க அப்பாகூட என் மாணவர்தான் அவரை நாடகத்தில் நடிக்கவைத்தேன். நன்றாகப் பாடுவார் என்றார்.

உங்க ஊரில் இராமாநுஜம் என்பவர் ஒருவர் இருந்தார். அவரும் என் மாணவர்தான். நன்றாய் பாடக்கூடியவர். கோவலனாக நடிப்பதற்கு அரும்பாடுபட்டு அவரைத் தயார் செய்தேன். கோவலன் வேடத்தில் பிரமாத மாகப் பாடி ஆடி நடிக்கக் கூடியவர். அவரைத் தெரியுமா என்றார். ஐயா நீங்கள் சொல்கின்றவர் எனக்கு உறவுக்காரர்தான் என்று பணிவன்புடனே சொன்னேன். என்ன வேலையா வந்தீங்க என்று கேட்டார்.

ஐயா இன்று நடைப்பெற்ற அம்பேத்கர் பிறந்த நாள் விழாவிலே நீங்கள் சொற்பொழி ஆற்றிக்கொண்டிருந்தீர்கள் - அந்த நேரம் பார்த்து நான் வேறோர் இடத்திற்குச் செல்வதற்காக அந்தவழியே வந்தேன். அம்பேத்கர் பற்றி கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருந்தீர்கள். நான் ஒரு அம்பேத்கர் தொண்டன் உங்களுடைய ஆழமான கருத்துக்கள் நிறைந்த சொற்பொழிவானது என் உள்ளத்தை நெகிழவைத்தது. அதனால் நீங்கள் பேசி முடியும் வரை இருந்துகேட்டுவிட்டு பிறகு என்வேலையைப் பார்க்க சென்றுவிட்டேன். அதன்பிறகு உங்களைப் பற்றி விசாரித்தேன். அப்போது தான் வில்லிவாக்கம் இராஜமங்களத்தைச் சேர்ந்தவர் இராகவன் என்பவர் தென்னக இரயில்வேயில் பணிபுரிந்து கொண்டிருப்பவர் அவரிடம்

கேட்டேன் உங்கள் பெயரைச் சொல்லிக்கேட்டேன். விசாரித்தேன். அப்போதுதான் அவர் சொன்னார் தம்பி! அவர் பெரிய வித்வான், காலட்சேபம் செய்வதில் புகழ்பெற்று விளங்குபவர் சிறந்த கவிஞர், நாடக ஆசிரியர் இனிமையாக எல்லா இராகங்களிலும் பாடக்கூடியவர் அவருக்கு மாணவர் பட்டாளம் ஏராளமானோர் உள்ளனர் என்றார். அவருடைய மாணவர்களில் பேரும் புகழும் பெற்றவர்களில் குறிப்பாகச் சொல்லக்கூடியவர் ஆசுகவி அண்ணாமலை சாமி என்பவர், புரசைவாக்கம் வேணுகோபால் என்பவர், மேடைப்பாடகர் பி. ரங்கநாதன் வியாசர்பாடியைச் சேர்ந்தவர்கள் இவ்வாறு நிறையபேர் உள்ளனர் என்றார். வியாசர்பாடியில் சிங்காரசடையப்பன், வியாசர்பாடி கே.ஜி. நேசன், அருநம்பி போன்றோர்கள் மாணாக்கர்கள் அவருக்கு என்றார்.

ஐயா உங்களைப்பற்றி விசாரித்ததில் இவ்வாறு அவர் சொன்னார் என்றேன். அதனால் இவ்வளவு பெரியவரை நாம் சந்திக்காமல் இருக்கின்றாமே என நினைத்து - பக்கத்து தெருவிலேயே இருந்து கொண்டு உங்களைப் பற்றி தெரிந்துக்கொள்ளாமல் இருந்து இருக்கிறேன். நீங்கள் அம்பேத்கர் பிறந்தநாள் விழாவிலே பேசிய சொற்பொழிவைக்கேட்டு உங்களைப் பற்றி தெரிந்துக்கொள்ள விசாரித்ததில் உங்கள் சிறப்பு என்ன உங்களது தகுதி, திறமை என்பதனைத் தெரிந்துக் கொண்டேன். ஐயா என்று மீண்டும் ஒருமுறை சொன்னேன். அதனால் உங்களை சந்திக்கவந்தேன் என்று கூறி நான் எழுதி வைத்திருந்த கவிதைகள் அடங்கிய தாளை அவரிடம் நீட்டினேன்.

என்கையில் இருந்த தாளை வாங்கி படித்துப்பார்த்தார். என்ன எழுதியிருக்கே! என்று ஆச்சரியமாக கேட்டார். ஐயா ஒருசில தலைப்புக் களில் கவிதை மாதிரி எழுதியுள்ளேன் கொஞ்சம் தயவு பண்ணி திருத்தி கொடுத்தீங்கன்னா நல்லா இருக்கும் என்றேன். உடனே அவர் நீங்கள் எழுதியுள்ளது வசனகவிதை நடைமாதிரி இருக்கு, இது கவிதையிலும் சேராது, புதுகவிதையிலும் சேராது என்றார். மொத்தத்தில் இதுகவிதையே அல்ல என்று ஆணித்தரமாகக் கூறிவிட்டார். தம்பி! கவிதை எழுத வேண்டுமானால் தமிழில் உள்ள இலக்கண இலக்கிய நூல்கள் படிக்க வேண்டும். அப்போது தான் கவிதை எழுத முடியும் - அப்போதுதான் கவிதை என்பது சரியாக அமையும். நீங்கள் நினைத்ததையெல்லாம் எழுதி விட்டு கவிதை என்று சொல்லக்கூடாது. முறைப்படி தமிழ்இலக்கணம் படிக்கவேண்டும். கவிதை நூல்கள் படிக்க வேண்டும். அப்போதுதான் கவிதை எழுதவரும் என்றார். எனக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை புரியவில்லை. இஞ்சி தின்ன குரங்கு மாதிரி தலையைச் சாய்த்து குனிந்த வண்ணம் அமர்ந்திருந்தேன்.

தம்பி கவலைப்படாதீங்க - நான் இருக்கேன். என்கிட்டே தமிழ் இருக்கு - தினம் ஒருமணிநேரம் மாலைநேரத்தில் வந்து போங்க. இலக்கணம்

எப்படி படிக்க வேண்டும் - அதை எவ்வாறு கையாள வேண்டும் என்றும் முதலில் உங்களுக்குச் சொல்லிக்கொடுக்கிறேன். அதற்கான பயிற்சியும் தருகிறேன். அதையெல்லாம் செய்து வந்தீர்களானால், இலக்கணம் கற்றுக்கொண்டு நீங்களும் கவிதைப்படைக்கலாம் - கவிஞராகலாம் என்று சிரித்த முகத்துடன் சொன்னார். நான் சற்று பயந்த சுபாவம் உள்ளவன் அதனாலே முதலில் பயந்து போனேன். என்ன இப்படி சொல்லி விட்டாரே என்று என் உள்மனத்திற்குள் ஆதங்கமாக இருந்தது. இருந்தாலும் ஐயா அவர்கள் எதற்கும் பயப்படவேண்டாம் என்று சொல்லி எனக்கு தைரியமும் உற்சாகமும் ஊட்டினார். ஏன் திட்டி தீர்ப்பார் என நினைத்தேன், நல்ல வேளை அய்யா அவர்கள் என்னை அரவணைத்து எனக்கு நல் ஆதரவு தந்தார்.

அதன் பிறகு சரிங்க ஐயா என்று அவர்தம் திருபாதத்தில் விழுந்து வணங்கினேன். என்னை ஆசீர்வதித்தார் - என்னைத் தூக்கிவிட்டார். என் உள்மனது சொன்னது நல்ல இடத்தில் தாம் வந்திருக்கிறோம் என்று என் உள்ளம் மீண்டும் என்னைத் தலைநிமிர்ந்து நிற்கவைத்தது. தமிழை நன்றாகக் கற்றுக்கொள் தமிழன்னை உன்னுடனே என்றும் இருப்பாள் என்று என்தோள் மீது கைவைத்து என்னைத் தட்டிக்கொடுத்த புண்ணியவான் அவர்.

ஐயா அவர்கள் அமர்ந்திருக்கும் நாற்காலிக்குப் பின்புறம் அவற்றில் ஐயன்திருவள்ளுவரின் முழுஅளவிலான உருவநிழற்படம் ஒன்று மாட்டப் பட்டிருந்தது. அதற்குக் கீழே பக்கத்தில் இரண்டு மூன்று பீரோக்கள் இருந்தன. திரும்பிப் பார்த்து ஒரு பீரோவைத் திறந்து ஒரு சந்தனமாலையும் - மிக விலையுர்ந்த பட்டாலானப் பொன்னாடையும் எடுத்து மேசைமீது வைத்தார். அந்தப் பொன்னாடையையும், சந்தனமாலையையும் காட்டி இவைகள் பம்பாய் தாராவியில் வாழ்கின்ற தமிழ்ப்பெருமக்கள் என்னைத் தாராவிக்கு அழைத்து என் திறமையையும் - தொண்டையும் பாராட்டி எனக்கு மரியாதைச் செலுத்தினார்கள் என்று கூறிக்கொண்டே பொன் னாடையை எடுத்து என்மீது போர்த்தார் - பிறகு அதைத்தொடர்ந்து சந்தன மாலையையும் என்கழுத்தில் போட்டு மிகவும் மகிழ்ச்சி கொண்டார்.

என்னுடைய மகிழ்விற்கு எல்லையே இல்லை. அன்றெலாம் எனக்குத் தேனிலவு போய்வந்ததுபோல உள்ளத்தில் பூரிப்பும் மகிழ்ச்சியும் தாண்டவமாடியது போன்ற உணர்வுகளால் உந்தப்பட்டேன். அன்று ஆனந்த வெள்ளத்தில் மிதந்தது என் மனது. என்னைப் போன்று ஐயா அவர்களின் முகத்திலும் மகிழ்ச்சி துள்ளி விளையாடி முகத்தில் ஒளி தவழ்வதைக் கண்டேன். சிரித்த முகத்துடன் எளியோனாகிய என்னைக் கட்டி அணைத்து நீயும் இதுபோன்ற பாராட்டுக்களை உன்வாழ்நாளில் பெறுவாய் என்றார். இப்படியொரு பெரிய மகானை கண்டதில் மகிழ்ச்சியடைந்தேன். அதன்பிறகு என்னை அமரவைத்து அறிவுரைகள் நிறைய கூறினார்.

தம்பி தமிழுக்குத் தொண்டு செய்யுங்கள் - தமிழ் வளர்வதற்கு உங்கள் வாழ்நாளில் அரும்பாடுபடுங்கள் - தமிழ் மிகவிரைவில் அரியணையில் ஏறவேண்டும் - ஆட்சிமொழியாகவும் ஆகவேண்டும் - இதற்குத் தமிழராகிய அனைத்து மக்களும் அறிஞர் பெருமக்களும், கவிஞர் பெருமக்களும், புலவர் பெருமக்களும் ஒன்றுகூடி செயல்படவேண்டும் - தமிழராகிய நம் அனைவர்க்கும் அந்த எண்ணம் உயர்ந்து மேலோங்கி உலகத்தமிழர்கள் அனைவரும் ஒன்றுபடும் அளவிற்கு நாம் தமிழுக்காகவும் - தமிழின் வளர்ச்சிக் காகவும் உழைக்க வேண்டும் என்பதனை இந்த நேரத்தில் கூறிக்கொள்ளு கிறேன் என்று மேடையில் சொற்பொழிவு ஆற்றுவதைப்போல எனக்குத் தமிழ் உணர்வு வருவதற்காகவே அவ்வாறு அறிவுரை நிகழ்த்தினார்.

ஐயா அவர்கள் அத்துடன் நிற்காமல் மேலும் கூறினார், 'என்னைப் பொருத்தவரை தமிழை விலைமதிப்பற்ற என் உயிராகவும் - என் உயிரினும் மேலாகவும்' கருதி உண்ணுகிறேன், உறங்குகிறேன் தமிழாகவே வாழ்ந்து கொண்டு இருக்கிறேன் என்று ஆணித்தரமாக எடுத்துக் கூறினார். தமிழ் ஆட்சிமொழியாக அமைந்து 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்ற நிலை உயர்ந்து உலகமெங்கும் வாழ்கின்ற தமிழ்நெஞ்சங்களின் ஊனுடலிலும் உயிரிலும் ஒளிவீசவேண்டும் எனநாளும் பிரார்த்தனை செய்கிறேன் என்றார். பிறமொழிகளின் ஆதிக்கத்தை நம்மீது திணிக்காமல் இருக்க நாம் விழிப்போடு இருந்து தடுத்து நிறுத்த வேண்டும் - அதற்காக ஓங்கி குரல் எழுப்பனும் தயக்கம் காட்டுதல் கூடாதென்று கூறினார். வேற்றுமொழியான இந்தி திணிப்பைக் கட்டாயக்கல்வியாக ஆக்குவதை எதிர்த்துதான் ஆகவேண்டும் என்றார். இவ்வளவு பெரிய அறிவுரையை அவர் எனக்குச் சொன்ன போது மீண்டும் ஒருமுறை அவர்பாதம் தொட்டு வணங்கினேன், என் தலைமீது அவர் கரத்தை வைத்து வாழ்த்தினார். இவ்வாறு தான் ஐயா மாமதுரகவிஞருடன் எனது முதல் சந்திப்பு நிகழ்ந்தது.

2

உலக அரங்கில் தமிழ் இலக்கியத்திற்கும் தமிழ்ப்புலமைக்கும் பேரும் புகழும் தேடித்தந்த புலவர் பெருமக்கள் - கவிஞர் பெருமக்கள் அறிஞர் பெருமக்கள் பல்லோராவர். அப்பேர்பெற்றபெருமக்களில் ஒருவராகத் திகழ்ந்தவர் 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றி 20ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து மறைந்த மாமதுரகவி வீ.வே. முருகேச பாகவதரும் ஒருவராவார்.

கவிமணி தேசியவிநாயகம்பிள்ளை, மகாகவி பாரதியார், பாவேந்தர் பாரதிதாசன், நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை, தமிழ்த்தென்றல் திரு.வி.க. ஆகியோர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவர் என்பது ஒருசிறப்பு அம்சமாகும்.

தமிழைத் தம் உயிராய் நினைத்தும் - தமிழுக்காகவும் தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும் - சமுதாயத்தில் அடிமட்டத்தில் புழுவெனத்துடித்து - தாழ்த்தப்பட்டும் ஒடுக்கப்பட்டும், வாழ்க்கையில் எவ்வாறு வாழ வேண்டும் என்று வாழ்வதற்கு வழிதெரியாமல் தறிகெட்டும் நெறிகெட்டும் வாடி நிற்கின்ற ஏழை எளிய பாட்டாளி மக்களின் நல்வாழ்விற்காகவும் - அவர்தம் முன்னேற்ற வளர்ச்சிக்காகவும் தம் வாழ்நாள் முழுவதும் அயறாது உழைத்தவர். தமது அருந்தமிழ்த் தொண்டாலும் - அருந்தமிழ்க்கலையாலும் மாபெரும் மாணவர் பட்டாளத்தை எழுச்சியுடனும் விழிப்புணர்வுடனும் உருவாக்கியவர் மதுரகவிஞராவார். அரசியல் - கலை - இலக்கியம் இயல், இசை, நாடகம் ஆகியவற்றின் மூலம் தமிழ்ச் சமுதாயத்திற்கும் - தமிழ்ச்சமுதாய முன்னேற்றத்திற்கும் அரும்பெரும் தொண்டாற்றி அனைத்துத் தரப்பு மக்களால் போற்றிப் பாராட்டப் பெற்றவர். மகாமதுரகவியென்னும் வீ.வே. முருகேசபாகவதர் ஒரு வரலாறாய் வாழ்ந்து மறைந்த பெருமகனாவார்.

தன்னுள்ளத்தில் தோன்றும் கருத்துகளை எவர்க்கும் அஞ்சாமல் வீரத்தோடும் விவேகத்தோடும் துணிச்சலோடும் எடுத்துரைக்கும் அஞ்சா நெஞ்சங்கொண்ட ஆற்றல்மிக்கவர். எழுத்து, பேச்சு, இன்னிசை, நடிப்பு - நாடகம் அமைத்தல் மற்றும் கதாகாலட்சேபம் மூலம் அறிய நல்கருத்துகளையும் - தத்துவ விளக்கங்களையும் வாரிவழங்கிய வள்ளலாவார். அவருடைய காலட்சேபம் முதற்பகுதியானது சமயம் சார்ந்ததாகவும் - பிற்பகுதி சீர்திருத்தும் பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்பக் கூடியதாகவும் - மூடப்பழக்கத்தை முறியடித்து அதை முற்றும் ஒழிக்கக்கூடியதாகவும் அமைந்திருந்தது. மகாமதுரகவிஞர் பன்னூல் ஆசிரியர் - திங்கள் இதழ் ஆசிரியர் - நாடக ஆசிரியர் - சிறந்த சொற்பொழிவாளர் இவ்வாறு பன்முக ஆற்றல் பெற்றவர். காலநேரத்தைப் பொன்போன்று கருதுபவர். யாரேனும் அவர் சொன்ன நேரத்திற்கு வராமல் காலந்தவறி வருபவர்களிடம் கொஞ்சம் கோபமாகப் பேசவும் செய்வார். காலநேரத்தைக் கொலை செய்யாதீர்கள் என்று என் கண்முன்பே எத்தனையோ பேரைக் கடுமையாகப் பேசிடுவார். கடுமையாக பேசினாலும் அடுத்த நிமிடமே அவர்களை அரவணைக்கும் பண்பினையும் பெற்றுள்ளார். உங்கள் நலத்திற்குதானே சொல்கிறேன். நேரம் தவறி வராமல் குறித்த நேரத்தில் வாருங்கள் என்பார். எந்த நேரமும் அதற்காக தேசத் தந்தை காந்திஜியை உதாரணம் சொல்லுவார்.

3

வளரும் கவிஞர்களுக்கு அவர் அடிக்கடி கூறிய அறிவுரைகள்

கண்ணை இமைகள் காப்பதுபோல நமது தாய் மொழியாம் அன்னை மொழிக்கு அழிவுவராமல் அரண்போல் காத்து நின்று அருந்தமிழ்க்குத் தொண்டாற்றவேண்டும்.

தாய்மொழி தமிழ் இருக்க அன்னியர் மொழி மீது மோகம் கொள்ளாமல் தமிழை முதன்மொழியாக எடுத்துப்படிக்க வேண்டும்.

தமிழர் பண்பாட்டை சீர்கலையாமல் பார்க்கவேண்டும். பொதுவாக வாழ்க்கை நெறிமுறையானது தமிழர்ப் பண்பாட்டைச் சார்ந்தே இருக்க வேண்டும் என்றும் அதன்படியே நடக்கவும் செய்ய வேண்டும் என்றும் நாளும் பிரச்சாரம் போல் யாருக்கேனும் ஒருவர்க்காகிலும் ஓதிக்கொண்டே இரப்பார்.

பொதுவாக அவர் பேசும் மேடைதோறும் எந்தவகையான மேடையாய் இருந்தாலும் தமிழை உயிராய் எண்ணவேண்டும் - தமிழே மூச்சாகவும் பேச்சாகவும் வாழவேண்டும். அன்னியமொழிகள் கட்டாயக் கல்வியாகத் திணிப்பவர்கள் / யாராய் இருந்தாலும் அவர்களுக்கு நம்முடைய எதிர்ப்பினை ஒட்டுமொத்தமாகப் தெரிவிக்க வேண்டும். இதில் சாதி, சமய, அரசியல் வேறுபாடுகளைக் காட்டுதல் கூடாது. அவ்வாறு ஒரு நிர்ப்பந்தம் வரும்போது அதை எதிர்த்துப் போராட வேண்டும் என்பார்.

திருக்குறளும் தொல்காப்பியமும் ஒவ்வொரு தமிழன் இல்லத்திலும் இருக்கவேண்டும் அதைப்படிக்க வேண்டும் என்பார்.

தமிழில் வந்துள்ள அத்துணை நீதிநூல்களையும் படிக்கவேண்டும். படித்ததை மற்றவர்களுக்கும் சொல்லித்தரவேண்டும். ஒவ்வொரு இலக்கியவாதியும் கட்டாயம்படிக்கவேண்டும் படித்து அதன்படி நடக்கவும் செய்யவேண்டும் என்பார்., இந்திமொழியால் வரும் ஆபத்தைத் தடுத்து நம் மொழிசெம்மொழி அழியாமல் பாதுகாக்க உயிரினை ஈந்தாவது பாதுகாத்துத் தமிழைக் காக்கும் பணியில் தம்மை ஒவ்வொருவரும் ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும். இந்திமொழியைப் படிக்கவேண்டும் என்று மத்திய அரசு தூண்டுதல் விட்டோ அல்லது சட்டம் போட்டாலோ அதை எதிர்த்து அனைத்து மக்களும் போராட்டக் களத்தில் இறங்க வேண்டும் என்பார்.

வளரும் கவிஞர்களாகிய ஒவ்வொருவரும் உங்களுடைய உள்ளங் களிலேயும் - இல்லங்களிலேயும் தமிழுக்குரிய மரியாதையை எழுத்திலும், பேச்சிலும் எடுத்துக்காட்ட வேண்டும். தமிழர் பண்பாட்டினை சார்ந்தே திருமணங்கள் நடைபெறவேண்டும். வைதீக திருமணத்தை நாம் அனைவரும் கைவிடவேண்டும் என்பார். சீர்திருத்த திருமணத்தை ஆதரித்து எழுத்தும் பேச்சும் இருக்கவேண்டும் என்றும் தம் இல்லங்களில் பிறக்கும் மழலை செல்வங்களுக்குத் தமிழில் பெயர் வைக்கவேண்டும் என்பார்.

4

மகாமதுரகவிஞரின் எழுத்தாற்றலையும் - பேச்சாற்றலையும் - நடிப்பாற்றலையும் - இன்னிசைப்பொழிவையும் - தமிழ்புலமையையும்

இக்காலத் தமிழ்ச் சமூகத்திற்கு எடுத்துச் சொல்லியே ஆகவேண்டும். இதுமாணவனாகிய என்னுடைய கடமையும் கூட.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அத்துணை திறமைகளையும் நன்கு அறிந்த பின்னி ஆலை நிர்வாகம் அவரை அச்சுப்பணியில் அமர்த்தி கவிஞரைப் பெருமைப்படுத்தியது. பின்னி (B. C Mill) ஆலையில் பணியில் சேர்ந்ததும் உணவு இடைவேளை நேரத்தில் நாளும் இன்னிசையுடன் பாடல்களைப் பாடுவதும், பிறகு நேரம் கிடைக்கும் போதெல்லாம் சொற்பொழிவு ஆற்றுவதும் பெரும் பணியாகவும் கொண்டிருந்தார். பின்னி ஆலையில் வேலைக்குச் சேர்ந்ததினால், பின்னி ஆலையில் தொழிற்சங்கத் தலைவராக இருந்த தமிழ்த்தென்றல் திரு.வி.க.வுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. மகாமதுரகவிஞரின் ஆழ்ந்த புலமையை அறிந்து கொண்ட முருகேசபாவதரின் இல்லம் ஏகி கவிஞரை நேரே பார்த்து மதுரகவியை வாழ்த்தி சென்றுள்ளார் திரு.வி.க. அவர்கள்.

அந்த வாழ்த்து எப்படிப்பட்டது என்று கூறுகிறார் என்றால்,

"நான் மன்னனாக இருந்தால் மதுரகவிஞருக்கு ஓர் ஊரையே மானிய மாக வழங்கிடுவேன், நான் மன்னன் இல்லை. நான் ஒரு செல்வந்தனாக இருந்தால் பொன்னாடைப் போர்த்தி மகிழ்ந்திருப்பேன், நான் செல்வந்தனு மில்லை, நான் ஒரு பணக்காரனாக இருந்தால் பணமுடிப்பு தந்து மகிழ்ந்திருப் பேன். ஆனால் நான் பணக்காரனு மில்லை. ஆனால் என்றும் அழியாத தமிழ் ஒன்றுதான் என்னிடத்தில் உள்ளது. அந்தத் தமிழால் கவிஞரைப் பாராட்டுகின்றேன் - போற்றுகின்றேன் - வாழ்த்துகிறேன் என்று திரு.வி.க. பகன்றார். கவிஞரின் இல்லத்திற்கே சென்று தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்களால் மகாமதுரகவிஞர் பாராட்டப்பட்டார் என்றால் அவருடைய தமிழ்ப் புலமையை என்னவென்று சொல்வது. அது மட்டுமல்ல இன்னு மொரு நிகழ்ச்சியையும் சுட்டிக்காட்டுகின்றார். கவிஞர் அவர்கள் பெரம்பூர் இரயில்பெட்டித் தொழிற்சாலையில் பயிற்சியாளராகப் பணியிலிருந்த போது - ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்த தொழிலாளர்களுக்குத் தண்ணீர் அருந்துவதற்குத் தனியே தகரக்குழாய் வைக்கப்பட்டிருந்ததைக் கண்டு மனங்கொதித்தார் - அந்த நிகழ்வினைச் சுட்டிக்காட்டி அதிகாரி களைக் கண்டிக்கவும் செய்தார். அதனால் அதிகாரிகளின் கோபத்திற்கு ஆளானார். கவிஞர் செய்த கருத்துப்புரட்சியால் ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் எல்லாம் விழிப்புணர்வுப்பெற்று எழுச்சி கொண்ட தனால், தனியே வைக்கப்பட்டிருந்த தகரக்குழாய் அகற்றப்பட்டு அனைத்து இனமக்களுக்கும் இனவேறுபாடின்றி ஒரேகுழாயில் தண்ணீர் அருந்த உடனே வழிவகை செய்யப்பட்டு ஒரே தண்ணீர் குழாய் என்ற நிலை உறுதி செய்யப்பட்டது. அதன்பிறகு அனைத்து இனமக்களும் இனவேறுபாடின்றி ஒரேகுழாயில் தண்ணீர் அருந்தினார்கள்.

கவிஞர் செய்த கருத்து புரட்சியால் அந்த நிகழ்வு மதுரகவிஞருக்கு வெற்றியைத் தேடித்தந்தது. 1929இல் கவிஞரது இசைப்புலமையையும் - பேச்சாற்றலையும் கேட்டறிந்து - வியந்துப் பாராட்டி மதுவிலக்குப் பிரச்சாரம் செய்ய அன்றைய அரசு சமுதாயத் தொண்டாற்ற அவரை நியமித்தது. மதுரகவிஞர் அவர்கள் பட்டிதொட்டிகளெங்கும் மற்றும் கிராமங்கள் தோறும் மதுவிலக்குப் பிரச்சாரமேடைகளில் எங்கும் முழக்கமிட்டு செவ்வெனவே சமுதாயத்தொண்டாற்றி மக்களிடத்திலே பெரும்பாராட்டையும் செல்வாக்கையும் பெற்றுத் திகழ்ந்தார்.

1929இல் அவரது கவிப்பாடும் ஆறறலைப்பாராட்டி சென்னை விக்டோரியா மண்டபத்தில் "மகாமதுரகவி" என்னும் சிறப்புப் பட்டம் தமிழக மக்களால் வழங்கப்பட்டது. மதுரகவி அவர்கள் 1932ல் அண்ணல் டாக்டர் அம்பேத்கர் சென்னை வந்தபோது அவரை சந்தித்து ஆதிதிராவிடர்களின் நலங்கருதி சந்தித்து பேசினார்.

1933ல் தேசத்தந்தை மகாத்மாகாந்தியடிகள் சென்னை வந்தகாலை நாகேசுவரராவ் பந்துலு என்பவரின் இல்லத்தில் தங்கியிருந்தபோது காந்தியடிகளை சந்தித்து தமிழ்நாட்டிலுள்ள தொல்தமிழர்களின் அன்றைய நிலைமைகளை எடுத்து விளக்கியுள்ளார்.

மும்பை தாராவியில் உள்ள தமிழர்கள் அவர்பேரில் மதுரகவிஞர் மன்றம் ஒன்று நடத்திவந்தனர். அந்த மன்றத்தின்மூலம் 1946, 1954, 1963 ஆகிய ஆண்டுகளில் அவருக்குப் பாராட்டு விழா ஒன்று நடத்தி பொற்கிழி அளித்து சந்தன மாலையுடன் பொன்னாடை, தூய பட்டால் ஆன பொன்னாடை ஒன்றைப் போர்த்தி மகிழ்ந்தார்கள்.

1964ஆம் ஆண்டு மதுரகவிஞரின் 'தமிழமுதம்' என்ற நூலுக்கு மத்திய அரசு தங்கப்பதக்கம் அளித்து சிறப்பித்தது. 1973ம் வருடம் தமிழ்வட்டம் சார்பில் நடந்த ஒருபெருவிழாவில் கவிஞருக்கு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் திருக்கரங்களால் பொன்னாடைப் போர்த்தி தங்கமோதிரம் ஒன்று அணிந்து பாராட்டப்பட்டார்.

1955, 1960, 1972ஆம் ஆண்டுகளில் சமூக நலன் கருதி இலக்கிய திங்கள் இதழ் அரண், தாயகம், மதுரகவிஞன் என்னும் இதழ்களை நடத்தித் தமிழ் வளர்ச்சிக்கும் - தமிழின்மேம்பாட்டிற்கும் அருந்தொண்டாற்றி யுள்ளார். 1970ம் ஆண்டு செங்கை மாவட்டத் தமிழ்க்கவிஞர் மன்றத்தின் தலைவராகச் சிறப்பாகப் பணியாற்றி அந்நாளைய கவிஞர் பெருமக்களை வழிநடத்தி சென்றார்.

மேலே குறிப்பிட்டுள்ள அத்தனை நிகழ்வுகளையும் இன்றையத் தமிழ்ச்சமுகம் தெரிந்துகொள்ளவேண்டும், புரிந்துகொள்ளவேண்டும் என்றும் - அறிந்து கொள்ளவேண்டும். அவர் காலத்தில் வாழ்ந்த தலைவர்கள் எல்லாருமே கட்சி வேறுபாடின்றி மதுரகவிஞர் அவர்களுக்கு நண்பராய்

இருந்தனர் என்பது உண்மை. மேலே இதுவரை சொல்லப்பட்டவை அனைத்தும் மாணவனாகிய எனக்கு ஐயா அவர்கள் சொன்னதாகும். இன்றையத் தமிழ் சமுகத்தினர் அனைவரும் அவர்தம் வாழ்க்கை வரலாற்றைப் படிக்க வேண்டும் இல்லை என்றால் அவர் யார் என்பதே தெரியாமல் போய்விடும் - அவர் ஆற்றிய மக்கள் தொண்டும் யாரும் அறியாமலும் தெரியாமலும் போய்விடும். அவர் ஒருவரலாற்று நாயகராய் வாழ்ந்து மறைந்தார் என்பதுதான் உண்மை.

5

மதுரகவிஞர் அவர்களுக்கு அரசியல், நாடகம், இன்னிசை, இலக்கியம், நாடகக்கலை போன்றவற்றில் எண்ணற்ற மாணாக்கர்களை நெறிப்படுத்திய ஆசானாகவும் சிறந்த நல்வழிகாட்டியாகவும் திகழ்ந்தார். அந்த எண்ணற்ற மாணவக்கண்மணிகளில் க. வெற்றி வேந்தனாகிய நானும் ஒருவன் என்பதை மிகவும் பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவருடைய மாணவர்களில் மிகவும் புகழ் பெற்றவர்கள் மதுரகவி வே. மு. எழிலிறைவன் - புரசைவாக்கம் வேணுகோபால் பாகவதர் - வில்லிவாக்கம் பரமாநந்தபாகவதர் அந்த நாட்களில் முருகேசபாகவதருடன் மேடையெங்கும் கவிதை முழக்கம் செய்த ஆசுகவி அண்ணாமலைசாமி, அவருடைய இசைப்பாக்களை மேடையெங்கும் முழங்கிவந்த வியாசர்பாடி பி. அரங்கநாதன் - கே.ஜி. நேசன் - சிங்கார சடையப்பன் - அருள்நம்பி - வடகரை இராமானுசம் - எல்ல. கங்காதரன் முதலானோர் ஆவார்கள். எனக்கு தெரிந்தவரை கூறியுள்ளேன். எனக்கு தெரியாத மாணவர் பட்டாளத்தின் பெயர்களும் நிரம்ப உண்டு. கிட்டதட்ட எல்லா மாவட்டங்களிலும் அவருக்கு மாணாக்கர்கள் உண்டு.

6

அவர் முதன் முதலில் சமயம் சார்ந்த பக்திமார்க்கத்தை முன்வைத்து புராணகால கதைகளை வைத்துக்கொண்டு காலட்சேபம் செய்துள்ளார். குறிப்பாக அவர் செய்தவைகளில் பக்தமார் கண்டே யாவும் - முருகப் பெருமான் வள்ளி போன்றவைகளும் மிகவும் சிறப்பு வாய்ந்ததாக அமைந்திருந்தது. மிகவும் நகைச்சுவைத் ததும்ப பேசுவார், எழுதுவார். பிறகு அவர் திராவிட இயக்கத்தில் சேர்ந்து தந்தை பெரியாரின் சுயமரியாதை கருத்துகளையும் - சீர்திருத்தம் - பகுத்தறிவு சம்மந்தப்பட்ட தலைப்புகளில் கதாகாலட்சேபம் செய்துள்ளார். அந்த நாட்களில் நாட்டைச் சீரழித்துக் கொண்டிருக்கும் மூடப்பழக்கத்தை வேரோடொழிக்க தன் கதாகாலட்சேபத்தை மாற்றி அமைத்துக் கொண்டு காலட்சேபம் செய்திருக்கிறார். அதன்பிறகு நாட்டு

விடுதலைக்குப் பாடுபட்ட தலைவர்கள் பற்றி வாழ்க்கை வரலாற்றைச் சொல்லும் முகமான காலட்சேபம் செய்வார்.

1929ல் அன்றைய அரசு மதுவிலக்கு பிரச்சாரம் செய்ய அவரை நியமித்த நாளிலிருந்து காங்கிரஸ் ஆட்சி அமையும் வரைக்கும் - பிறகு காங்கிரஸ் ஆட்சியிலும் அதே பிரச்சாரம் தொடங்கி செய்ததினால் அவரை காங்கிரஸ்காரர் என்று நினைத்து கொண்டு பின்னால் வந்த திராவிட இயக்க ஆட்சியாளர்கள் அவரைக்கண்டு கொள்ளாமல் அப்படியே விட்டுவிட்டது. இவர் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தானே தொண்டு செய்தார். அதனால் மற்ற சமூகத்தினர் ஆட்சிக்கு வந்தபிறகு அவரைக்கண்டு கொள்ளாமல் விட்டிருக்கலாம். மதுரகவிஞரின் நூல்களைச் சேகரித்துத் தொகுப்பாக வெளியிடும் பேராசிரியர் முனைவர் க. ஜெயபாலன் அவர்களின் பணிபாராட்டத்தக்கது அவர் இதுபோன்று மேலும் பல தொகுதிகள் வெளியிடவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் நிலாசூரியன் பதிப்பகத்தின் முனைவர் கெ. இரவிக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

7

மதுரகவிஞரின் வரலாற்றை எழுதிக்கொண்டிருக்கிறேன். விரைவில் நூல்வெளியிடும் நாளை அறிவிப்பேன். குடும்பச்சூழ் நிலைகள் காரணமாகவும் - உடல்நிலை சுகவீனம்படுவதாலும் தாமதம் ஆகிக்கொண்டே போகிறது. ஆனால் மதுரகவிஞரின் வாழ்க்கை வரலாறு வெளிவருவது உறுதி என்பதனைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இப்படிக்கு
க. வெற்றிவேந்தன்
3973 டாக்டர் அம்பேத்கர் நகர்,
சாவடி மேடு, கிராண்ட் லைன்,
செங்குன்றம், சென்னை-52

பதிப்பாசிரியர் பற்றியக் குறிப்புகள்

க. ஜெயபாலன் 10.03.1974இல் ஏ. கண்ணன் - க. அலமேலு இவர்களின் இரண்டாம் மகனாக ஆத்திப்பட்டு, செஞ்சிவட்டம், விழுப்புரம் மாவட்டத்தில் பிறந்தவர். பள்ளிக்கல்வியை ஆத்திப்பட்டு, செய்யாறு, செஞ்சியில் பெற்றார்.

பி.லிட் (1995) பட்டத்தைத் தருமபுர ஆதீனம், மயிலாடுதுறையில் பெற்றார். கல்லூரிக் காலத்திலேயே கவியரங்குகளிலும், வானொலியிலும் இவர் கவிதைகள் வெளிவந்தன.

எம்.ஏ.(1997) தமிழிலக்கியப்பட்டத்தை மதுரைகாமராசர் பல்கலைக்கழகத்தில் பெற்றார். மாநில அளவில் கட்டுரைப் போட்டிகளில் முதற்பரிசுகள் பெற்றார். மொழிபெயர்ப்புச் சான்றிதழ் (Certificate Course in Translation) முடித்தார்.

திரைத்தொழில்நுட்பப் பட்டயம் (D.F.T.) 2000இல் சென்னை, தரமணியில் உள்ள அரசு திரைப்படம் & தொலைக்காட்சி நிறுவனத்தில் பெற்றார். 2000 ஆகஸ்டில் தமிழ்நாடு அரசு கல்லூரிக் கல்விப் பணியில் இணைந்த இவர் தற்போது அரசு கலைக்கல்லூரி, நந்தனம், சென்னை-35இல் தமிழ்ப்பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

முனைவர் (Ph.D.) பட்டத்தை மாநிலக்கல்லூரி மூலமாகப் பேராசிரியர் டாக்டர் ப. மகாலிங்கம் நெறிகாட்டலின் கீழ்ச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் 2007இல் பெற்றார். தற்போது முனைவர் பட்ட ஆய்வாளர்களை ஊக்குவித்து வளர்க்கும் இவர் பின்வரும் நூல்களையும் எழுதியுள்ளார்.

- மண்வாசனையும் திரைக்கலையும்
- சேக்கிழார் கவித்திறம் (தேவகோட்டை, சேக்கிழார் மன்றத்தில் மாநில அளவில் முதல் பரிசு பெற்ற கட்டுரையின் நூலாக்கம்)
  மு.வ.வும் காண்டேகரும்
  பன்முகப்பார்வையில் பட்டுக்கோட்டை (மதுரை, தியாகராசர் கல்லூரியில் நடைபெற்ற புலவர்விழாக் கட்டுரைப் போட்டியில் பரிசுபெற்ற கட்டுரையின் நூலாக்கம்)
  திரைச்சிந்தனைகள்

- தமிழர் இலக்கியப்புரட்சி
- விமர்சன வேள்வி
- பாபாசாகேப் அம்பேத்கர் காட்டும் பௌத்தம்
  பண்பாட்டுப் புரட்சியில் பௌத்தம்
  விசாகை (குறுங்காவியம்)
  அநாதபிண்டிகர் (குறுங்காவியம்)
  பௌத்தத் தமிழ் இலக்கிய வரலாறு (20ஆம் நூற்றாண்டு)
  அடித்தட்டுமக்கள் விடுதலையே அனைவருக்குமான விடுதலை

பதிப்பித்தவை, தொகுத்தவை

புத்தரும் அவர் சமயத்தின் எதிர்காலமும்
மகாமதுரகவிஞர் வீ.வே.முருகேச பாகவதர் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்களும் கவிதைகளும்
தமிழ்க்கவிஞர்கள் பார்வையில் பௌத்தம் (உதவி பெ. விஜயகுமார்)
பாபாசாகேப் அம்பேத்கரின் பௌத்த ஆக்கங்கள்
தமிழ்ப்பண்பாட்டில் பௌத்தம் (பிக்குபோதிபாலா திரு. அன்பனுடன் இணைத்தொகுப்பாசிரியர்)
புத்தரின் சீடர்களும் பௌத்தம் பரப்பிய ஞானிகளும் (பிக்கு போதிபாலா, ஓ.ரா.ந. கிருஷ்ணன், தங்கவயல் வாணிதாசன் இவர்களுடன் இணைத்தொகுப்பாசிரியர்)

பெற்றுள்ள பாராட்டுக்கள்

- "Honarable College Mention Award" 1999இல் மாணவப் பருவத்திலேயே கருத்து விளக்கப்படங்களுக்காக U.S.A. விலிருந்து சான்றிதழும் பாராட்டும் பெற்றார்.
  BLIA (புத்தர் ஒளி பன்னாட்டு அமைப்பு) 'சாதனையாளர்' விருது வழங்கியது - 2012
  இந்தியத் தமிழ்க்கவிஞர் மன்றம் "பௌத்த ஆய்வாளர்" விருது (2013)
  இதயரோஜா பதிப்பகமும் கவிதைசக்தி இயக்கமும் இணைந்து தந்த "புத்த சுடரொளி தமிழ்முரசு" விருது (2013)
  தமிழகஅரசின் ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் பாராட்டுச்சான்றும் ரூ.40,000 பரிசும் 'அடித்தட்டு மக்கள் விடுதலையே அனைவருக்குமான விடுதலை' நூலுக்கு அளிக்கப்பட்டது. 'பாலம்' வெளியிட்டது.

BLIA *2014 - சாதனையாளர் விருது*

செங்கற்பட்டு திரு. நா. வீரமணி அவர்கள் ஒருங்கிணைந்த "இரட்டைமலை சீனிவாசன் விருது" அய்யா ஆர். நல்லக்கண்ணு தலைமையில் வழங்கப்பட்டது.

"பௌத்தத் தமிழிலக்கிய வரலாறு" நூல் அறிமுகவிழாவில் ஜனவரி 2015இல் BLIA *அமைப்பும் தமிழ்நாடு பௌத்த சங்கமும் தர்மவிஜயவிகாரை மதுரையும் இணைந்து பிக்கு போதிபாலா, பிக்கு மௌரிய மெத்தபாலா தலைமையில் "மகாபண்டிதர்" விருது வழங்கப்பட்டது.*

08-02-2015 அன்றும் 07-02-2016 அன்றும் "தர்ம விஜயவிகாரை" விழாவில் மதுரை குட்லாடம்பட்டியில் அறிஞர் பிக்கு போதிபாலா அவர்கள் பௌத்தப் பணிகளுக்காக இந்நூற் தொகுப்பாசிரியரைப் பாராட்டிச் சிறப்பு செய்தார்.

இவ்வாறு தொடர்ந்து ஆய்வுப் பணிகளை கல்விப்புலம் சார்ந்தும் சாராமலும் ஆற்றி வருகிறார்.

சமுதாய சீர்திருத்தத் துறையில் நீண்ட நாட்களாக உழைத்து வரும் என் நண்பர், தோழர் வி.வி. முருகேச பாகவதர் அவர்கள் சிறந்த தமிழ்ப்பற்றும் புலமையும் கொண்டவர். அரிய பெரிய கருத்துகளை எளிய இனிய முறையில் நாட்டு மக்களுக்கு எடுத்துரைத்து மக்கள் நல்வாழ்க்கை பெறுவதற்காக பெரும் முயற்சி எடுத்துக்கொள்ளும் பண்புடையவர்.

அவர் தமது ஆழ்ந்த அனுபவத்தையும் சிறந்த கவித்திறனையும் கொண்டு 'தமிழ்ச்சோலை' என்ற நூலை வெளியிட்டிருக்கிறார். 'தமிழ்ச் சோலை'யில் அரிய கருத்துகள் கொண்ட பல மலர்கள் உள்ளன. மக்கள் எளிதில் பாடத்தக்க 'மெட்டுக்கள்' கொண்ட பாடல்களும் மற்றும் பல கவிதைகளும் கொண்ட 'தமிழ்ச் சோலை'யில் பழங்குடி மக்களின் நிலைமை பாட்டாளிகளின் துயரம், விதவைகள் விசாரம் ஆகிய பல கருத்துகளும் சமுதாய நிலைமையை விளக்கும் சிறு கவிதைக் கதைகளும் உள்ளன. இவை, மக்களுக்குப் புத்தறிவு பிறக்கவும் புது வாழ்வு பெறவும் உதவும். சிறந்த உவமைகளும் இனிய வர்ணனைகளும் கொண்டுள்ள இக்கவிதைகளைப் பெற்று தமிழர் பெரும் பயன் அடைவார்கள் என்று நம்புகிறேன்.

மூடப் பழக்க வழக்கங்கள் ஒழிந்து சாதிபேதம் நீங்கி மக்கள் புதுநிலை அடையவேண்டும் என்று பாடுபடும் சீர்திருத்தவாதி களின் வேலைக்கு இந்தக் கவிதை பெரும் துணைபுரியும். இத்தகைய நூலை மக்கள் ஆதரித்துக் கவிஞரை மேலும் மேலும் ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

- C.N. அண்ணாத்துரை M.A.
'திராவிடநாடு' ஆசிரியர்
(1946, தமிழ்ச்சோலை முகவுரையில்)

பேரா. க. ஜெயபாலன், சென்னை - நந்தனம் அரசு கலைக் கல்லூரியில் பணியாற்றி வருகிறார். இதுவரை 12க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ள இவர், 5 நூல்களைத் தொகுத்தும், இரண்டு நூல்களைப் பதிப்பித்தும் உள்ளார். சமூக மறுமலர்ச்சிக்காகப் பணியாற்றிவரும் அதே வேளையில், இளம் ஆய்வாளர்களையும் நெறிப்படுத்தி வருகிறார்.